இளந் தமிழர்

இலக்கிய வாசகம்

ஏழாம் வகுப்பு

(உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக் குரியது)

[திருத்திய பதிப்பு]

வித்வான், ஈ. பண்டார நம்பியார்

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: :: சென்னை

உரிமை பெற்றது] 1952 [விலை அணா 14

First Edition — 1951
Revised ,, — 1952

முன்னுரை

இளந் தமிழர் இலக்கிய வாசகம் என்னும் பெயர் புனைந்து வெளிவரும் இந்நூல் வரிசை, 1939-ம் ௵ புதிய பாடத்திட்ட முறையைத் தழுவித் தொகுக்கப்பெற்றுள்ளது.

இந்நூலில், உரைநடைப் பகுதியில் வகுப்புக்கு ஏற்ற முறையில் அறிஞர்கள் எழுதிய விஞ்ஞானம், வரலாறு, தொழில், சுகாதாரம், உரையாடல், இலக்கியம், நாடகம் முதலிய அறிவியல் பாடங்கள் இடம் பெற்றுள்ளன; செய்யுட் பகுதியில், பழையனவும் புதியனவுமான சுவை நிரம்பிய பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் வினாக்கள், பயிற்சி, இலக்கணம், அரும்பொருள் என்பன அளிக்கப்பட்டுள்ளன. இன்னும், மாணவர்கள் கதை எழுதுவதற்கும், கட்டுரை எழுதுவதற்கும், கடிதம் எழுதுவதற்கும் பயிற்சி பெறுவதற்கான சில பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலைக் கற்கும் இளந் தமிழ் மாணவர்கள் இலக்கிய இன்பங்கண்டு, இனிய எளிய தமிழ் நடை எழுதும் வன்மை பெறுவதோடு, உலகியலறிவையும், பொது நோக்கையும் பெற்றுத் திகழ்வார்கள் என்று நம்புகிறேன்.

எனது எளிய வேண்டுகோளுக்கு இணங்கித் தங்கள் கவிதைகளையும், கட்டுரைகளையும், சேர்த்துக் கொள்ள உரிமை அளித்த பெரியார்கள் அனைவர்க்கும் எனது அன்புசால் வணக்கம்.

இதனைக் கண்ணுறும் கலாசாலைத் தலைமை ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் தங்கள் தங்கள் கலாசாலைகளில் பாடமாக வைத்து என்னை ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

ஈ. பண்டார நம்பியார்.

Printed at the Excelsior Power Press, Madurai-52.

உள்ளுறை

செய்யுள்

பாடம் பக்கம்

I. வாழ்த்து

1. கடவுள் ... 1
2. கலைமகள் ... 2
3. குடியரசு ... ,,

II. நீதி

1. திருக்குறள் ... 2
2. இனியவை நாற்பது ... 3
3. அறநெறிச்சாரம் ... ,,
4. திரிகடுகம் ... 4
5. ஆசாரக்கோவை ... 5
6. திருவேங்கடசதகம் ... 6

III. கதை

யானையை வென்ற முயல் ... 7

IV. உபதேசம்

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ... 11
2. பட்டினத்தார் ... 13

V. பல்சுவை

1. வேளாளர் பெருமை ... 13
2. ஆடைச்சிறப்பு ... ,,
3. வழுதியின் கலியாணம் ... 14
4. முருகன் பெருமை ... ,,
5. புலவர் போட்டி ... ,,
6. சகோதர ஒற்றுமை ... ,,
7. பெய்யாத மேகத்திடம் பேசியது ... 15
8. ஆறு பேசுகிறது ... ,,

பாடம்			பக்கம்
9.	கயிறு	...	15
10.	அஞ்சலி	...	16

உரை நடை

1.	மாந்தருக்குள் ஒரு மாணிக்கம்	...	17
2.	உயிர்த் தொண்டு	...	25
3.	படைப்பின் விந்தை	...	32
4.	இமயமலை	...	41
5.	காற்பந்து விளையாட்டு	...	47
6.	நமது பற்கள்	...	54
7.	கலைக் கோவில்	...	59
8.	புகழ்	...	67
9.	வ. உ. சிதம்பரனார்	...	73
10.	நாகனாரும் வளவனும்	...	80
11.	வானவூர்தி	...	85
12.	குதிரைகள் புலம்பல்	...	90
13.	எனது கடற் பிரயாணம்	...	93
14.	பயிற்சி (மௌனவாசிப்பு)	...	100
15.	அகராதி தந்த அறிஞர்	...	101
16	குடிசைத் தொழில்	...	106
17.	நமது சுதந்திரக் கொடி	...	111
18.	பயிற்சி (மௌனவாசிப்பு)	...	115
19.	கூட்டுறவுச் சங்கம்	...	116
20.	குரு குதிரைமேலிருந்து விழுந்தது	...	122
21.	பத்திரிகைச் செய்தி	...	126
22.	அசோகன் அமைதி (நாடகம்)	...	127
	குறிப்புரை	...	136

நமது சுதந்திரக் கொடி [பக்கம் 111]

CONNEMARA PUBLIC LIBRARY
20 MAY 1956
MADRAS

இளந் தமிழர் இலக்கிய வாசகம்

ஏழாம் வகுப்பு

செய்யுள்

I. வாழ்த்து

1. கடவுள்

கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான்; புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
துதிசெயும்; தருக்கள் எல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்;
பூதம்தம் தொழில்செய் தேத்தும்;
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்
அகமே, நீ வாழ்த்தா தென்னே?

—முன்சீப்-வேதநாயகம் பிள்ளை.

2. கலைமகள்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை— தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

—கம்பன்.

3. குடியரசு

ஆதி பகவன் அறவாழி அந்தணன்
யாதும் உவமையிலான் இன்னருளால்—ஓதுபுகழ்
இந்திய நாட்டில் எழுந்த குடியரசு
சந்ததம் வாழ்க தழைத்து.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

II. நீதி

1. திருக்குறள்

நிலத்தியல்பால் நீர்திரிந்(து) அற்றாகும், மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. 1

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப(து) இழுக்கு. 2

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 3

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால் பூன்றிய தூண். 4

சுழன்றுமேர்ப் பின்ன(து) உலகம்; அதனால்,
உழந்தும் உழவே தலை. 5

—திருவள்ளுவர்.

2. இனியவை நாற்பது

பிச்சைபுக்(கு) ஆயினும் கற்றல் மிகஇனிதே;
நற்சவையில் கைகொடுத்தல் சாலவும் முன்னினிதே;
முத்தேர் முறுவலார் சொல்லினி(து); ஆங்கினிதே
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு. 1

வருவாய் அறிந்து வழங்கல் இனிதே;
ஒருவர்பங்(கு) ஆகாத ஊக்கம் இனிதே;
பெருவகைத்(து) ஆயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது. 2

கயவரைக் கையிகந்து வாழ்தல் இனிதே;
உயர்வுள்ளி ஊக்கம் பிறத்தல் இனிதே;
எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது. 3

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே;
அறம்புரிந்(து) அல்லவை நீக்கல் இனிதே;
மறந்தேயும் மாணு மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்தல் இனிது. 4

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே;
தானம் அழியாமை தானடங்கி வாழ்வினிதே;
ஊனமொன்(ற) இன்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. 5

—பூதஞ்சேந்தனூர்.

3. அறநெறிச்சாரம்

இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு, வாய்மை எருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்பதோர்
பைங்கூழ்ச் சிறுகாலைச் செய். 1

வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும்; அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும், கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு. 2

தன்னைத்தான் நெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தான் எய்தாப் பயனில்லை;—தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்,
பிடிபடுக்கப் பட்ட களிறு. 3

இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை உயர்கதிக் குய்த்தலான்,—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப்படு வார். 4

பாம்புண்ட நீரெல்லா நஞ்சாம்; பசுவுண்ட
தேம்படு தெண்ணீ ரமுதமாம்;—ஓம்பற்(கு)
ஒளியா முயர்ந்தோர்க்கு ஞான மதுபோல்
களியாங் கடையாயார் மாட்டு. 5

—முனைப்பாடியார்.

4. திரிகடுகம்

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்,-பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல. 1

வருவாயுள் கால்வழங்கி வாழ்தல், செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை, - எய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 2

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 3

வைததனை இன்சொலாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 4

உண்பொழுது நீராடி உண்டலும்,—என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்,—தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில். 5

—நல்லாதனார்.

5. ஆசாரக் கோவை

நன்றி அறிதல் பொறையுடைமை இன்சொல்லோ(டு)
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ(டு)
ஒப்புர(வு) ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

வைகறை யாமம் துயில்எழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. 2

பொய்குறளை வெளவல் அழுக்காறு இவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார்; சிந்திப்பின்,
ஐயம் புகுவித் தருநிரயத் துய்த்திடும்;
தெய்வமும் செற்று விடும். 3

உண்ணுங்கால் நோக்கும் திசைகிழக்குக்-கண்ணமர்ந்
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ,-யாண்டும் [து
பிறிதியாது நோக்கா னுரையான்-தொழுதுகொண்
டுண்க உகாமை நன்கு. 4

பழியார் இழியார் பலருள் உறங்கார்
இசையாத நேர்ந்து கரவார்—இசையின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார் தள்ளியும்
தாங்கரும் கேள்வி யவர். 5

—பெருவாயில் முள்ளியார்.

6. திருவேங்கட சதகம்

தனதுபட் டந்தனைத் தம்பியர்க்
கீயெனத் தந்துமகி ழுந்தமையனும்,
தமையனுர் வருமளவு மாவிரத மாகவே
தபசுபுரி யுந்தம்பியும்,
கனசுவைப் பாலீந்த தாய்தனைப் போலவே
கருணைசெய் திடுமதனியும்,
காணுமுன் றந்தைபோற் றிருவடிகள் பணியுங்
கனிட்டனுடை மனையாட்டியும்,
தினந்தினம் பரிவாகி அம்மையே யென்றபேர்
செப்புங் கொழுந்தனும்
சேர்ந்துவாழ் கின்றபேர் திரேதா யுகந்தனில்
தெசரதகு மாரர் கண்டாய்
வனசமலர் கமழ்கின்ற வாவிசூழ் களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கை மண
வாதவேங் கடராயனே! [வாளனே!

—நாராயண பாரதி.

III. கதை

1. யானையை வென்ற முயல்

துன்னரு மடவி தன்னில்
தும்பிக ளனேகஞ் சூழப்
பன்னருஞ் சதுர தந்தன்
எனுமிறை பண்பின் வாழ்நாள்
அன்னநாள் மழையில் லாம
லருஞ்சுனை யெல்லாம் வற்ற
உண்ணுநீ ரெங்குண் டென்ன
வொற்றர்பார்த் தோடி வந்தே, 1

சந்திர சரசு தண்ணீர்
ததும்பிட நிற்கு தென்ன,
அந்தநற் சுனையை நாடி
யானைகள் அனைத்துஞ் செல்ல
முந்தியச் சுனையைச் சூழ
முயல்சிலீ முகவேந் தஞ்சி,
மந்திர விசயன் தன்னை
வரவழைத் துரைக்கு மன்றே; 2

“இற்றைநாள் வரையில் நாமும்
இனமுமிச் சுனையைத் தானே
சுற்றியிங் கிருந்தோம்; இந்தத்
தும்பிகள் வந்து புக்கால்
மற்றுநாம் இருக்க லாகா;
வனத்தில் வேறிடமு மில்லை;
உற்றிவ ணிருக்க வேறோ
ருபாயநீ நினைப்பாய்” என்ன, 3

"ஆனையை வெல்லு மாறிங்
கருமையோ? விடைதா" என்று
ஞானமந் திரவி சார
நணிபெறு விசயன் கூறிச்
சேனைகா வலனு மந்தச்
சிலீமுகன் அனுப்ப வேகிக்
கானில்வே ழக்கூட் டத்தைக்
கண்களாற் கண்டு நின்றே, 4
"நகைத்துடன் கொல்வர் துட்டர்
நாமவர் நடுவிற் பட்டால்;
வகைப்பட வோர்பா னின்றால்
வந்தடித் திடுவர் மாறாய்;
மிகைப்பட அவர்கள் கையில்
வீறுட னுழுஞ் சும்மா
அகப்படின் நம்மை யந்த
ஆனைதான் கொல்லு மன்றே" 5
என்றுதான் மனத்தில் எண்ணி,
"இதன்கையில் அகப்ப டாமல்
நின்றுநாம் வெல்வோம்" என்று
நினைத்தொரு குவட்டி லேறித்
துன்றிய களிற்று வேந்தைத்
"தம்பி நீ சுகமே?" என்ன,
வென்றிகொள் களிறு கண்டு
வியந்து, "நீயாரோ?" என்ன, 6
"இசைநிலா வெறிக்குந் திங்கள்
ஏவிய தூதன்; என்பேர்
விசயனென் பார்கள்; உன்பால்
விடுக்கவந் துற்றேன்" என்ன,

அசை விலா தாகி யந்த
ஆனையும் பயந்து நின்றே
"விசய நீ வந்த தென்ன
விளம்" பென விளம்பு மன்றே, 7
"சந்திர சரசென் றெங்கள்
சசிபக வான்பே ராலே
இந்தநற் கான கத்தில்
இருஞ்சுனை ஒன்றுண் டாக்கி
அந்தநற் சுனையில் எங்கள்
ஐயனுந் தேவி மாரும்
மூந்திய சலக்கி ரீடை
முயங்கியே பகலைக் கெல்லாம் 8
"தண்ணுறுஞ் சுனைக்குக் காவல்
வைத்தெமைத் தாங்கள் போவர்;
விண்ணவர் உலகத் தாரும்
விரும்பினும் தொடப் படாது;
நண்ணிய சுனைநீர் உண்ண
நாடினை நீயென் றெங்கள்
அண்ணலார் சினந்துன் பக்கல்
அனுப்பினார் 'தடுத்தி' என்றே, 9
"தூதுசொல் வாரி யற்கை
தூங்கவா ளுருவிக் கொண்டு
கோதமாய்க் கேட்பார் முன்னுங்
கூறுவ கூறல் வேண்டும்;
யாதவர் கூறி னாலும்
இகலினர் தூத ரேனும்
மூதறி வரசர் தூதர்
முனியினு முனியா ரன்றே; 10

"தன்னுடல் வலியி னாலே
தான்பெரி யரைப்ப கைத்தால்
பின்னவர் சினந்து வெல்லப்
பெற்றுயிர் இழத்தல் வேண்டும்;
அன்னதை நினையா மற்பின்
பவர்பகை நினைத்தா ரேனும்
முன்னரே வணங்கிப் போற்றின்,
முடிவுறா ராவி மன்னோ. 11

மூவரின் முதல்வ ரான
முனிவனார் முடிமேல் வாழும்
தேவனைப் பகைத்த சிந்தைச்
செயலினை யினித்த டுத்தே
மேவுதன் சுனைமேல் வைத்த
வேட்கையை விடுத்திந் நேரம்
போவதே கருமம்" என்று
புத்திகள் பலவுஞ் சொல்லி, 12

"இங்கிவை யனைத்து நானே
இயம்பினன் உன்னை வேண்டி;
திங்களாம் பகவன் உன்மேற்
சினந்தது கொஞ்ச மல்ல;
அங்கவன் சினமு நானே
ஆற்றுவன் அவன்பாற் சென்றே;
வெங்களிற் றினத்தி னோடே
மீள்கநீ" என்று கூற, 13

தந்தியின் அரசும் அந்தச்
சசந்தனை நோக்கி, "நீசொல்
சந்திரன் எனுந்தே வின்தத்
தடந்தனில் குடைவ தெப்போ(து)?

அந்தவே ளையினில் வந்தங்
கவனடி போற்றி யானும்
உய்ந்துமீண் டேகுவேன்" என்
றோதலும், முயல்நன் றென்றே 14
அன்றிர வுடன்கொண் டேகி
அலைபுனல் தடத்தில் தோன்றும்
துன்றுவெண் மதியின் சாயை
காட்டி, "நீகாண்க" என்ன,
நன்றதைக் கண்டு திங்கள்
நாதனே யென்றும், சூழ்வுற்
றொன்றிய வுடுக்கள் அன்னோற்
குரியநன் மாதர் என்றும் 15
ஆணையும் நினைத்து நெஞ்ச
மழிந்துபின் தெளிந்து நின்று,
"நானிதை யறியேன், எங்கள்
நாதனே, பொறுக்க!" என்று
வானுயர் மதியை நோக்கி
வணங்கியே மீண்டு போகக்
கானுறு முயல்க ளெல்லாம்
களித்துவாழ்ந் திருந்த வன்றே. 16

—வீரமார்த்தாண்ட தேவர்.

IV. உபதேசம்

1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

வாக் கிறந்த பொருள் — நமது
மனதிற் கெட்டாப் பொருள்;
யார்க்கு மப்பொருளை — அளக்க
இயல மாட்டா தப்பா.

ஒரு திரை நீங்கின் — மேலும்
ஒரு திரை வீழும்;
ஒரு கணப் பொழுதும் — திரை தான்
ஒழிய மாட்டா தப்பா. 2

ஆதி யெது வென்று — வினவும்
அவனோ ரறி விலான்;
ஆதி யிது வென்று — கூறும்
அவனு மோர் மூடன். 3

மண்ணில் வாழ்வதுண்டு — பின்னல்
மரண மாவ துண்டு;
நண்ணும் இன்ப துன்பம் — எந்த
நாளும் உண் டப்பா. 4

நன்மை விதைத் திடில் — என்றும்
நன்மையே விளையும்;
தின்மை விதைத் திடில் — அதுபோல்
தின்மையே விளையும். 5

கரும்பில் என்றுமே — வேம்பின்
கனி கனிவ தில்லை;
விரும்பிடா வேம்பில் — கரும்பும்
விளைவ தென்று மில்லை. 6

பொய் களைந்திடுவோம் — மெய்யைப்
போற்றி நின்றிடுவோம்;
செய் கடனை நிதம் — உலகில்
செய்து வாழ்ந் திடுவோம். 7

2. பட்டினத்தார்

ஒன்(று) என்று இரு; தெய்வம் உண்(டு)
என்(று) இரு; உயர் செல்வ மெல்லாம்
அன்(று) என்று இரு; பசித்தோர் முகம்
பார்; நல் அறமும் நட்பும்
நன்(று) என்(று) இரு; நடு நீங்காமலே
நமக்(கு) இட்டபடி
என்(று) என்(று) இரு; மனமே! உனக்கே
உபதேசம் இதே.

V. பல்சுவை

1. வேளாளர் பெருமை

வேதநூல் முதலாக விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவார் எல்லாரும் உழுவார்தம் தலைக்கடைக்கே
கோதைவேல் மன்னவர்தம் குடைவளமும் கொழுவளமே
ஆதலால் இவர்பெருமை யார்உரைக்க வல்லாரே!

—"ஏரெழுபது" கம்பன்.

2. ஆடைச் சிறப்பு

மேலாடையின்றிச் சவை புகுந்தால் இந்த
மேதினியோர்
நூலா யிரம்படித் தாலும் எண்ணார் நாவல்
பாற்கடலோ
மாலா னவரணி பொன்னுடை கண்டு
மகளைத் தந்தே
ஆலால மீந்தது தோலாடை சுற்றும்
அரன் தனக்கே.

—நையாண்டிப்புலவர்.

3. வழுதியின் கலியாணம்

வண்டமிழைத் தேர்ந்த வழுதி! கலியாணத்
துண்ட பெருக்க முரைக்கக்கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண் டிலேன்.

—ஔவையார்.

4. முருகன் பெருமை

அப்பன் இரந்துண்ணி; ஆத்தாள் மலை நீலி;
ஒப்பரிய மாமன் உறிதிருடி;—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன்; ஆறுமுகத் தானுக்கிங்(கு)
எண்ணும் பெருமை இவை!

—காளமேகப்புலவர்.

5. புலவர் போட்டி

மூச்சுவிடு முன்னே முந்நூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ?—பேச்செனன
வெள்ளைக் கவிகாள மேகமே! உன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.

—அதிமதுர கவிராயர்.

இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட்(டு) ஆகாதோ?—சும்மா
இருந்தால் இருப்பேன், எழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம், பிள்ளாய்!

—காளமேகப்புலவர்

6. சகோதர ஒற்றுமை

செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—மிஞ்சி

விரதமே கொண்டிந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்.

—வரதுங்கராம பாண்டியன் மனைவி.

7. பெய்யாத மேகத்திடம் பேசியது

செல்லென்றுன் நாமத்தைச் செப்பினதே அல்லாமல்
செல்லென் றினைநாங்கள் செப்பினமா?—அல்லென்று
மெய்யா உவமிக்க விண்மீது தோன்றியநீ
பெய்யாமற் போனதென்ன பேசு.

—வேதநாயகம் பிள்ளை.

8. ஆறு பேசுகிறது

மேடுபள்ளம் தாவிக்குதித்து விரைந்து வந்தேனே;
காடுங்கரையும் கவலையின்றிக் கடந்து வந்தேனே;
பரம்பொருளைப் பண்ணுடனே பாடி வந்தேனே;
பரந்தகடலில் கலந்துமகிழப் பணிந்து வந்தேனே.

—யோகி சுத்தானந்த பாரதியார்.

9. கயிறு

சிறிய வயதினிலே — எங்கள்
சேதி வியப்பினையே
அறிய முயலுவிரேல் — அதை
அறைகுவம் கேட்டிடுவீர். 1

பஞ்சினிற் பட்டினிலே — சிறு
நூலென் றெழுந்திடுவோம்
மிஞ்சிய தென்னையிலே — பனை
தாழைகள் வாழையிலே, 2

சோற்றுக் கற்றாழையிலே — செடிப்
புளிச்சையில் நார்ப்படுவோம்

வேற்று மரங்களிலும் — எம்மை
நினைந்து பெயர்த்திடுவார். 3

ஆனை அடக்கிடுவோம் — பாரில்
அரும்பொருள் இறுக்கிடுவோம்
வானைப் பிளந்துயரும் — கொடித்
தேரை யிழுத்திடுவோம். 4

காட்டுப் பயிர்களெல்லாம் — மேனி
கண்டு விளைந்திடவே
ஏற்றக் கமலையிலே — தண்ணீர்
இறைத்துப் பொழிந்திடுவோம். 5

எங்களை வேண்டாதார் — பார்க்கின்
எவருமிலை என்று சொல்வேன்
பொங்கிய ஒற்றுமையும் எங்கள்
பொறுமையும் வாழ்குகவே. 6

—திரு. S. அரங்க அய்யங்கார்.

10. அஞ்சலி

காந்தியென்னும் பேரொளியே!
கருணைபொழி வான்முகிலே!
சாந்திநிறை பாத்திரமே!
சன்மார்க்க சாத்திரமே!
மாந்தருக்குள் மாமணியே!
மாநிலத்தின் அற்புதமே!
ஏந்துபுகழ் மோகனமே!
என்சொல்லி அஞ்சலிப்போம்!

—நாமக்கல் கவிஞர்.

CONNEMARA PUBLIC LIBRARY
20 MAY 1956
MADRAS

பண்டித மோதிலால்நேரு, பண்டித ஜவஹர்லால்நேரு.

இளந் தமிழர்
இலக்கிய வாசகம்

உரை நடை

1. மாந்தருக்குள் ஒரு மாணிக்கம்

[வித்துவான் ஈ. பண்டார நம்பியார்]

நமது இந்திய நாடு, இன்று தன்னாட்சி நாடாக இலங்குகிறது. இவ் வாட்சியைப் பெறுவதற்குத் தங்கள் உடல், பொருள் ஆவி அனைத்தையும் வழங்கி உழைத்தவர்கள் பலர். அவர்களுள் ஒருவர் தாம், இன்று நமது முதலமைச்சராக விளங்கும் **பண்டித ஜவஹர்லால் நேரு**. அவர், காந்தி மகானுடன் நெடுங் காலம் பழகி, அவரால் பண்படுத்தப்பட்டவர்; காலமெல்லாம் காந்தி மகானையே கருத்தில் வைத்துச் செயல்களைச் செய்து வருபவர். அவர், தம் வாழ்க்கை முழுவதையும் மக்கள் நலனுக்காக வழங்கினர். செல்வக் குடியில் பிறந்து வறுமை என்பதை அறியாதவராக இருந்தும், அவர் பட்ட அல்லலுக்கு அளவில்லை. அதற்குக் காரணம், காந்தி மகான் வகுத்த வழிநின்று உறுதியுடன் உழைத்தமையே யாகும். ஆதலால் தான், மாந்தருக்குள் ஒரு தெய்வம் என்று மதிக்கப்படுகிற மகாத்மா காந்தியடிகள், அவரை 'மக்களுக்குள் ஒரு மாணிக்கம்' என்று அழைத்தனர். 'ஜவஹர்' என்ற பெயருக்கும் 'மாணிக்கம்' என்று பொருள் அமைந்திருப்பது பொருத்தமல்லவா?

இந்தியாவின் மணிமுடி என்று புகழப்படும் காஷ்மீரநாடு, காண்பவருடைய கண்ணையும், கருத்தையும் களிப்புறச் செய்யும் எழில் மிக்கது. அது ஒரு காலத்தில் புலமையின் புகலிடமாகப் பொலிந்தது. அந் நாட்டை ஆண்ட மன்னர்கள், கலை வளர்ப்பதில் கருத்துடையராய், பிறநாட்டுப் புலவர்களையும் வரவேற்று வாழ்வளித்தார்கள். நாட்டில் எங்கும் கலை வளர்ந்தது. காஷ்மீரம், கலைமகள் கொலுவிருக்கையாக விளங்கிற்று. அங்கு, சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர், இராஜ்கால் என்னும் பண்டிதர் ஒருவர் குடி புகுந்து வாழ்ந்திருந்தார். அவர் பாரசீகம், வடமொழி இரண்டிலும் வல்லவர்.

அந்நாளில், டில்லியை ஆண்டுவந்த முஸ்லிம் அரசர் ஒருவர் காஷ்மீரம் சென்றிருந்தார். அவர் இராஜ்கால் பண்டிதரின் புலமையில் ஈடுபட்டு, அவரைத் தம்மோடு அழைத்து வந்து, விளைநிலமும் மாளிகையும் கொடுத்து டில்லியில் வாழவைத்தார். மன்னர் அளித்த மாளிகை ஒரு கால்வாய்க் கரையில் இருந்தது. இந்தி மொழியில் கால்வாய்க்கு 'நஹார்' என்று பெயர். ஆதலால், இராஜ்கால் பண்டிதர் 'கால்வாய்க்கு உரியவர்' என்று பொருள்படும் 'நெஹ்ரு' என்ற சொல்லால் அழைக்கப்பட்டார். அவருக்குப் புலமை கருதி வந்த பண்டிதர் என்னும் பெயரும், காரணம் பற்றி வந்த நெஹ்ரு என்ற பெயரும், அவர் வழியில் வந்தோருக்கும் வழங்கலாயின.

நேரு குடும்பத்தினர் டில்லியிலிருந்து ஆக்ராவிலும், பின்னர் அலகபாத்திலும் சென்று குடியேறி

னர். பண்டித மோதிலால் நேரு, அலகபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தினர். அவர் மனைவியார் சொரூப ராணியார் என்னும் அம்மையார். அவர்களுக்கு 1889-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதினான்காம் நாளில் அருந்தவப் புதல்வராய்த் தோன்றினர் நம் ஜவஹர்லால் நேரு. பின்னர் விஜயலட்சுமி, கிருஷ்ணு என்னும் இரு புதல்வியரும் பிறந்தனர்.

பண்டித மோதிலால் நேரு, தம் அருமைப் புதல்வருக்குக் கல்வி கற்பிப்பதில் கருத்தைச் செலுத்தினர்; பெர்னண்ட் டி. புரூக்ஸ் என்னும் அறிஞர் ஒருவரை ஆசிரியராக அமர்த்தினர். ஜவஹர் அவரிடம் ஆங்கிலம், கணிதம், வரலாறு முதலியவற்றைக் கற்றுத் தேர்ந்தார்; விஞ்ஞானக் கலையையும் வீட்டிலேயே கற்றுக்கொண்டார்; பின்னர், இங்கிலாந்து சென்று, கேம்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்று, 1912-ஆம் ஆண்டில் இந்தியாவிற்குத் திரும்பினர். அவர் இங்கிலாந்தில் மாணவராக இருந்த போது, லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே முதலிய இந்தியத் தலைவர்களின் சொற்பொழிவைக் கேட்டார். அவை அவர் உள்ளத்தில் நாட்டுப்பற்றை ஊட்டின. இத்தாலி நாட்டுப் பெருவீரனை கரிபால்டியின் வரலாறு, நாட்டு விடுதலைக்காக வீறு கொண்டு உழைக்குமாறு அவரைத் தூண்டிற்று. இங்கிலேயில், இந்தியா வந்த ஜவஹர், காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்து, நாட்டுப் பணிபுரியமுற்பட்டார்.

1916-ஆம் ஆண்டு இலட்சுமணபுரியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. அங்குச் சென்றிருந்த

ஜவஹர், காந்தியடிகளின் ஆசியைப் பெற்று, அவருடைய அரசியல் மாணவரானார். இன்று ஏற்பட்ட அவ் வுறவுதான், பிற்காலத்தில் மகாத்மா காந்தியடிகள், "ஜவஹரே எனது அரசியல் வாரிசு" என்று கூறுவதற்குக் காரணமாயிற்று. அவர் மாந்தருக்குள் ஒரு மாணிக்கமாவதற்கும் அவ் வுறவுதான் காரணம்.

அந்த ஆண்டில் தான் ஜவஹருக்குத் திருமணம் நடைபெற்றது. அவர் மனைவியார், கமலா நேரு என்னும் அம்மையார். இத் தம்பதிகளின் அன்புப் புதல்வியாய்த் தோன்றினார் இந்திரா நேரு என்பவர். இப் புதல்விக்கு அறிவுறுத்துவதற்காக ஜவஹர் எழுதிய கடிதங்களே, "ஜவஹர்லால் நேருவின் கடிதங்கள்" என்ற சிறந்த நூலாகும். அந் நூலை அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டுவது அவசியமாகும். இன்னும் அவர் எழுதிய 'உலகச் சரித்திரம்,' 'சுய சரித்திரம்' 'இந்தியா புதிதாகக் கண்டவை' முதலிய நூல்கள் அவரை உலக எழுத்தாளர்களில் ஒருவராக உயர்வு படுத்தியுள்ளன. அவைகள் சிறந்த இலக்கியங்கள்.

முதல் உலகப்போர் முடிந்ததும், இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கும் என்று தலைவர்கள் எண்ணி இருந்தனர். ஏமாற்றம் ஏற்பட்டது. நாட்டில் விடுதலைக்கிளர்ச்சி தோன்றியது. அரசாங்கம் அடக்கு முறையைக் கையாண்டது. பஞ்சாப் படுகொலை நடந்தது. மிதவாதியாக இருந்த மோதிலாலும் தீவிரவாதியானார். தந்தையும் மகனும் பலமுறை சிறைசென்றனர். ஜவஹர், அலகபாத் நகராண்மைக் கழகத் தலைவராக இருந்து பணிபுரிந்தார்; காங்கிரஸ் செயலாளராகவும் இருந்து தொண்டாற்றினார்.

1925-ஆம் ஆண்டு காந்தி அடிகள் காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்தில், இவரே செயலாளராக இருந்தார்.

ஜவஹர்லால் நேரு, அப்பொழுது ஒரு முறை ஐரோப்பா செல்ல நேர்ந்தது; அவரது தாயாரும், மனைவியும் உடல்நலங் குன்றி இருந்தமையால், 1926-ல் அவர்களுடன் ஐரோப்பா சென்று ஜினிவா நகரில் தங்கி யிருந்தார். அங்கு அவருக்குப் பல பெரியார்களுடைய நட்புக் கிடைத்தது. காந்தியடிகளின் நண்பரான ரோமன் ரோலண்ட் என்பவரைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தார் அவர்; ஆனால், இத்தாலிய சர்வாதிகாரியான முசோலினி தம்மை அழைத்திருந்தும், அவரைச் சென்று காண மறுத்து விட்டார்; 1928-ல் இந்தியா வந்து சேர்ந்தார்.

ஜவஹர் 1930-ல் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். முந்திய தலைவர் மோதிலால் நேரு. ஆதலால், தந்தையிட மிருந்தே தனயர் பதவி ஏற்றார். அவ் வாண்டில் உப்புப் போர் ஆரம்பமாயிற்று. காந்தி யடிகள் தண்டி என்ற இடத்திற்குச் செல்லும் வழியில், மோதிலால் நேரு தமது 'ஆனந்தபவனம்' என்ற மாளிகையைக் காங்கிரசிற்குக் காணிக்கையாகக் கொடுத்தார். அம் மாளிகை, **சுய ராஜ்ய பவன**மாக மாற்றப்பட்டது. உப்புப் போரில், தலைவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டனர். தந்தையும் மகனும் சிறை சென்றனர்.

இளவரசரைப் போல் இன்ப வாழ்வு நடத்த வேண்டிய ஜவஹர், நாட்டு நலங்கருதித் துன்ப வாழ்

வைத் துணிவுடன் மேற்கொண்டார்; ஒன்பது முறை சிறை சென்றார்; 1931-ஆம் ஆண்டு தம் அருமைத் தந்தையை இழந்தார். அதன் பிறகு பல துன்பங்கள் அவரைத் தொடரலாயின. 1936-ம் ஆண்டு அவர் மனத்திற் கிசைந்த மனைவியார் மரணம் அடைந்தார். 1938-ஆம் ஆண்டு அவர் அன்பிற்குரிய அன்னையார் ஆவிநீத்தார். இக் காலங்களிலும் கூட, ஜவஹர் நாட்டிற்குச் செய்ய வேண்டிய நற்பணியில் தவறிய தில்லை. தம் மனைவியை இழந்த அந்த ஆண்டில் தான், ஜவஹர் இலட்சுமணபுரி காங்கிரசிற்குத் தலைமை தாங்கினர்; பல மாகாணங்களில் சென்று தேர்தல் பிரசாரம் நடத்தி, ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்தினர். சுருங்கக் கூறினல், சுடச் சுட ஒளி விடும் பொன்னென அவர் பிரகாசித்தார் என்னலாம். மாணிக்கம் எக் காலத்திலும் மங்குவதில்லை அல்லவா?

இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பிறகு, இந்திய நாட்டில் விடுதலைக் கிளர்ச்சி அதிகரித்தது. அடக்கு முறையால் பயனில்லை என்று கண்ட அரசாங்கம், விடுதலை அளிக்க முன் வந்தது. காந்தி அடிகளின் ஆன்ம உணர்வாலும், தலைவர்களின் தியாகத்தாலும், மக்களின் உழைப்பாலும் 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் நாடு விடுதலை பெற்றது. அடிகளின் ஆசியைப் பெற்று, ஜவஹர் முதலமைச்சராகப் பதவி ஏற்ருர். அவர், 'இந்திய நாடு இணையற்ற நாடாக வேண்டும்' என்ற ஆர்வத்தால், இடை விடாது உழைத்து வருகிருர்.

அவர், உலக நாடுகள் அனைத்தும் நல்ல நிலையில் இல்லாவிட்டால், சில நாடுகள் மட்டும் வாழ முடியாது என்ற உயர்ந்த கோட்பாடு உடையவர். ஆகவே, நம் நாட்டின் நலனுக்கு உழைப்பதுடன், உலகிலுள்ள எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று அவர் உழைக்கிறார். உலகிலுள்ள எந்தப் பகுதியிலும், இனி, 'ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப் படுத்தி வாழ முடியாது' என்று அவர் வல்லரசுகளுக்கு அஞ்சாது அறிவுறுத்துகிறார்.

அவர் அஞ்சா நெஞ்சினர்; தன்னம்பிக்கை யுடையவர்; விடா முயற்சி கொண்டவர்; பிள்ளை யுள்ளம் படைத்தவர்; எல்லோரும் 'இன்புற்றிருக்க வேண்டும்' என்று எண்ணுபவர். அவர் கனவு நனவாக வேண்டும். அதற்கு அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழவேண்டும். அவர் நீண்ட ஆயுளைப் பெற்று இனிது வாழ, இறைவன் இன்னருளை நாம் வேண்டு வோமாக!

வாழ்க ஜவஹர்லால்!

அரும்பொருள் :— ஆவி - உயிர். அல்லல் - துன்பம். எழில்- அழகு- பொலிந்தது - விளங்கியது. கலைமகள் - சரசுவதி. வழக்கறிஞர் - வக்கீல். வரலாறு - சரித்திரம். வீறு - வேகம். செயலாளர் - காரியதரிசி. இணையற்ற - ஒப்பற்ற.

வினாக்கள்

1. 'மாந்தருக்குள் ஒரு மாணிக்கம்' என்றது யாரை? அவ்வாறு கூறுவது எங்ஙனம் பொருந்தும்?
2. காஷ்மீர் நாட்டின் சிறப்பினைக் கூறுக.
3. ஜவஹரின் பெற்றோர்கள் யாவர்?
4. ஜவஹர் கல்வி கற்ற முறையைக் கூறுக.

5. ஜவஹர் காந்தியடிகளின் அரசியல் மாணவரானது எப்பொழுது? அதனால் ஏற்பட்ட நன்மைகள் யாவை?

6. ஜவஹரின் உயர்ந்த இலட்சியம் யாது?

7. அவரது நல்லியல்புகளைக் கூறுக.

பயிற்சி

எதிர்ப்பதம் தருக:

தன்னாட்சி, சுதந்திர நாடு, பேரரசர், தீவிரவாதி.

இலக்கணம்

நன்மை தீமை. இராமன் பாடத்தைப் படித்தான். இவ்விரண்டும் சொற்றொடர்கள். இவற்றுள் இரண்டாவது தொடர், பொருள் முடிந்து நிற்பதால் வாக்கியம் எனப்படும். பொருள் முடிவுறாமல் வரும் சொற்றொடர்களுக்கு என்ன பெயர்?

ஒரு வாக்கியத்தில் பொருள் முடிந்து நிற்கும் இடம் பயனிலை என்று கூறப்படும். அப்பொருளைச் செய்யும் கருத்தா எழுவாய் எனப்படும். கருத்தாவினால் செய்யப் படுவது செயப்படு பொருள். ஆகவே ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்று மூன்று உறுப்புக்கள் உண்டு. இவற்றுள் செயப்படு பொருள் சில வாக்கியங்களில் வாராது. சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்திருப்பது உண்டு. அதற்குத் தோன்றா எழுவாய் என்று பெயர்.

ஜவஹர் ஜினிவா நகரை அடைந்தார். அவர் இனிது வாழ இறையருளை வேண்டுவோமாக

இவ் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் இவை எனக் கூறுக.

2. உயிர்த் தொண்டு!

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்]

மாணவ மணிகளே!

நீங்கள் வாழ்கின்ற காலம் இந்தக் காலமா? அந்தக் காலமா? எந்தக் காலம்? நீங்கள் வாழ்கின்ற காலம் நெருக்கடியான காலம். உடை கிடைப்பது, சோறு கிடைப்பது அரிதாயிருக்கிற காலம். சில மாணுக்கர்கள், 'பரீட்சை இல்லாத காலம் வருமா?' என்று கூட எண்ணலாம். 'பரீட்சை ஒழிந்தால் ஒரு பெரிய சனியன் ஒழிந்தது' என்று எண்ணும் மாணுக்கரும் இருக்கலாம்.

மாணவ மணிகளின் உடல் பெரிதும் எலும்பும் தோலுமாகவே இருக்கக் காண்கிறேன். மாணவர்களின் உடல் நன்ருக இருக்க வேண்டும்; எலும்பும் தோலுமாய் இருத்தல் கூடாது. அழகை விரும்பாத மாணுக்கர்கள் உண்டோ? அழகை விரும்பாதார் யார்? தெய்வம் என்ருல் அழகு எனலாம்.

அந்தக் காலம் போற்றற்கு உரியதா? இந்தக் காலம் போற்றற் குரியதா?

வயது முதிர்ந்த என்னைப்போன்ரூர், நாட்டுப் புற அழகைத்தான் பாராட்டிப் பேசுவார்கள். நாட்டுப்புறங்களிலே உள்ள சிறுவர்கள், அழகிய கட்டிடங்களிலே கல்வி பயில்வதில்லை. கிராமத்திலுள்ள சிறுவர்கள், கல்வி அறிவிலே சிறந்தவர்களாக இல்லாதிருக்கலாம். ஆனுல் உடலோம்பும் திறத்திலே அவர்கள் வல்லவர்கள்.

மாடுமேய்த்து, ஏர் உழுது, ஏற்றம் இறைத்து அவர்கள் அழகிய உடலைப் பெற்றிருக்கிறார்கள். உடலோம்பும் திறத்தினை, அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளவேண்டும். மற்றவற்றை அவர்கள், உங்களிடம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு கலா சாலைக்கு வந்து மாணவர்களின் உடலைப் பரிசோதிக்கும் டாக்டர், 100-க்கு 75 பேர் காச நோயால், எலும்புருக்கி நோயால் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும், இவர்களின் நுரையீரல் சரியாயில்லை என்றும் அறிக்கையைத் தந்து செல்வார். கிராமங்களிலே உள்ள சிறுவர்களைப் பற்றி, டாக்டர்கள் அம்மாதிரியான அறிக்கையைத் தர மாட்டார்கள். யுனானி வைத்தியரிடம் சென்றால், அவர் அல்வா தருவார். தமிழ் வைத்தியரிடம் சென்றால், அவர் லேகியம் தருவார். டாக்டரிடம் சென்றால், அவர் டானிக் தருவார்.

உடல் உரம் பெறுவான் வேண்டிப் பெரும்பாலோர் டானிக் தான் சாப்பிடுகிறார்கள். இந்த டானிக்கை மூன்று வேளைகள் முறையாகச் சாப்பிட்டு விட்டு, பாதம் பருப்பு, பால் இவற்றோடு 6 வேளை ஓட்டலில் காபி, டீ சாப்பிட்டுவிட்டால் உடலில் பல மேறிவிடும் என்று பலர் எண்ணுகிறார்கள். இது தவறு.

உலகத்தில் உயர்ந்த பொருள் எது? சூரிய வெளிச்சம். ஜான்ஸ்டன் என்ற பெரியார், "நாளுக்கு நாள் சூரிய வெளிச்சத்தின் சக்தி அதிகமாகிக் கொண்டே போகிறது" என்று சொல்கிறார். பசிய மரங்களில் உள்ள இலைகளின் மேல் படர்ந்து, அதன் வாயிலாக நம்மீது படும் சூரிய வெளிச்சத்திற்கு அதிக

சக்தி உண்டு. இம்முறையில் சூரிய வெளிச்சம் நம் மீது பட்டால் அழகொழுகும் முருகனாய் ஏன் இருக்க முடியாது ?

டாக்டர் கூன் என்ற பெரியார், சூரிய வெளிச்சம் நம்மீது படுவதை நன்முறையில் பயன்படுத்திக்கொள்வதற்காகத் 'தலையில் பசுமையான நிறமுள்ள துணிகளைக் கட்டிக்கொள்ள வேண்டு' மென்று சொல்லுகிறார். சூரிய வெளிச்சத்திலே உள்ள சக்தியை அறியாமல் - இயற்கை வழியிலே நடவாமல்-லேகியத்தையும், டானிக்கையும் சாப்பிடுவதால் பயன் என்ன ? உடலுக்கு நல்ல காற்று ஏராளமாக வேண்டும். உமிழும்படியான காற்றை ஒருவேளை உள்ளே ஈர்த்து நுரையீரலிலே நிரப்பினால் கறுப்புத் தெரியாது. உடல் சிவந்த மேனியுடன் இருக்கும்.

நான்கு மணி நேரம்வரை நீரிலேயே இருந்து நல்ல பலன்களைப் பெற்றதாக ஒரு ஆங்கிலப் பெண்மணி சொல்லுகிறார். நீரிலும் ஒரு ஒளி உண்டு.

நல்ல காற்றிலே உலவி, நல்ல தண்ணீரை அருந்தி, சூரிய வெளிச்சம் நம் உடலிலே நன்கு படியும்படி வாழ்வோமானால் எந்த நோயும் வராது.

தண்ணீரில் அடிக்கடி மூழ்கி நல்ல பயன்களைப் பெற்று 101 வயதுவரை இருந்த அம்மையாரைப் பார்த்து அவருடைய பேரன், '101 வயதிலே இளம் பெண்ணைப்போல் இருக்கிறாயே' என்று கேலி செய்வானும்.

நீங்கள் பெரியவர்களானால், 'எப்படி வாழ்வது ?' (How to Live) என்ற ஆங்கிலப் புத்தகத்தை அவ

சியம் படிக்கவேண்டும். நாகரீகமுடன் நாம் அரிசிச் சோறு சாப்பிடுவதாகச் சொல்லப்படுகிறதே-அதில் நாகரீகமே இல்லை எனலாம். தவிட்டைப் போக்கி (Polished Rice) வெண்ணிற அரிசியைச் சாப்பிடு கிறோம். தீட்டிய நல்ல வெள்ளைப் பச்சரிசியை உண வாக்கி, பூனை, நாயிடம் வைத்துப் பாருங்கள். மோப் பம் பிடித்துப்பார்த்து அவை தொடவே தொடா. பூனையும் நாயும் தொடாத அரிசியைத்தான் இன்று நாம் உண்கிறோம்.

இதுபோன்ற அரிசிகளைச் சாப்பிடுவதால்தான், குடல் வாதம் போன்ற நோய்கள் வருகின்றன. ஜப்பானிலே அரிசியைத் தீட்டுவதற் கென்றே சில சட்டங்கள் அமைத்திருக்கிறார்கள். நன்கு தீட்டப் பெறாத அரிசியில்தான் வைடமின் இருக்கிறது. கீரை தின்பதிலே நல்ல சத்துண்டு. கீரைகள் தின் பவனைப் பார்த்து, 'கீரைதின்னி' என்று சிலர் கேலி செய்கிறார்கள். அது தவறு. இளம் மாணக்கர்களா கிய நீங்கள், நல்ல கீரைகளை நாள்தோறும் புசிக்க வேண்டும்.

'செந்தயிர் கண்டம் கண்டமாக' என்று கம்பன் சொல்லுகிறான். இப்பொழுது பலர், 'தயிர் சாப்பிட் டால் அஜீர்ணம் வருகிற' தென்று சொல்லுகிறார் கள். அது தவறான கருத்து. எலும்புகளுக்கு நல்ல பலனைத் தருவது தயிர் ஒன்றே. பழங் காலத்திலே உடலை ஓம்பல் மிகவும் சிறந்திருந்தது. அதை நீங் கள் கைக்கொள்ள வேண்டும்.

என் ஜாதி, என் மதம் என்ற வெறி ஒழியவேண் டும். இவை ஒழியும் காலம் வந்துகொண்டே இருக்

கிறது. காலையில் எழுந்தவுடன், "உலகம் வாழ்க" என்று சொல்ல வேண்டும். உலகம் வாழவேண்டும் என எண்ணி இறைவனை வழிபடவேண்டும். "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு" என்று திருமுருகாற்றுப் படையில் வருகிறது. உலகு, உலகு என்ற மொழியை முதலில், வைத்துப் பாடுகின்ற பெருமை பழம் புலவர் களுக்குஉண்டு.

சில மக்களுடைய எண்ணம், கேவலம் இழிந்த நிலையிலே, 'என் ஜாதி', 'என் மதம்' என்று இறு மாப்புடன் செல்கிறது.

இந்தக் காலத்தில் மக்களுடைய குறிக்கோள் எங்கே போகிறது? பதவி, பதவி, பதவிமேல்தான் போகிறது. கவுன்சிலராக வேண்டும், மேயராக வேண்டும், மந்திரியாக வேண்டும், பின்னர்க் கவர்ன ராக வேண்டும், ராஜாவாக வேண்டும் என்று பலர் எண்ணுகிறார்கள். தலைமை, பதவி இவைகளிலே தான் பலர் ஆசை வைக்கிறார்கள்.

Scout Movement என்ற இயக்கம் என்ன சொல்கிறது? (Service, Service) தொண்டு, தொண்டு. 'ஒருவருக்கொருவர் தொண்டு செய்யுங்கள்' என்று சொல்கிறது. இறைவனை மட்டுமல்ல; மக்க ளையும் தொண்டால் வழிபடுங்கள். எல்லாரும் தலைவ ராக வேண்டுமென்றால் சண்டைதான். பிற்காலத்தை உண்டாக்கப் போகிற நீங்கள் தொண்டு செய்யுங்கள். மேயராக வேண்டும், மந்திரியாக வேண்டும் என்று ஆசை வைக்காதீர்கள். மேயராகவும் மந்திரியாகவும் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. நான் கண்

டிப்பது பதவிப்பித்தை.... அந்தப் பதவி ஆசை யைத்தான்.

அதிகாரம் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டு, அதிகாரத்தைக் கொண்டு துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுவதும், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துகொண்டு பெரும் பதவியில இருக்கிறோம் என்ற ஆணவ அதி காரத் தோரணையில் இறுமாப்புடன் கட்டளையிடு வதும் கூடா. அதிகாரத்திலும் பண்பும், பணிவும் இருக்கவேண்டும். இன்றேல் அதிகாரமும் நிலைக் காது. தொண்டு செய்யவும் இயலாது. நீங்கள் செய்யப் போகும் தொண்டால்தான் உலகம் பண் படைய வேண்டும்.

நீண்ட நாட்கள் உயிர்வாழ வேண்டுமென்று கவி கள் கனவு கண்டார்கள். அந்தக் கனவை நனவாக்கி, நீங்களெல்லோரும், 'நீண்ட நாட்கள் வாழவேண்டும்,' 'நீண்ட நாட்கள் உயிர்த்தொண்டு செய்யவேண்டும்' என்று நான் ஆசைப்படுகிறேன். (தமிழர் நாடு)

அருஞ்சொற்பொருள்:—சனியன் - அதிட்டங் கெட்டது. காச நோய் - ஈளை நோய். எலும்புருக்கி - க்ஷயம். நோன்பு - பட்டினி இருத்தல். பார் - பூமி. திகழ்ந்து - விளங்கி.

வினாக்கள்

1. கிராமத்துச் சிறுவர்கள் எதில் வல்லவர்கள்?

2. நாட்டுப் புறத்து மக்கள் எவ்வாறு நல்லுடலைப் பெற்றிருக்கிறார்கள்?

3. நகரத்திலுள்ள மாணவர்களைக் குறித்து டாக்டர் கள் வெளியிடும் அறிக்கையில் கூறப்படுவன யாவை?

4. அழகொழுகும் முருகனாவதற்குரிய வழி யாது?

5. நோய் வராமல் தடுப்பதற்குரிய வழி யாது?

6. தண்ணீரில் முழுகுவதால் வரும் நன்மைக்குச் சான்று தருக.

7. இக்கால மக்கள் குறிக்கோள் யாது?

8. தொண்டு முக்கியம்—ஏன்?

பயிற்சி

வாக்கியங்களில் அமைத்தெழுதுக:

குறிக்கோள், தொண்டு, ஆட்சிப் பீடம், உயிர்த் தொண்டு.

இலக்கணம்

வாக்கியங்களைத் தனி நிலை வாக்கியம், தொடர் நிலை வாக்கியம், கலவை வாக்கியம் என்று மூன்றாகப் பிரிக்கலாம்.

ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் கொண்டுவரும் சிறிய வாக்கியங்களுக்குத் தனிநிலை வாக்கியம் என்று பெயர்.

ஒரு எழுவாயும் ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளும் கொண்டு தொடர்ந்து வரும் வாக்கியங்களுக்குத் தொடர் நிலை வாக்கியம் என்று பெயர்.

'நகர வாழ்க்கையில் இத்தகைய கேடுகள் சிலவுண்டு. நகர வாழ்க்கையில் நன்மைகள் அதிகம். நகரத்தில் வாழ்வதே மிகவும் சிறந்தது' இம் மூன்று வாக்கியங்களையும் ஒன்று சேர்த்து, "நகர வாழ்க்கையில் இத்தகைய கேடுகள் சில இருந்தாலும், நன்மைகள் அதிகமாதலால், நகரத்தில் வாழ்வதே மிகவும் சிறந்தது" என்று எழுதுவதற்குக் கலவை வாக்கியம் என்று பெயர். தனிநிலை வாக்கியங்களைக் கலவை வாக்கியமாக்கும்போது, அவற்றிலுள்ள வினை முற்றுக்கள் வினை யெச்சங்களாக மாறும்.

இப் பாடத்திலிருந்து தனி நிலை, தொடர் நிலை வாக்கியங்களுக்கு உதாரணம் தருக.

3. படைப்பின் விந்தை

[வித்வான், ஆர். வீரபத்திரன், M.A, L.T]

மாணிக்கம், தன்னைத் திருவனந்த புரத்திற்கு அழைத்துச் சென்று அங்குள்ள புதுமைகள் யாவற்றையும் காட்டுமாறு, தன் தந்தையாரைப் பன்முறை வேண்டிக்கொண் டிருந்தான். வேனிற்கால விடுமுறை தொடங்கியதும், அவன் தகப்பனார் அவனது ஆசையை நிறைவேற்ற எண்ணி, அவனைத் திருவனந்தபுரத்தி லிருக்கும் தம் உறவினர் ஒருவர் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார். ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதில் தந்தையும், மகனும் அப் பட்டினத்திலுள்ள முக்கியமான இடங்கள், ஆலயங்கள், கடற்கரை முதலியவற்றைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஒரு நாள் அவர்கள், பூங்கா வனத்தையும், மிருகக் காட்சி சாலையையும் காண்பதற்காகச் சென்றார்கள்.

பூங்காவனத்துக்குள் புகுந்ததும், அது இயற்கைத் தேவியின் நடன சாலையாக விளங்குவதைக் கண்டு அவர்கள் வியந்தனர். சாதாரணமாக எல்லாவிடங்களிலும் காணப்படுகிற புற்பூண்டுகளும், செடி கொடிகளுங்கூட, அங்கு உரமிட்டு நீர் பாய்ச்சி வளர்க்கப் படுவதால் செழித்து அடர்ந்து, பச்சைப் போர்வையைப் படியின்மீது விரித்தாற் போன்று பேரழகு பெற்று விளங்கின. இடையிடையே ஓங்கி வளர்ந்த தேக்கு, வாகை, ஆயினி, மஞ்சாடி, சந்தனம் முதலிய மரங்கள் நாற்புறமும் கிளைகளைப் பரப்பி, அடர்த்தியாக இலைகளைத் தாங்கி, பாசிலைப்

பந்தர் வேய்ந்தாற் போலத் தண்ணிழல் செய்தன. இளஞ்சிவப்பு நிறமுடைய தளிரிலைகளும், மஞ்சள், சிவப்பு, நீலம், வெண்மை முதலிய பன்னிறத் தேமலர்களும், பசியஇலைப் பரப்பினிடையே விளங்கித் தோன்றிக் காண்பார் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

இத்தகைய இயற்கை வனப்பில் ஈடுபட்டு, ஒவ்வொரு தாவரத்தையும் உற்றுநோக்கி வரும்போது,



மாணிக்கம், ஒரு பலா மரத்தின் கிளை யொன்றில் ஓர் குத்துச்செடி வளர்வதைக் கண்டு, தன் தந்தையாரைப் பார்த்துப் பின் வருமாறு கேட்கத் தொடங்கினன்:

மாணிக்கம்: *அப்பா! இந்த அதிசயத்தைப் பாருங்கள். ஒரு சிறிய செடி, வேறோர் மரத்தின் மீது உட்கார்ந்துகொண் டிருக்கிறது. அது ஏன் அங்கே இருக்கிறது?*

தந்தை: *அச் செடிக்குத் தரையில் வளர முடியாது; ஏதாவது ஒரு மரத்தைத் தொத்திக்கொண்டு தான் அதனல் வாழ முடியும். இதனல் அதற்குத் "தொத்துச் செடி" என்று பெயர் வழங்குகிறது.*

மா: *தொத்துச் செடிக்கு உணவு எங்கிருந்து கிடைக்கிறது? அது, தான் வளர்கிற மரத்திலிருந்து தானே உணவைக் களவு செய்து எடுக்கவேண்டும்?*

தந்: *இல்லை; இல்லை. அதற்குத் திருட்டுத் தனமே கிடையாது. தன்னைச் சுமந்து நிற்கும் மரத்திற்கு அது நன்றிகெட்ட செயல் ஒன்றும் செய்வதில்லை. அது தானே வருந்தி உழைத்துத் தனது உணவைத் தேடிக்கொள்கிறது.*

மா: *இது மிக ஆச்சரியமாகத்தா னிருக்கிறது. இச் செடி, தன்னைத் தாங்கும் மரத்திலிருந்தும் உணவை எடுப்பதில்லை; பூமியோடு தொடர்புற்றிருக்கவும் இல்லை; அங்ஙனமாயின், இது தனது உணவை எங்கிருந்து, எவ்விதம் தேடிக் கொள்ளுகிறது?*

தந்: *தாவரங்களின் உணவிற்கு* **மாப்பொருள்** *என்று பெயர். அதனை அவைகளே பக்குவஞ் செய்து கொள்ளுகின்றன. மாப்பொருளை உண்டுபண்ணுவதற்குத் தண்ணீரும் கரியமில வாயுவும் அவசியம். தண்ணீரை வேர்கள் பூமியிலிருந்து எடுத்து இலைகளுக்கு அனுப்பிக் கொடுக்கின்றன. கரியமில*

வாயு நம்மைச் சூழ்ந்துள்ள காற்றில் சிறிய அள வினதாகக் காணப்படுகிறது. இலைகள், அதனை எடுத்துத் தண்ணீரோடு கலந்து, இரசாயன முறைப் படி மாப்பொருளாக மாற்றுகின்றன. இதுவே பெரும்பாலான தாவரங்களிலும் காணப்படும் முறை. ஆனால், தொத்துச் செடிக்குப் பூமியிலி ருந்து தண்ணீரை எடுக்க முடியாதாகையால், அது காற்றில் ஆவி வடிவத்தில் கலந்திருக்கும் தண் ணீரை எடுத்துத் தனது இலைகளின் உதவியால் மாவைப் பக்குவஞ் செய்து கொள்ளுகிறது.

மா: காற்றிலிருந்து தண்ணீரை அது எங்ஙனம் உட்கொள்ளுகிறது?

தந்: அதன் அடிப் பாகத்திலிருந்து, இளம் பச்சை நிறத்தில் சில விழுதுகள் தோன்றி, காற் றில் தொங்கிக் கொண்டிருப்பது தெரிகிறதா? அவைதாம் அச் செடியின் வேர்கள். உட்பாகம் கடற் பஞ்சு போல ஆயிரக் கணக்கான காற்றறை களை உடையதாக இருக்கின்றது. மை யொற்றுங் காகிதம் மையை விரைவில் உறிஞ்சி எடுத்துக் கொள் வதைப்போல, இத் தொலியும், காற்றிலிருக்கும் நீராவியை உறிஞ்சி எடுத்து, இலைகளுக்கு அனுப் பிக் கொடுக்கிறது.

மா: அப்பா! இது ஒரு ஆச்சரியமான செடி தான்! இனி மிருகக்காட்சி சாலைக்குச் செல்வோம் வாருங்கள். அதோ கூட்டிற்குள்ளிருந்து தலையை வெளியே நீட்டிக்கொண்டிருக்கிறதே, அது என்ன மிருகம்?

தந்: அதுதான் ஒட்டகம். பெர்ஸியா, அரேபியா, சிரியா, வடஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் ஒட்டகம் மிகுதியாக வசிக்கிறது. அங்குள்ள பெரிய பாலை வனங்களைக் கடந்து செல்வதற்கு, அந் நாட்டார் இதனையே வாகனமாக உபயோகிக்கிறார்கள்.

மா: அதன் கால்கள் ஏன் நீளமுடையவையாய் இருக்கின்றன ?

தந்: மணல்வெளிகளில் விரைவாக ஓடுவதற்கு அனுகூலமாக, அதன் கால்கள் நீளமாக இருக்கின்றன.

மா: மணலில் ஓடும்போது, அதன் பாதங்கள் புதைந்து விடாவோ ?

தந்: அதன் பாதங்களின் அடிப் பாகத்தை உற்றுப் பார். மெத்தைபோன்ற ஓர் சதைத்திரள் காணப்படுகிறதல்லவா ? ஒட்டகத்தின் கால் மணலிற் புதைந்து விடாதபடி அது காத்துக் கொள்ளுகிறது.

மா: அதன் கழுத்து அக் கால்களை ஒத்த நீளமுடையதாக இருப்பது எதற்காக ?

தந்: ஒட்டகம், புல், தழை முதலியவற்றைத் தின்று ஊற்று நீரைப் பருகுகிறது. பூமியில் வளரும் புல்லை மேய்வதற்கும், மரக்கிளைகளிலிருந்து இலைகளைப் பறித்துத் தின்பதற்கும், ஊற்றுநீரைக் குடிப்பதற்கும் நீள்மான கழுத்து இன்றியமையாததல்லவா ? கால்கள் நீளமாகவும், கழுத்து மட்டும் குட்டையாகவும் இருந்தால், அதற்குப் பூமியிலிருந்து எந்தப் பொருளையாவது எடுத்துத் தின்ன

முடியுமா? அதனால்தான், கால்களுக்குப் பொருத்தமான கழுத்து, அதற்கு அமைந்துள்ளது.

மா: பாலை நிலத்தில் ஒட்டகத்திற்குப் புல்லும், தண்ணீரும் எங்கிருந்து கிடைக்கும்?

தந்: பாலை நிலத்தில் ஆங்காங்கே சிறு சோலைகள் காணப்படும். அச் சோலைகளில் புல்லும் தண்ணீரும் கிடைக்கும். மேலும் ஒட்டகத்திற்குச் சில நாட்களுக்குப் போதுமான உணவையும், தண்ணீரையும் சேகரித்து வைத்துக்கொள்ளுவதற் கேற்ற உறுப்புக்கள் அதன் உடலில் அமைந்துள்ளன.

மா; அதோ! அந்த மரத்தின் நிழலில், அடிமரத்தோடு சங்கிலியால் பிணிக்கப்பட்டு நிற்கும் யானையைப் பார்க்கலாம் வாருங்கள்.

அப்பா! யானையின் கால்கள் நீளமாக இருக்கின்றன. ஆனால் கழுத்துக் குட்டையாக அல்லவா இருக்கிறது?

தந்: ஆம். உண்மைதான். அதற்காகத்தான் அதற்கு இறைவன் தும்பிக்கையைக் கொடுத்திருக்கிறான். அதன் உதவியால், யானை தன் உணவை எடுத்து வாயில் போட்டுக்கொள்ளுகிறது.

மா: மற்ற மிருகங்களுக்கு இத் தும்பிக்கை இல்லையே. யானைக்குமட்டும் இது எங்ஙனம் தோன்றியுள்ளது?

தந்: நமக்கு மூக்கும், மேலுதடும் இருக்கின்றனவல்லவா? இவ்விரு உறுப்புகளும் யானைக்கு ஒன்றாகப் பொருந்தி நீண்டு வளர்ந்து தும்பிக்கையாகத்

தொங்குகின்றன. அதன் நாசித் துவாரங்க ளிரண்டும் தும்பிக்கையின் நுனியில் அமைந்துள்ளன. அதற்கு மேல் உதடு என்று தனியாக வேறில்லை.

மா: ஆடு மாடுகளுக் கெல்லாம் தலையில் உச்சியி லிருந்து கொம்புகள் முளைக்கின்றன. ஆனால், யானையின் கொம்புகள் அதன் வாய்க்குள்ளிருந்து வெளி வருவது எதனால்?

நந்: யானையின் கொம்புகள் என்று நாம் சொல்பவை உண்மையில் அதன் பற்களேயாம். நமது மேல்வாயில் முன் பக்கத்தில் நான்கு உளி போன்ற பற்கள் இருக்கின்றன வல்லவா? யானைக்கு அவற்றைப் போல இரண்டு பற்கள் உள்ளன. அவ் விரு பற்களும் தந்தமாக நீண்டு வளர்ந்திருக்கின்றன.

மா: நீண்டு வளர்ந்த தந்தங்கள் யானைக்கு எங்ஙனம் பயன் படுகின்றன?

நந்: கிழங்கு, வேர் முதலியவற்றை அகழ்ந் தெடுப்பதற்கும், மரங்களை வேரோடு குத்தித் தள்ளு வதற்கும், கிளைகளையும் மடல்களையும் சுமந்து செல்வ வதற்கும், இவை எல்லாவற்றையும்விட முக்கியமாகத் தன்னை எதிர்த்துத் தாக்க வரும் வேங்கை முதலிய கொடிய விலங்குகளைக் குத்தி வீழ்த்துவதற்கும் இக் கொம்புகள் இன்றியமையாதவை. தொத்துச் செடிக் குத் தொங்கும் விழுதுகளும், ஒட்டகத்திற்கு நீண்ட காலும், நீண்ட கழுத்தும், உணவையும் நீரையும் சேகரித்து வைப்பதற்கேற்ற உள்ளுறுப்புக்களும் எங்ஙனம் அவசியமோ, அங்ஙனமே யானையின் வாழ்க்கைக்குத் துதிக்கையும், கூர்த்து நீண்ட

கொம்புகளும் அவசிய மாகின்றன. ஒவ்வொரு உயிர்ப் பொருளின் வாழ்க்கைக்குத் தேவையான உறுப்புக்களை யெல்லாம் இயற்கையே படைத்து உதவுகின்றதைப் பார்த்தாயா?

மா: ஆகா! படைப்பின் விந்தையே விந்தை!

தந்: மாணிக்கம்! நேரமாகி விட்டது போய் வரலாம் வா.

அரும்பொருள்:—விந்தை - அதிசயம். அடர்ந்து - நெருங்கி. படி - பூமி. இயைந்து - பொருந்தி. தொத்துதல் - பற்றுதல். முரண் - வேறுபாடு. பிணித்தல் - கட்டுதல். மருங்கு - பக்கம். அகழ்ந்து - தோண்டி.

வினாக்கள்

1. மாணிக்கமும் அவன் தந்தையும் கண்ட பூங்கா வனக் காட்சிகளை எழுதுக.

2. தொத்துச் செடி — பெயர்க் காரணம் கூறுக.

3. அது காற்றில் கலந்துள்ள நீரை எவ்வாறு உட் கொள்ளுகிறது?

4. ஒட்டகத்தின் கால்கள், பாதம் இவற்றின் அமைப்பை விளக்குக.

5. ஒட்டகத்தின் கழுத்து நீண்டிருப்பது ஏன்?

6. யானைக் கொம்புகள் என்பது எவற்றை? அவற் றின் உபயோகங்கள் யாவை?

பயிற்சி

பிரித்தெழுதுக:

பாசிலை, தண்ணிழல், பன்னிறம், தீந்தேன், இன்னிசை, வெண்ணிறம்

இலக்கணம்

நேர் கூற்று, அயற் கூற்று, "மாணிக்கம்! நேரமாகி விட்டது; போய் வரலாம் வா" என்று கூறினார் தந்தை. இவ் வாக்கியத்தில் மேற்கோள் குறிகளிட்ட சொற்கள் தந்தையால் கூறப்பட்டவை. இம் மாதிரி கூறுவது நேர் கூற்று எனப்படும். மாணிக்கத்தை நேரமாகி விட்டமையால் போய் வரவேண்டும் என்று அழைத்தார் தந்தை—என்று அதை மாற்றி யமைத்தால் அது அயற் கூற்றாகும்.

இப் பாடத்திலிருந்து நேர் கூற்றிற்கும், அயற் கூற்றிற்கும் உதாரணங்கள் தருக.

சொல் அல்லது பதம்

சொற்கள் பகுபதம், பகாப் பதம் என இருவகைப் படும். பகுபதம்: பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களாகப் பகுக்கக் கூடிய பதம் பகுபதம் எனப்படும். அது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இருவகைப் படும்.

உதாரணம்—அறிஞன் (அறி + ஞ் + அன்) பெயர்ப் பகுபதம். உண்டான் (உண் + ட் + ஆன்) வினைப் பகுபதம்.

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பன பகுபத உறுப்புக்களாம். பகுதி: பகுபதத்தின் முதலில் நிற்கும் உறுப்பு, முதல் நிலை அல்லது பகுதி எனப்படும். (உதாரணம்:- வந்தான் - வா - பகுதி, உண்டான் - உண் - பகுதி)

விகுதி: பகுபதத்தின் இறுதியில் நிற்கும் உறுப்பு, இறுதிநிலை அல்லது விகுதி எனப்படும். (உதாரணம்:- கலைஞன் - அன் - விகுதி)

இடைநிலை: பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்கும் உறுப்பு இடை நிலை எனப்படும். (உதாரணம்:- அறிஞன் - ஞ் இடைநிலை, உண்டான் - ட் இடைநிலை)

பகாப்பதம்: பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களாகப் பிரிக்க முடியாத சொற்களுக்குப் பகாப்பதம் என்று பெயர். (உதாரணம்:- கல், மண்)

4. இமயமலை

[ஈ. பண்டார நம்பியார்]

இந்தியாவிற்குச் சிரசென விளங்குவது இமய மலை. இம் மலையின் உயர்ந்த பாகங்கள் எப்பொழுதும் பனியால் மூடப்பட் டிருப்பதால் 'பனி மலை' என்று பொருள்படும் 'இமயமலை' என்னும் பெயர் இதற்கு வழங்குவதாயிற்று. 'இமம்' என்ற சொல்லுக்குப் 'பனி' என்பது பொருள். இதனைப் 'பனி வரை, இமாசலம், இமயம், இமாலயம்' என்றெல்லாம் கூறுவதுண்டு.

இமயம் உலகிலுள்ள மலைகள் யாவற்றிலும் மிக உயர மானது. இம்மலை, கீழ் மேலாக இரண்டாயிரம் மைல் நீண்டு பிறைச் சந்திர வடிவில் வளைந்து கிடக்கின்றது. இதன் அகலம் எவ்விடத்திலும் இரு நூறு மைல்களுக்குக் குறைவாயில்லை. அஸ்ஸாமிலும், வேறு சில இடங்களிலும் ஐந்நூறு மைல்கள் வரை அகன்று கிடக்கிறது. இதன் உயரம் ஐந்து மைல்கள் என்று கணக்கிட் டிருக்கின்றனர்.

இமயமலையில் உலக மலைகள் யாவற்றிலுமுள்ள சிகரங்களைக் காட்டிலும் உன்னதமான சிகரங்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் எவரெஸ்ட் மிக உயரமானது. அது கடல் மட்டத்திலிருந்து 29,000 அடி உயர முடையது. இன்னும் காஞ்சன சிருங்கம், தவளகிரி முதலிய பல சிகரங்கள் இம் மலையில் உண்டு. இச் சிகரங்களின் உச்சியை அடைந்து வெற்றிக் கொடி நாட்ட விரும்பி

இத்தாலியிலும், ஜெர்மனியிலும், இங்கிலாந்திலு மிருந்து ஆண்டு தோறும் வீரர்கள் பலர் வந்த வண்ணமாக இருக்கின்றனர். ஆனால், இதுவரை யிலும் இத் துறையில் வெற்றி கண்டவர் யாருமிலர். இம் மலை அனைவருடைய முயற்சியையும் தோல்வி யுறச் செய்து வெற்றிக் களிப்புடன் தன்னில் ஒப்ப தும் மிக்கதும் இலதாய் இலங்குகின்றது. என்ற ஆம், இம்முயற்சி இன்னும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.



இமயமலை ஒரு தனி மலையன்று. பல மலைத் தொடர்களின் அடுக்கென்றே அதனைக் கூறுதல் வேண்டும். அவைகள் பல்வேறு இடங்களில் பல பல பெயர்களோடு வழங்குகின்றன. அவை அனைத் திற்கும் பொதுவாக வழங்கும் பெயர் இமயமலை என்பது.

இம் மலை இந்திய நாட்டிற்கு வற்றா வளத்தை வாரி வழங்குகின்றது. இம் மலையிலிருந்துதான்

பாரத நாட்டை ஊட்டி வளர்க்கும் சிந்து, கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா முதலிய புனித நதிகள் தோன்றுகின்றன. பிற நாடுகளின் வளத்திற்கும் இம் மலை உதவுகின்றது. துருக்கி ஸ்தானத்தில் பரந்து பாயும் சர்டேரியா, ஆமுடேரியா என்னும் நதிகள் இம் மலையின் வட மேற்கில் உற்பத்தியா கின்றன. பர்மா நாட்டில் வளம் கொழிக்கும் மீகாங், சால்வின், ஐராவதி என்னும் நதிகளும் இம் மலை யின் வட கிழக்குப் பகுதியிலிருந்து தான் தோன்று கின்றன. மத்திய ஆசியாவில் செல்லும் 'தாரிம்' என்னும் நதியும் இமயத்தின் ஒரு பகுதியான கார கோரம் மலைத் தொடரிலேயே உற்பத்தி யாகின்றது.

இம் மலை சிறிய இமயம், பெரிய இமயம், எல்லை கடந்த இமயம் என்று மூன்று பிரிவுகளுடைய தாக இருக்கிறது. பெரிய இமயம் என்றைக்கும் உருகாத பனிக் கட்டியால் மூடப்பட் டிருக்கும். இதன் தென் சாரலில் திருக்கேதாரம், பதரிகா சிரமம், கங்கோத்தரி, யமுனோத்தரி, அமர நாதம், பசு பதி நாதம் முதலிய ஆலயங்கள் பல அமைந்துள் ளன. இவற்றைத் தரிசிப்பதற்கு ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்று வருகின்றனர்.

இந்துக்கள் சிவ பெருமானின் உறைவிடம் என்று கருதுகின்ற கயிலாயம் எல்லை கடந்த இம யத்தில் இருக்கின்றது. கயிலாயத்தின் அருகில் 'மானச சரோவரம்' என்னும் அழகிய ஏரி ஒன்று இருக்கின்றது. இது உலகிலுள்ள ஏரிகள் அனைத் திலும் அழகு மிக்கது என்று உலகம் சுற்றியவர் கள் கூறுகின்றனர். கயிலாயமும் மானச சரோவர

மும் சேர்ந்து 'கௌரி சங்கர்' என்று கூறப்படும். கயிலாயத்தின் மீது இந்திய மக்கள் கொண்டுள்ள பக்தி இணையற்றது. ஆதலின் எத்தகைய சிரமத்தையும் பாராது ஆண்டுதோறும் மக்கள் பலர் சென்று கயிலையைத் தரிசித்து வருகின்றனர்.

இமயமலையை இறைவனின் உறைவிடம் என்று இந்திய மக்கள் கொண்டாடுவதைப் போல், வெளி நாட்டினர் இயற்கை அன்னையின் இல்லம் என்று மதிக்கின்றனர். வெள்ளியை உருக்கி வார்த்தாற் போன்ற பனிப் பரப்பும், நிர்மலமான நீலவானும் பார்ப்பவர்களைப் பரவசப் படுத்துகின்றன. கதிரவன் தன் செங் கதிர்களை வீசும்போது இமயம் பொன்னிறம் பெற்று விளங்குவது காண்பவர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்கின்றது. உலகம் முழுவதும் காணப்படும் தாவரங்களையும், பறவைகளையும், மிருகங்களையும் ஒருங்கே கொண்டு விளங்கும் இமயத்தின் எழிலைக் கண்டு களிப்புறாதவர் யாரே!

இமயமலையின் அடிவாரத்தில் நேபாளம், பூதான் முதலிய சுதந்திர நாடுகள் சிறந்து விளங்குகின்றன. கோடைக் காலத்தில் மக்கள் சுகத்திற்காகச் சென்று வசிக்கும் இடங்கள் பல இம் மலை அடிவாரத்தில் இருக்கின்றன. அவற்றுள் டார்ஜிலிங், சிம்லா முதலிய இடங்கள் முக்கியமானவை. இம் மலையில் கடல் மட்டத்திலிருந்து 17,000 அடி வரை உயர்ந்த இடங்களில் மக்கள் வசிக்கிறார்கள். அதற்கு அப்பாலுள்ள இடங்களில் சித்தர்களும் பக்தர்களும் வசிப்பதாக நம்மவர்கள் நம்புகிறார்கள்.

இம் மலையில் பல கணவாய்கள் காணப்படுகின்றன. அவற்றுள் கைபர் கணவாய் வரலாற்று முக்கியம் பெற்றுள்ளது. இக் கணவாயின் வழியாகப் பிற நாட்டினர் பலர் இந்தியாவில் பிரவேசித்ததாக வரலாற்று நூல் கூறுகின்றது.

பண்டைக் காலத்தில் தமிழ் வேந்தர் பலர், இமயம் வரை படையெடுத்துச் சென்று வடநாடு முழுதும் ஆணை செலுத்தினர் என்ற செய்தி சங்க இலக்கியங்களால் அறியப்படுகின்றது. அதற்கு அறிகுறியாக அவர்கள் இமயமலையில் தமது இலச்சினையைப் பொறித்துள்ளனர். நெடுஞ் சேரலாதன் என்ற சேர மன்னன் 'விடர்ச் சிலை பொறித்தவன்' என்று புகழப்படுகிறான். இதிலிருந்து இவன் இமயமலை வரை சென்று வெற்றி பெற்று அம் மலையில் தன் இலச்சினையாகிய வில்லைப் பொறித்து வந்தான் என்று தெரிகிறது. இவ்வாறே திருமாவளவன் என்ற சோழ மன்னன் ஒருவனும் இமயத்தில் தன் புலிக் கொடியைப் பொறித்து மீண்ட செய்தி அறியப்படுகிறது. பாண்டியன் இமயத்தில் மீன் முத்திரையைப் பொறித்த வரலாறுமுண்டு. இவ்வாறு மூவேந்தர் வெற்றிச் சின்னங்களையும் தாங்கிக் கொண்டு இமயம் வானுற வோங்கி வளம் பெற்று நிற்கின்றது.

அரும்பொருள் :— சிரசு - தலை. அகலம் - வீதி. சிகரம் - மலை உச்சி. புனித - பரிசுத்தமான. வரலாற்று நூல் - சரித்திர நூல். ஆணை - ஆட்சி. இலச்சினை - அடையாளம். எழில் - அழகு

வினாக்கள்

1. இமயமலை - பெயர்க் காரணம் கூறுக.

2. இமயமலையின் வேறு பெயர்கள் யாவை?

3. இமயமலையின் கிடப்பைக் கூறுக.

4. இமயமலையி லுள்ள உன்னத சிகரம் எது? அதன் உயரம் என்ன?

5. இமயத்தில் உற்பத்தியாகும் நதிகள் யாவை?

6. இம் மலையின் மூன்று பிரிவுகள் யாவை?

7. இந்துக்கள் இம் மலையை எப்படிக் கொண்டாடு கின்றனர்?

8. இம் மலை அடிவாரத்திலுள்ள நாடுகள் யாவை?

9. தென்னாட்டு மன்னர் தம் வீரம் விளங்க முன் னாளில் செய்ததென்ன?

5. காற்பந்து விளையாட்டு

[எஸ். குமரவேல் M.A.,L.T.]

மணி: நண்ப! எங்கு விரைவாகச் செல்கின்றாய்? "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு" என்பதற் கொப்ப, செல்லும் விரைவில் அருகில் நிற்கும் நண்பனைப் பாராதது போலும் செல்கிறாயே!

முத்து: மணி! இன்று எமது பள்ளி மாணவர்களுக்கும், 'சென்ற் தாமஸ்' பள்ளிமாணவர்களுக்கும், ஒரு காற்பந்துப் போட்டி விளையாட்டு நடைபெறப் போகின்றது. திறம்பெற்ற பலர் ஆடப் போகின்றனர். நீயும் அவசியம் வருதல் வேண்டும். போகலாம் வா!

மணி! காற்பந்து விளையாட்டு முறையைப்பற்றி, நான் இதுவரையில் ஒன்றும் தெரிந்துகொள்ள வில்லையே! தெளிவாக விளக்குவாயேல் வருகிறேன்.

[நீண்டதொரு ஊதுகுழல் ஓசை கேட்கின்றது.]

முத்து: நண்ப! விளையாட்டு ஆரம்பமாகும் நேரமாயிற்று. ஆட்டத்திற்குத் தயாராகுமாறு ஆடுவோரை அழைக்கும் கட்டளைதான் அந்த ஊதுகுழலோசை.

[இருவரும் விளையாட்டு இடம் நோக்கி விரைகின்றனர்.]

மணி: இது என்ன? மாணவர் பலரும் அணிவகுத்தாற் போன்று நிற்கின்றனரே! இதன் கருத்தென்ன?

முத்து: ஒவ்வொரு பக்கத்திற்கும் பதினொருபேர் உளர். (ஒரு பக்கத்து மாணவர்களைச் சுட்டிக்காட்டி)

இதோ நிற்கும் மாணவர்கள்தாம் எமது பள்ளிமாணவர்கள். அருகில் இருந்து உற்று நோக்குவோரெல்லாம், அவரை உற்சாகப் படுத்தி, வெற்றி தேடுவதற்காக, முனைந்து நிற்கும் அவரது பள்ளி நண்பர்கள். பார்! அதோ! பந்தைக் காலால் எடுத்துக் கொண்டு பாய்ந்து செல்லும் மாணவன்தான் முன்

வரிசை நடுவிலாடும் எமது கோவிந்து. அவனைத் தொடர்ந்து இருபுறங்களிலும் ஓடுவோர்தாம், முன் வரிசை உள் விளையாடுவோர். பந்தை நோக்கிக் கொண்டே மைதானத்தின் இரு அந்தங்களிலும் ஓடுவோர், முன் வரிசை வெளியி லாடுவோர். இவர்கள் ஐவரையும் பொதுவாக முன்வரிசையி லாடுவோர்

என்று கூறலாம். பந்தைக் கொண்டு சென்று, எதிர்ப் பக்கத்து அணியைச் சிதைத்து, பந்தைக் குறிக்கோளில் செலுத்த வேண்டியது இவர்களது வேலை. இவர்களுக்குப் பின்னால் மூன்று வரிசைகளாக நிற்கிறவர்கள், தங்களைக் கடந்து எதிர்ப் பக்கத்தி லுள்ளோர் பந்தைக் கொண்டு செல்லாதவாறு தடுப் பதற்காக நிற்கக் கூடியவர்கள்.

மணி: நண்ப! குறிக்கோள் என்று கூறினையே அதன் பொருளென்ன?

முத்து: (மைதானத்தின் அந்தத்தில் நிற்கும் இரு கம்பங்களைச் சுட்டிக்காட்டி) அதோ நிற்கும் அந்த இரண்டு கம்பங்கள்தாம் குறிக்கோள் கம்புகள். அவற்றினுள் பந்தைச் செலுத்தினால், செலுத்தியவர் ஒரு 'கோள்' பெற்றவராகக் கருதப்படுவர்.

(பந்தைக் கொண்டு சென்ற கோவிந்து, தன்னை எதிர்த்து வந்த ஒருவனை ஏமாற்றிக் கடத்திச் சென்று, பின் பலர் தன்னை எதிர்த்து வரவே, அவர்களைக் கடத்திச் செல்வது முடியாது என்று கருதி எதிர்ப்பின்றி, பந்தை எதிர்நோக்கி வெளிப்புறத்து நிற்கும் தனது நண்பன் வேலு விடம் தூக்கிவிடுகிறான். எதிர்ப்பக்கத்துள்ளோர் சிலர் வேலுவை நோக்கி ஓடுகின்றனர். வேலுவும் தன்னை நோக்கி வந்த பந்தைத் தன் தலையால் தாங்கிக் காலால் மிதித்துப் பிடித்து உருட்டிக்கொண்டு எதிர்ப் பக்கத்துக் குறிக்கோளை நோக்கிப் பாய்ந்து செல்கிறான்.)

மணி: நண்ப! அதிசயமாக இருக்கின்றதே! கால்பந்து விளையாட்டில் தலைகொண்டு தடுத்தல் தகுமா?

முந்து: தலைகொண்டு தடுத்தல் பந்து விளையாட்டில் சிறந்ததொரு முறை. கைகளைத் தவிர மற்றெல்லா உறுப்புக்களாலும் பந்தைத் தடுக்கலாம். பந்தைக் குறிக்கோளுக்குள் புக வொட்டாதவாறு தடுத்து, மைதானத்திற்கு வெளியே செலுத்தியமையால், எதிர்ப்பக்கத்தார் மூலையிலிருந்து அடித்துவிடும் பந்தைத் தலையால் தடுத்துக் குறிக்கோளினுள் செலுத்து முறை, கண்டு வியக்கத்தக்க தாகும்.

(பந்தைக் கொண்டு சென்ற வேலு, எதிர்ப்பக்கத்து நடுவில் நின்று ஆடும் ஜாண், தன்னை எதிர்த்துவரவே, அவனைக் கடத்திச் செல்வது இயலாது எனக் கருதிச் சிறிது தயங்குகிறான். ஜாண் எதிர்ப்பக்கத்துத் தலைவன்; பின்வரிசை நடுவில் நின்று விளையாடுவதில் தனக்கு நிகரில்லை எனப் பெயர் பெற்றவன்; எத்தனையோ விளையாட்டுக்களில் எதிர்ப்பைச் சாதுரியமாகச் சமாளித்துத் தன் பக்கத்திற்கு வெற்றி கண்டவன். ஒரு கணம் தயங்குகின்றான் வேலு; அங்குமிங்கும் நோக்குகின்றான். இதற்கிடையில் கோவிந்தும், உள் விளையாடுவோரில் வேறொரு சிறுவனும் பந்தை எதிர்நோக்கிக் குறிக்கோளின் எதிர்ப்புறத்தில் வந்துவிட்டனர். வேலுவின் முகத்தில் ஒரு மகிழ்ச்சிக்குறி தோன்றுகின்றது. உடனே அவன், பந்தைக் கோவிந்தினிடம் தட்டிவிடுகின்றான். ஜாணின் முகத்தில் ஏமாற்றம். அருகில் நிற்போர் ஆரவாரஞ் செய்து கோவிந்தினை ஊக்குகின்றனர். அவனும், மற்றுள்ளோர் தன்னிடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு மாற்றமில்லாது, பந்தைக் கொண்டுசென்று, எதிர்ப்பக்கத்திலிருந்து தடுப்பதற்கு வந்த இருவரையுங் கடந்து சென்று குறிக்கோளை நெருங்கிவிட்டான். குறிக்கோளில் நிற்போன் பந்தைத் தடுப்பதற்குத் தயாராகிவிட்டான்.

கண் இமைப்பதற்குள் விளையாட்டைக் கண்காணிப்போரது ஊதுகுழலிலிருந்தும் ஒரு ஓசை புறப்படுகின்றது. பந்து குறிக்கோளில் சென்றுவிட்டது. மாணவர்களது ஆரவாரத்திற்கோர் அளவில்லை)

மணி: மிகவும் சாமர்த்தியமாக ஒரு கோள் எடுத்து விட்டானே! இனி மேல் என்ன?

முத்து: இன்னும் இது போன்று சுமார் ஐம்பது நிமிடங்கள் விளையாட்டு நடைபெறும். அதற்கிடையில் இது போன்ற 'கோள்கள்' எந்தப் பக்கத்தினர் கூடுதலாக எடுக்கிறார்களோ, அவர்களே வெற்றி பெற்றவராகக் கருதப்படுவர்.

(மீண்டும் விளையாட்டுத் தொடங்குகின்றது. எதிர்ப் பக்கத்துள்ளோர் தாங்கள் பெற்ற கோளைத் திரும்பக் கொடுப்பதற்குத் தங்களால் இயன்றவரை முயல்கின்றனர். அவர்களது எதிர்ப்பைப் பின் வரிசையில் நிற்போர் அலட்சியமாகத் தடுத்து நிற்கின்றனர். இவ்வாறு அதற்கு மேல், 'கோள்' ஒன்றுமின்றிக் கண்காணிப்போரது ஊது குழலினின்றும் புறப்பட்ட நீண்ட ஓசையோடு விளையாட்டு முடிகின்றது. மாணவர்கள் யாவரும் சரேலென்று மைதானத்திற்குள் புகுந்து, தங்களுக்கு வெற்றி தேடித் தந்த கோவிந்தனையும், அவனுக்குத் துணை நின்ற வேலுவையும், மற்றுமுள்ளோரையும் பாராட்டுகின்றனர்.)

முத்து: விளையாட்டு இத்துடன் முடிந்தது. இனி நாம் திரும்பலாம்.

மணி: இன்று நடந்த விளையாட்டால் நான் மிகவும் இன்புற்றேன். இதுபோன்ற விளையாட்டுக்

கள் இனி நடைபெறுமானால், என்னையும் அழைத்துச் செல்.

[இருவரும் வீடு திரும்புகின்றனர்.]

வினாக்கள்

1. காற் பந்தாடுவோரை ஆட்டத்திற்குத் தயாராகுமாறு கட்டளை இடுவது எங்ஙனம்?

2. காற் பந்தாட்டத்தில் பக்கத்திற்கு எத்தனை பேர் நிற்கின்றனர்?

3. ஒவ்வொரு பக்கத்தி லுள்ளோரும் எவ்வாறு அணிவகுத்து நிற்கின்றனர்?

4. குறிக்கோள் என்றால் என்ன?

5. காற் பந்து விளையாட்டில் கண்டு வியக்கத் தக்க முறை யாது?

6. கோவிந்து, வேலு இவர்களது விளையாட்டுத் திறமையை விளக்குக.

பயிற்சி

ஒரே வாக்கியமாக எழுதுக.

1. கோவிந்து இவர்களுள் ஒருவன்.
2. அவன் சாதுரியமாக விளையாடினான்.
3. அவன் அன்றைய வெற்றிக்குக் காரணமானான்.

இலக்கணம்

செய்கின்ற, ஓடி, உண்டான்—இவை மூன்றும் வினைச் சொற்கள். இவற்றில் முன்னைய இரண்டும் முற்றுப் பெறவில்லை. மூன்றாவது வினை முடிந்திருக்கிறது. முடிந்த வினைக்கு முற்று வினை என்று பெயர். முற்றுப் பெறாத வினை, எச்ச வினை என்று கூறப்படும்.

முற்றுப் பெறாத வினைகள் தாமாகவே முடியாமல் பிற சொற்களைத் தழுவி நிற்கும். 'செய்கின்ற' என்னும் எச்சம், பெயர்ச் சொல்லையே தழுவுமாதலால், பெயரெச்சம் எனப்படும். ஓடி என்னும் எச்சம், வினைச்சொல்லையே தழுவுமாதலால், வினையெச்சம் எனப்படும்.

இப் பாடத்திலிருந்து வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் இவற்றிற்கு உதாரணங்கள் எடுத்துக் கூறுக.

நிகழ்ச்சியை அப்படியே கூறும் வினைச்சொல், உடன்பாடு எனப்படும். அதை மறுத்துக் கூறும் வினைச்சொல் எதிர் மறை எனப்படும்.

உடன்பாடு		எதிர்மறை
சென்றான்	—	சென்றிலன்
படித்தேன்	—	படித்திலேன்
நின்ற	—	நில்லாத
உண்ண	—	உண்ணாமல்
வந்தான்	—	வந்திலன்
வந்தாய்	—	வந்திலை
வருவாள்	—	வாராள்

கட்டுரை

உங்களுக்கு விருப்பமான ஒரு விளையாட்டைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

6. நமது பற்கள்

[சுவாமிநாதன், B.A., L.T.]

நல்ல வயது வந்த மனிதர்களுக்கு முப்பத்திரண்டு பற்கள் உண்டு. அவற்றுள் பதினாறு பற்கள் மேற்றாடையிலும், பதினாறு பற்கள் கீழ்த் தாடையிலும் அமைந்துள்ளன. ஒவ்வொரு பல்லிற்கும் சிகரம், கழுத்து, வேர் என்று மூன்று பாகங்களுண்டு. வேர் ஒன்றாகவோ, ஒன்றுக்குக் கூடுதலாகவோ இருக்கும். இவ்வேர்கள், தாடை எலும்புகளி லுள்ள குழிகளில் பலமாகப் பொருந்தி யுள்ளன. பல், **தந்தினி** என்ற மிகக் கடினமான பொருளா லானது. பல்லின் சிகரமானது, ஓர்விதப் பளபளப்பான பொருளால் மூடப்பட்டிருக்கிறது. இது **சவிகம்** அல்லது எனாமல் எனப்படும். இது பல்லிற்கு நல்ல தோற்றத்தைக் கொடுக்கிறது. பல்லின் கழுத்துப் பாகமானது ஈறினால் சூழப்பட் டிருக்கிறது. பல்லின் வேரை இலேசான மஞ்சள் நிறமுடைய செமன்று போன்ற பொருள் பொதிந்திருக்கிறது. இது, பல்லை எலும்புக் குழியில் பலமாகப் பொருத்தி வைக்கிறது. பல்லின் நடுப்பாகம் பொள்ளலானது. வேரின் நுனியில் ஓர் சிறிய துவாரம் இருக்கிறது. இதன் வழியாக இரத்தக் குழாய்களும், உணர்ச்சி நரம்புகளும் செல்கின்றன. பல்லின் பொள்ளலான பாகம் **பற்சோறு** என்று கூறப்படுகிறது.

பற்களை, அவைகளின் வடிவத்திற்கு ஏற்றபடியும், வேலைக் கேற்றபடியும் பல வகைகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு தாடையிலும் முன்பாகத்தில், நான்கு

பற்கள், உளியின் வடிவத்தில் இருக்கின்றன. இவை **உளிப் பற்கள்** எனப்படும். இவை, பொருள்களைக் கடித்துத் துண்டாக்குவதற்குப் பயன்படுகின்றன. உளிப்பற்களை யொட்டி, அவைகளின் வெளிப்புறமாகத் தாடைக்கு இரண்டாக நான்கு கூர்மையான பற்கள் இருக்கின்றன. இவை, **கோரைப் பற்கள்** என்று கூறப்படுகின்றன. இவைகளுக்குப் பின் இருக்கும் பற்கள், அகன்று தட்டையான மேடு பள்ளங்களை யுடைய சிகரங்களை யுடையன. இவை உணவை அரைத்துப் பசுமை யாக்குவதற்கு உதவுகின்றன. இவை **அரைக்கும் பற்கள்** என்று கூறப்படுகின்றன.

குழந்தை பிறந்த ஆறு அல்லது ஏழாவது மாதத்தில், பற்கள் முளைக்க ஆரம்பிக்கின்றன. இரண்டரை வயதிற்குள்ளாக இருபது பற்கள் தோன்றுகின்றன. இவை, **பாற்பற்கள்** எனப்படும். குழந்தைக்கு ஆறு அல்லது ஏழு வயதாகும்போது, பாற் பற்கள் விழ ஆரம்பிக்கின்றன. அவை இருந்த இடத்தில் நிலையான பற்கள் தோன்றுகின்றன. சிறு குழந்தைகளின் பற்களை நன்றாகக்கவனித்துச் சுத்தமாக வைக்க வேண்டும். அவைகளுக்குப் பதிலாக நிலையான பற்கள் தோன்றுவது வரை அவைகள் நிற்கவேண்டும். இந்த நிலையில்லாப் பற்களை நல்ல முறையில் கவனியாமல் தான், அநேகருடைய நிலையான பற்கள் விகாரமாயும், கோணலாயும் இருக்கின்றன. ஆதலின், பாற் பற்களை நல்ல முறையில் கவனிக்க வேண்டுவது அவசியமாகும்.

உணவைக் கடித்து மெல்லுவதுதான் பற்களின் முக்கிய வேலையாகும். அவைகள் உணவை நன்றாக

அரைத்து, அதை உமிழ் நீரோடு கலந்து, ஜீரண வேலையை ஆரம்பித்து வைக்கின்றன. அவை, பேசுவதற்கும் உதவுகின்றன. அவைகள் விழுந்துவிட்டால், சொற்களை நன்றாக உச்சரிக்க முடியாது. "பல் போனால் சொல் போகும்" என்பது பழமொழி. ஒருவனது முகப் பொலிவிற்கும் பற்கள் காரணமாக இருக்கின்றன. பற்களுக்குத் தேக ஆரோக்கியத்தோடு நெருங்கிய தொடர்பு உண்டு. ஆதலாற்றான், மேனாடுகளில், இராணுவ வீரர்களின் பற்களையும், அவர்கள் பல் விளக்குங் கருவிகளையும், பீரங்கிகளைச் சோதித்துப் பார்ப்பது போல், சோதனை செய்து வருகிறார்களாம். சில மரணக் கம்பெனிகள், தங்கள் உறுப்பினர்களின் பற்களைப் பரிசோதித்து மருத்துவம் செய்வதற்காகப் பல் வைத்தியர்களை வைத்திருக்கின்றன.

நாள்தோறும் பல்லைச் சுத்தம் செய்யவேண்டும். இல்லாவிட்டால், பற்களின்மேல் அழுக்குப் படியும். இவ் வழுக்கில் கோடிக்கணக்கான கிருமிகள் வளரும். உணவை உண்ணும்போது இக்கிருமிகள் உணவுடன் கலந்து, இரைப் பையை அடைந்து, உணவைக் கெடுத்துப் புளிக்கச் செய்து, அஜீரணத்தை உண்டு பண்ணுகின்றன. மேலும் பற்களிலுள்ள கிருமிகள் நாக்கையும், மூக்கையும், நுரையீரலையும் அடைந்து பல நோய்களை உண்டாக்குகின்றன.

உணவு உண்ணும்பொழு தெல்லாம் பற்களைச் சுத்தம் செய்யவேண்டும். குறைந்தது காலையில் ஒரு முறையும், இரவில் படுக்கைக்குச் செல்லும்போது

மற்ருெரு முறையுமாவது பல்லைச் சுத்தம் செய்ய வேண்டும். அவைகளைச் சுத்தம் செய்ய மணல், செங்கல் முதலியவைகளை உபயோகிக்கக் கூடாது. உப்புக் கலந்த உமிக்கரி, ஓமப்பொடி முதலியவைகளையோ, நாயுருவி வேரையோ அல்லது வேப்பங்குச்சி, கருவேலங்குச்சி, கடலாமணக்குக்குச்சி முதலியவைகளையோ உபயோகிக்கலாம். பற்களைச் சுத்தி செய்வதற்குச் சிறிதளவு உப்பையும், ரொட்டிச் சோடாவையும் தண்ணீரில் கலந்து, அதனுல் வாய் அலம்புவதே சிறந்ததாகும். பற்களைச் சுத்தம் செய்வதற்கு வெந்நீரை உபயோகிப்பது நல்லது. தண்ணீராக இருந்தால், அதிலுள்ள நுண்ணிய கிருமிகள் வியாதியை உண்டுபண்ணலாம்.

வெற்றிலை போட்டுக்கொள்வது மிகவும் கெட்ட வழக்கம். இதனுல் அடிக்கடி துப்புகிற தீய வழக்கம் உண்டாகிறது. அப்பொழுது ஏராளமான உமிழ்நீர் வீணுகத் துப்பப்படுகிறது. வெற்றிலையில் தடவப்படும் சுண்ணும்பு, பற்கள் அசைந்து அழிவதற்குக் காரணமாகிறது. ஆதலின், பற்களுக்குக் கேடு செய்கிற இம் மாதிரியான வழக்கங்களை யாரும் வைத்துக் கொள்ள லாகாது. இவை, பல்லுக்கு மட்டுமல்ல, உடம்புக்குங் கெடுதி.

எக் காரணம் பற்றியேனும் பற்களுக்குக் கேடு வந்திருப்பதாகத் தெரிந்தால், உடனே பல் வைத்தியரைக் கலந்து அதை நீக்குதல்வேண்டும். அல்லது கேடுற்ற பல்லைப் பிடுங்கி எறிந்துவிட்டு, வேறு கட்ட வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் இது செய்யப்படுகிறதோ அவ்வளவுக்கு நன்மை யுண்டு.

வினாக்கள்

1. பல்லின் மூன்று பாகங்கள் யாவை? அவைகளைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

2. பாற் பற்கள் என்பன யாவை? நிலையற்ற அப் பற்களைக் கவனிக்கவேண்டுவது ஏன்?

3. மேனாட்டில் இராணுவ வீரர்களின் பற்களைப் பரி சோதிப்பது ஏன்?

4. பற்களைச் சுத்தம் செய்யாவிட்டால் விளையும் தீமைகள் யாவை?

5. வெற்றிலை போடுவதால் விளையும் தீமை என்ன?

இலக்கணம்

மதுரை, மனிதன், நிலம், அன்பு, நாள், மகிழ்ச்சி, தீமை, கால், வேடர், நடத்தல்-இவற்றில் அறுவகைப் பெயர்களையும் தனித்தனியே எடுத்தெழுதுக.

வாழ்த்துதல்-தொழிற் பெயர். இதில் 'வாழ்த்து' என்ற பகுதிமட்டுமே சில சமயங்களில் தொழிற் பெயராக வரும். அதற்கு முதனிலைத் தொழிற் பெயர் என்று பெயர். சில பகுதிகள் விகாரப்பட்டுத் தொழிற் பெயராக வரும். அவற்றிற்கு முதனிலை திரிந்த தொழிற் பெயர் என்று பெயர்.

'கெடுதல்' என்ற தொழிற் பெயரில் 'கெடு' என்ற பகுதி 'கேடு' என நீண்டு வருவது முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

முதனிலைத் தொழிற் பெயருக்கும், முதனிலை திரிந்த தொழிற் பெயருக்கும் உள்ள வேறுபாட்டை உதாரணம் தந்து விளக்குக.

7. கலைக்கோவில்

[வித்துவான், சி. சின்னத்தம்பி]

பண்டைக் காலத்தில் நம் பாரதநாடு பல கலைகளி லும் சிறப்புற்று விளங்கியது. அக் காலத்தில் நம் நாட்டில் சிற்பக் கலையும், ஓவியக் கலையும் சிறந் தோங்கி இருந்தன என்பதை அறிவிக்கும் சின்னங் கள் பல இன்றும் காணப்படுகின்றன. மதுரை, தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், மாமல்ல புரம், எல்லோரா, அஜந்தா, முதலிய இடங்களிலுள்ள சிற்பங்களும், ஓவியங்களும் கலையுணர்ச்சி யுடையார் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் அழியா அழகுடையனவாய்க் காட்சி தருகின்றன. பிற நாட்டு யாத்திரிகர்களும், இவற்றைக் கண்ணாரக்கண்டு களித்து வாயார வாழ்த்திச் செல்கின்றார்கள். இத் தகைய கலைக் கோவில்களின் சிகரமாகச் சிறந்து விளங்குவது அஜந்தா என்பதாகும். அதைப் பற்றி இப் பாடத்தில் படிப்போம்.

அஜந்தா என்னுமிடம், நைஜாம் இராஜ்யத்தி லுள்ள அவுரங்கபாத் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே, அறுபது மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கு மலையிற் குடையப்பட்ட அற்புதமான குகைக் கோவில்களுக்கு முன் அமைந்திருக்கும் மண்டபங்க ளும், அவைகளில் காணப்படும் கலை நிறைந்த சிற் பங்களும், அழியா அழகுடைய வர்ணச் சித்திரங்க ளும் யாவரையும் வியப்பில் ஆழ்த்தும் புதுமை யுடையனவாய்க் காணப்படுகின்றன.

அஜந்தாவில் பிறைச் சந்திர வடிவமாய் மலையிற் குடையப்பட்ட குகை வாசல்கள், சித்திர விசித்திர

மான பெருந் தூண்களுடன் காணப்படுகின்றன. அங்கு 'வகோரா' என்னும் நதி மலையோரமாக, பாதிவடிவமான மதியைப்போல் காட்சி அளித்துக் கொண்டு செல்கின்றது. அஜந்தாக் குகைகளி லுள்ள சில சிறந்த ஓவியங்கள், பெரிய வடிவங்களை யுடையனவாயும், பெரிய கதைகளை ஒரு சிறு காட்சியினுல் சித்திரித்துவிடும் ஆற்றல் வாய்ந்தனவா

யும், தெய்வீகம் பொலி யும் அணங்குகளின் கண்ணழகு, கைவிரல்க ளின் அழகு, அணிக ளின் அழகு முதலிய வற்றை விளக்குவனவா யும் அமைந்திருக்கின் றன. இம் மாதிரியான இருபத்தாறு குகைகள் அங்குக் காணப்படுகின் றன. அவற்றுள் ஒன் றில் புத்த பகவான் பிக்ஷா பாத்திரம் ஏந்திக் கொண்டு நிற்கின்றூர். அவர் அருள் கனிந்த கண்களையும், கருணை ஒழுகும் திருமுகத்தை யும் உடையவராய்க் காட்சி தருகின்றூர். அவர் முகத்தில் ஞானவொளி வீசும் காட்சி தென்படுகிறது. அவருக்கு எதிரே அவர் மனைவி யசோதரை தேவியார், மகன் இராகுல

னுடன் கையில் பிச்சைகொண்டு வந்து நிற்கின்றார். யசோதரை, இராகுலன் முகங்கள் பக்தி நிறைந்து காணப்படுகின்றன. இங்குப் புத்தருடைய உருவத்தைப் பெரிதாகவும், யசோதரை, இராகுலன் வடிவங்களைச் சிறியனவாகவும் சிற்பி செய்தமைத்துப் புத்த பகவானின் பெருமையைப் புலப்படுத்தி இருப்பது, கற்பனா சக்திக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

புத்த பகவானின் பிறப்பின் பெருமையைத் தெரிவிக்கும் அளவற்ற கதைகள், சிற்பங்களில் செதுக்கப்பட் டிருக்கின்றன. சிபிச்சக்கரவர்த்தியைப் புத்தரின் பழம் பிறப்பாக வைத்துச் செதுக்கிய சிற்பங்களும், அங்குக் காணப்படுகின்றன.

இன்னும் புத்தரின் பழம் பிறப்புக்களில் ஒருவராகிய 'அவலோகித போதி சத்துவரின்' சித்திரம் அஜந்தாவி லுள்ள வியக்கத்தக்க ஓவியங்களில் ஒன்று. இந்தக் கம்பீரமான உருவத்தின் முகத்தில் உயிர்க்களை ததும்புகிறது. கண்களின் கீழ்நோக்கிய பார்வை

யானது, அவர் மண்ணுலக மக்களிடம் கொண்டிருக்கும் கருணையைக் குறிப்பிடுகிறது. அருகிலுள்ள அவருடைய தேவியின் மேனி, கருநிறமுடையதாய் இருக்கிறது. கருநிற மாதர்களும் அழகின் சிகரமாக விளங்குதல்கூடும் என்பதை வாய்விட்டுக் கூறுவது போல் அவ் வுருவம் அமைந்துள்ளது.

அஜந்தா ஓவியர்கள், தாங்கள் இயற்றிய சித்திரங்களில் உணர்ச்சிக் குறிப்புக்களை முகத்திலும், உறுப்புக்களின் அமைப்பிலும்கூட வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளில் ஒன்று, துக்கச் செய்தி கொண்டுவந்திருக்கும் ஒருவனது ஓவியம். அந்த மனிதனின் முகவாட்டமும், அவன் கை அமைந்திருக்கும் முறையும், தடியூன்றிய கை முகவாய்க் கட்டையைத் தாங்கி நிற்கும் அவனது நிலையும், 'எல்லாம் அழிந்து விட்டன' என்னும் குறிப்பை மிகத் தெளிவாக வெளியிடுகின்றன.

மக்களின் உளக்கோள் மட்டுமன்று; விலங்குகளின் நெஞ்சு உணர்ச்சிகளையும் அவர்கள் சிறப்பாகத் தீட்டி யிருக்கிறார்கள். புத்தபகவான் முன் பிறப்பில் இமாலயத்தில் வெள்ளையானையாக அவதரித்தார். பிரயாகை மன்னரின் ஆட்கள் அந்த யானையைப் பிடித்துக் கட்டினார்கள். யானை உணவும் நீரும் உட்கொள்ளாது இருக்கக்கண்ட மன்னன், அதை அவிழ்த்து விட்டு, அதன் பின்னல் தானும் குதிரையேறிச் சென்றான். அந்த யானை, இமய மலையில் இருந்த தன்னுடைய தாய் தந்தையரை அடைந்து, அவர்களை வலம் கொண்டு வணங்கி நின்றது. இக் காட்சி மிகச் சிறந்த முறையில் பொறிக்

கப்பட்டிருக்கிறது. கட்டுண்டு செல்லும் யானையின் கண்களில் கோபம் கலந்த சோகமும், விடுதலை



அடைந்த யானையின் கண்களில் மகிழ்ச்சி கலந்த பரபரப்பும், போற்றும்போது அன்பும் வெளிப்படும் முறையில் யானை காட்சி தருவது, காண்போர்க்குப் பெரு மகிழ்ச்சி தருவதாகும்.

நம் பாரதநாட்டு மக்கள் எத்தகைய உயரிய வாழ்க்கை நடத்தினர்கள் என்பதை, அஜந்தாக் குகைச் சிற்பங்களும், சித்திரங்களும் நன்கு காட்டுகின்றன. ஆண்களும் பெண்களும் எத்தகைய ஆடை அணிகளை அணிந்திருந்தார்கள் என்பதையும், விருந்தினர்களை அவர்கள் எவ்வாறு உபசரித்தார்கள் என்பதையும், அவர்களது பண்பட்ட வாழ்க்கையின் உயர்வையும் இவைகளால் நாம் நன்கு அறியலாம். ஒரு சிற்பத்தில், காசி மன்னன் நாக லோகத்து அரசனை வரவேற்றுப் போற்றும் காட்சி காட்டப்

பட்டுள்ளது. அந்தக் காலத்து அரசர்களும், அரசி களும் எத்தகைய அழகுடையவர்களாய் இருந்தார்கள் என்பதையும், அவர்கள் கலந்து மகிழும்போது ஏற் படும் நட்புணர்ச்சியையும், அவர்களுடைய உரையா டல்களைப் பரிவாரங்கள் எவ்வளவு ஆர்வத்தோடு நோக்குகின்றார்கள் என்பதையும், பிற அமைப்புக் களையும் பார்க்கும்போது பெரும் வியப்பு ஏற்படு கின்றது.

அஜந்தாக் குகைகள் இரண்டாயிரம் ஆண்டுக ளுக்கு முற்பட்டவை. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகர் ஒருவர், இதைப்பற்றிக் குறித்துள்ளார். என்றாலும், சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்புதான், இவைகளைப் பற்றி அறிய முடிந்தது. ஏனென்றால், இக் குகைகள், மக் கள் இலகுவில் கண்டறிய முடியாத இரகசியமான இடத்தில் அமைந்திருக்கின்றன. இவைகளை அமைத்த புத்த பிக்ஷுக்கள் தங்களைப் போன்றவர் கள் கண்டு களிப்பதற்கும், உணர்ச்சியற்ற மூடர்கள் அழித்து விடாமல் இருப்பதற்குமாக வேண்டி, இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கலைக்கோவில் கட்டி னார்கள் என்று கருதவேண்டி இருக்கின்றது. இயற் கையின் நிறைந்த அழகில் தங்கள் நெஞ்சை நிலைக்கச் செய்வதற்குரிய எழில் நிறைந்த இடத்தில், கலைக் கோவில் அமைத்தது, அவர்கள் அறிவு நுட்பத்திற் கோர் சான்றாகும்.

இந்தக் கலைக் கோவிலை இன்று இந்திய அரசாங் கம், காத்து வருவதோடு, இதை மக்கள் சென்று

பார்த்து மகிழ்வதற்கான வசதியும் செய்தமைத்திருக்கிறது. நாமும் இதனை ஒரு முறையாவது கண்டு களிப்போமாக.

அரும்பொருள் :—சின்னம் - அடையாளம். பிக்ஷு - சந்நியாசி. அணங்கு - தெய்வப் பெண். ஆர்வம் - ஆவல். எழில் - அழகு. சான்று - உதாரணம்.

வினாக்கள்

1. பண்டைக் கலைகளின் சின்னங்கள் எங்கெங்கு காணப்படுகின்றன ?
2. அஜந்தாச் சிற்பங்கள் எங்கு, எவ்வாறு அமைந்துள்ளன ?
3. அஜந்தாவை அழகுபடுத்தும் நதி யாது ?
4. புத்தபகவானின் திருவுருவ அமைப்பை விளக்குக.
5. போதி சத்துவரின் உருவ அமைப்பை விளக்குக.
6. மிருகங்களின் உணர்ச்சியைச் சித்திரித்திருப்பதற்கு ஓர் உதாரணம் தருக.
7. அஜந்தாக் குகைகளை இரகசியமான இடத்தில் அமைக்கக் காரணம் என்ன ?

பயிற்சி

வாக்கியங்களில் அமைத்தெழுதுக :

அழியா அழகு, எடுத்துக்காட்டு, வரவேற்று, உரையாடல், பெருவியப்பு, எழில் நிறைந்த,

இலக்கணம்

'அஜந்தாக் குகைகளை உலகமே புகழ்கின்றது' இவ்வாக்கியத்தில் உலகம் என்னும் இடப் பெயர், இடத்தைக்

குறியாது, அங்கு வசிக்கும் மக்களைக் குறிப்பிடுகின்றது. இம்மாதிரி ஒரு பொருளின் பெயர், அதனுடன் சம்பந்தமுடைய வேறொரு பொருளை உணர்த்தித் தொன்று தொட்டு வழங்கி வருமாயின், அதற்கு ஆகுபெயர் என்று பெயர். இவ் வாகுபெயர், பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர், சினையாகு பெயர், குணவாகு பெயர், தொழிலாகு பெயர், உவமையாகு பெயர் முதலாகப் பலவகைப்படும்.

தாமரை முகம், தாமரை என்னும் முதற் பொருளின் பெயர் அதன் சினையாகிய பூவை மட்டும் குறிப்பதால், அது முதலாகு பெயர், அல்லது பொருளாகு பெயர் எனப்படும்.

ஊர் சிரித்தது - ஊர் என்னும் இடப்பெயர், அங்குள்ள மக்களுக்கு ஆகி வந்திருப்பதால், இடவாகு பெயர்.

கோடை விளைந்தது - கோடை என்னும் காலப்பெயர், அக்காலத்தில் விளையும் பொருளைக் குறிப்பதால், காலவாகு பெயர்.

தலைக்குப் பத்து ரூபாய் கொடு - தலை என்னும் சினைப் பெயர், ஒருவனை அல்லது ஒருத்தியை உணர்த்துவதால், சினையாகு பெயர்.

வெள்ளை அடித்தான் - வெள்ளை என்னும் குணப் பெயர், சுண்ணும்பைக் குறிப்பதால், குணவாகு பெயர்.

பொங்கல் உண்டான் - பொங்கல் என்னும் தொழிற் பெயர், பொங்கிய சோற்றை உணர்த்துவதால், தொழிலாகு பெயர்.

காளை வந்தான் - காளை என்னும் உவமையின் பெயர், காளை போன்ற ஆடவனைக் குறிப்பதால், உவமையாகு பெயர்.

8. புகழ்

[வித்துவான், க. சிதம்பரதாணு]

'தோன்றுவன யாவும் அழிவனவே' என்பர் சிலர். தோன்றி அழியாதனவும் உள. அவற்றுள் சிறந்தது புகழ்.

என்பு, தோல், நரம்பு, தசை, குருதியாகியவற்றாலான உடல், அழிந்து ஒழியும் தன்மையது. இன்று வாழ்வோர் நாளையும் வாழ்வார் என்றெண்ணுதற் கிடமில்லை.

" நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு "

எனில், புகழோ இன்றிருப்பது; என்றுமிருப்பது.

" இன்றுளார் நாளை மாள்வர்,
புகழுக்கு மிறுதி யுண்டோ "

என்பது கல்வியிற் சிறந்த கம்பன் வாக்கு.

" ஒன்றா வுலகத்(து) உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில் "

என்பது தமிழ் மறை.

உலகந் தோன்றிய நாள்முதல் இன்றுவரை பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, வீழ்ந்தோர் எத்தனை பேர்? விண்ணில் மீனினை எண்ணினும், மண்ணில் மாண்டோர் தொகையை எண்ண வியலுமா? இயலாது; இயலாது. எண்ணிறந்த கோடிக்கணக்கி லிறந்த அவர்கள் வாழ்வு, பெயர், யாவும் அவர்களது ஊனுடல் அழிந்ததும் அழிந்தன. ஆனால், பன்னூறாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த புலவர்கள், புரவலர்

கள் பெயர்களோ, அன்று முதல் இன்றளவும் நின்று நிலவுகின்றன. கம்பர், திருவள்ளுவர், இளங்கோ முதலிய புலவர்களையும், செங்குட்டுவன், கரிகாலன், சடையன் போன்ற புரவலர்களையும் தமிழருள் அறியாதார் அறியாதாரே. அவர்கள் எத்தனை எத்தனை ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவர்கள்! இன்றும் வாழ்கின்றனர்! அவர்கள் பெற்ற பேறே பேறு. அவர்தம் வாழ்வே வாழ்வு. அவர்களது ஊனுடல்கள் அன்றே அழிந்தன. எனினும், அவர்கள் புலமையாலும், வள்ளன்மையாலும், செங்கோலாட்சிச் சிறப்பாலும் பெற்ற சீரிய புகழுடல்கள் இன்றும் வாழ்கின்றன; என்றும் வாழ்வன.

இப் புகழைப் பெறாத மனிதன் இருந்தென்ன? இறந்தென்ன? விலங்கு, பறவை முதலியனவும் உலகில் தோன்றுகின்றன; வளர்கின்றன; உண்கின்றன; ஒழிகின்றன. அதைப்போன்றே அவனும் தோன்றுகின்றான்; வளர்கின்றான்; உண்கின்றான்; ஒழிகின்றான்.

"அரிதரிது மானிடராதலரிது" என்றார் ஔவை. இவ் வரிய பிறவி பெற்ற மனிதன், மனிதனாய் மட்டும் தோன்றுவதாற் பெறும் பேறென்ன? ஒன்றுமில்லை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்றார் திருவள்ளுவர்.

புகழ் எய்தி வாழும் புனித வாழ்வைப் புகழ்ந்து போற்றாத புலவரில்லை. தமிழிலக்கியப் பூங்காவில் புகுந்துலவும் பேறு பெற்றார் அனைவரும் இதனை நன்குணர்வர்.

இலங்கை வேந்தன் இராவணன், உலகை யெலாம் தன் ஒரு குடையின்கீழ்க் கொண்டு அரசாண்டான். அவன் இள மைந்தன் அட்சகுமாரன், ஒப்பற்ற உடல் வலியும், உளவலியும் பெற்றோன். அவன், அனுமன் என்னும் வானர வீரனுடன் பொருது, தரையோடு தரையாய்த் தேய்ப்புண்டு மாண்டான். அச் செய்தி இலங்கை எங்கும் பரவிற்று; இராவணன் மூத்த மைந்தன், மேகநாதன் காதிலும் எட்டியது. எட்டியதும், உள்ளம் குமுறிநின்ற அவன்,

"எம்பியோ தேய்ந்தான்? எந்தை
புகழன்றோ தேய்ந்த தென்றான்"

புகழ் அழியாப் புனித வாழ்வில் மேகநாதற் கிருந்த மதிப்பை என்னென்பது!

இலக்குவனுடன் சண்டையிட்டு இளைப்புற்ற இந்திரசித்தன், தன் பகைவலியை நன்குணர்ந்தான்; மேலும் பொருதால் தனக்கும் தன்னைச் சார்ந்தோர்க்கும் அழிவு அடுப்பது உறுதி என்று அறிந்தான்; அந்த உண்மையை இராவணனிடத்தும் இயம்பினன். அது கேட்ட இராவணன்,

"வென்றிலேன் என்ற போதும்
வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளேன் அன்றோ, மற்றவ்
விராமன்பேர் நிற்கு மாயின்?
பொன்றுதல் ஒருகா லத்தும்
தவிருமோ? போதுமைத் தன்றோ?
இன்றுளார் நாளை மாள்வர்;
புகழுக்கும் இறுதி யுண்டோ!"

என்று பதிலுரைத்தான். இப் பதிலுரையின்வழிக்

கம்பர் உலக நிலையாமையையும், புகழின் அழியாமை யையும் அழகுற அருளிப் போந்தார். இவ்வாறே புகழேந்தி, வில்லி, திருத்தக்க தேவர் முதலிய பழந் தமிழ்ப் புலவர்கள், தந்தம் நூற்களில் புகழெய்தி வாழும் புனிதவாழ்வைப் புகழ்ந்து போற்றிய பாடல் கள் எத்தனை! எத்தனை!

புகழைப் பெறும் வழியாது? விரும்பும் பொருளை விலைகொடுத்துப் பெற்றுக்கொள்ளல் போல, எளிதில் பெறத் தக்க ஒன்றன்று புகழ். அஃது, மனிதனது அறிவாற்றல்களில், உயர் ஒழுக்கத்தில், அருள் நிறை வில், வீரவாழ்வில், இன்ன பிற பண்பாடுகளில் சுரப் பது. கொலை புரிதல், கள்ளுண்டல், களவு செய்தல், சூதாடல் முதலிய கொடுஞ் செயல்கள், மக்கள் வாழ் வைக் குலைத்துப் பெரும் பழியையும் நல்குவன. புகழ் பெற்று வாழும் புனிதவாழ்வை விரும்புவோர், இத் தீச் செயல்களைக் கனவிலுங் கருத லாகாது.

இந் நாளில், பலர், அறிஞர்களால் வெறுத் தொதுக்கப் பெற்ற செயல்கள் எத்தனை உண்டோ அத்தனையையும் கைக்கொண்டு, இழிநிலை யெய்திவரல் வெளிப்படை. பலர் இளம் பருவத்திலேயே சிகரெட், பீடி முதலிய தீய பொருள்களுடன் உறவுகொள்கின் றனர்; சீட்டாட்டம் முதலிய சூதாட்டங்களில் ஈடுபட் டுத் தம் அரிய பொழுதைப் பாழ் படுத்துகின்றனர்; அழுக்காறு, அவா, வெகுளி முதலியவற்றின் உறை விடமாய்த் தம் உள்ளத்தை யாக்கி, வாழ்நாளைப் பாழ் படுத்துகின்றனர். இவர்கள், பெறுதற்கரிய புகழைப் பெறத் தவறுவதோடு, அழியாப் பழிக்கும் அன்றோ ஆளாகின்றனர்.

பொய், களவு முதலிய புல்லொழுக்கங்களை மேற்கொள்ளாது, கற்கத் தக்கவற்றைக் கற்று, அருளின் உருவாய், உயர் ஒழுக்கத்தின் உறையுளாய்,

“ மகன்தந்தைக் காற்று முதவி யிவன்தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல் ”

என்னும் பொய்யாமொழிக் கோர் இலக்கியமாய் வாழ்பவன் எவனோ, அவனே அழியாப் புகழ் எய்தல் உறுதி. அவனது ஊனுடல் அழியலாம்; ஆனால், அவனது புகழுடல் என்றும் அழிவதில்லை. சாகா வரம் பெற்றோன் அவனே. அவன் அமரன்; ஆம் அவனே அமரன்.

அரும்பொருள்:—என்பு - எலும்பு. குருதி - இரத்தம். நெருநல் - நேற்று. ஒன்றா - தனக்கு ஒப்பில்லாத. பொன்றாது - அழியாமல். பொன்றுதல் - இறத்தல். வள்ளன்மை - கொடைக்குணம். சீரிய - சிறந்த. விலங்கு - மிருகம். கா - சோலை. அழுக்காறு - பொறாமை. அவா - ஆசை. என்நோற்றான் - என்ன தவத்தைச் செய்தான். அமரன் - மரணம் இல்லாதவன்.

வினாக்கள்

1. புகழுடம்பு பெற்ற புலவர்கள், புரவலர்கள் சிலர் பெயர் கூறுக.

2. புகழைக் குறித்து வள்ளுவர் கூறிய இரண்டு குறள்கள் எழுதுக.

3. இராவணன் புகழைத் தன் உயிரினும் மேலாக மதித்தான் என்பதற்குச் சான்று தருக.

4. புகழைப் பெறுவது எங்ஙனம்?

5. அழியாப் பழிக்கு ஆளாவார் யாவர்?

6. அமரன் யாவன்?

பயிற்சி

வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

தொன்று தொட்டு, ஒரு குடையின்கீழ், தலைமுறையோடு தலைமுறையாய், புனித வாழ்வு, புரவலர்கள், அமரன்.

பதப் பிரிவு செய்து எழுதுக:

என்றெண்ணுதற்கில்லை, பன்னூறாண்டுகள், இன்றுளார், என்னேற்றான், அரிதரிது.

இலக்கணம்

பெயர்ச்சொற்கள் பொதுப்பெயர், சிறப்புப் பெயர் என இரண்டு வகைப்படும்.

1. பொதுப்பெயர்:- பல பொருள்களுக்கும் பொதுவாக வரும் பெயர், பொதுப்பெயராகும்.

உதாரணம்: மரம் - இது தென்னை, பலா, ஆல், அரசு முதலிய எல்லா மரங்களுக்கும் பொதுவாக வழங்கும் பெயர். ஆதலால் பொதுப்பெயராகும்.

2. சிறப்புப்பெயர்: ஒரு பொருளுக்கே சிறப்பாக வழங்கும் பெயர், சிறப்புப்பெயராகும்.

உதாரணம்: பனை - இது ஒருவகை மரத்திற்கு மட்டும் சிறப்பாக வழங்கும் பெயர். ஆதலால், சிறப்புப் பெயர்.

இப் பாடத்திலிருந்து பொதுப் பெயர், சிறப்புப் பெயர்களுக்கு உதாரணம் எடுத்தெழுதுக.

9. வ. உ. சிதம்பரனார்

[ஈ. பண்டார நம்பியார்]

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலிச் சீமை, வீரத்தின் விளைநிலமாகவும், புலமையின் பிறப்பிடமாகவும் விளங்குவது. வீர விளக்கான கட்டபொம்மனை ஈன்றளித்த பெருமை அந் நிலத்திற் குரியது. அருட் கவிஞர் பாரதியார், அந் நிலத்தில் தான் அவதரித்தார். இவர்களுக்குப் பிறப்பளித்த அந்த நாட்டிற்றான், 'வீரம்', 'தியாகம்' இவற்றின் உருவாய் விளங்கிய வ. உ. சிதம்பரனார் தோன்றினார்.

பெரியவர்கள், தங்களை வணங்கும் பெண்களுக்கு "நீ வீர மக்களைப் பெற்று வாழ்வாயாக" என்று ஆசி கூறுவது, தமிழகத்து வழக்கம். வீரர் என்பது, போர் முகத்துச் சென்று மார்பு காட்டிப் பொருது மடிவோரை மட்டும் குறிப்ப தன்று; நாட்டு நலத்திற்காக-சமூக வாழ்விற்காக - அரிய பெரிய தொண்டுகளைத் தன்னந் தனியாக நின்று செய்து முடிப்பவனே சிறந்த வீர னுவான். இத்தகைய வீரப் புதல்வனைப் பெறுவதைக் காட்டிலும், பெண்மக்கள் பெறும் பேறு, வேறொன்று மில்லை.

திருநெல்வேலிச் சீமையில், தூத்துக்குடி நகரை அடுத்த ஓட்டப்பிடாரம் என்னும் ஊரில், 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் நாளில் பரமாயி என்னும் அம்மையார் இந்தப் பாக்கியத்தைப் பெற்றார்கள். உலகநாத பிள்ளையும், பரமாயி அம்மையாரும் அருந்தவத்தால் பெற்றெடுத்த வீரர்தாம் வ. உ. சிதம்பரனார்.

சிதம்பரனார், இளமையில் அருந் தமிழையும், ஆங்கில மொழியையும் கற்றுத் தேர்ந்தார். அடிமையாக

வாழ விரும்பவில்லை யாதலின், அவர், அரசாங்க அலுவலை விரும்பாது, வழக்கறிஞர் வாழ்க்கையை மேற் கொண்டார்; ஆனால், வழக்கறிஞர்களில் பெரும்பாலோர் கைக்கொள்ளாத வாய்மை யறத்தில் அவர் வழுவாது நின்றார்; நீதியை நிலை நாட்டுவதையே தம் வாழ்க்கை நெறியாகக் கொண்டார். அத் தொழிலில் அவருக்குப் போதிய வருவாய் வரவில்லை. வருவாய்க் குறைவின் காரணத்தை அவர் அறிந்திருந்தபோதிலும், பொருளுக்காக இலட்சியத்தை விற்க அவர் விரும்பினாரில்லை.

சிதம்பரனார் வக்கீலாக வாழ்ந்து வந்த காலத்தில் தான், சிவாஜிக்குப் பிறப்பளித்த மகாராஷ்டிர தேசத்தில் பிறந்த **பாலகங்காதர திலகர்**, 'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை' என்ற மந்திரத்தை முழக்கம் செய்து, மக்களிடையே விடுதலை உணர்ச்சியை ஊட்டி வந்தார். ஆங்கிலேயரிடம் அடிபணிந்து விடுதலை கேட்பது கூடாதென்றும், போராடியே உரிமைபெற வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். திலகரின் போக்கு, வீர சிதம்பரனாரைக் கவர்ந்தது. தமிழ் வீர மரபில் தோன்றிய சிதம்பரனார், திலகரின் ஆசியைப் பெற்று அவர்வழி நின்று, தென்னாட்டு மக்களைத்

தட்டி எழுப்பி விடுதலைப் போருக்குத் தயாராக்க முன்வந்தார். அவர், வழக்கறிஞர் தொழிலை உதறி எறிந்துவிட்டு, தென்னாட்டுத் தளபதியாகத் தொண்டாற்றினார். மக்கள், உரிமையுணர்ச்சி கொண்டு எழுந்தார்கள்.

அக் காலத்தில், சிதம்பரனாரின் தமிழ் உள்ளம், பல கற்பனை செய்திருக்க வேண்டும். "திரைகடலோடித் திரவியம் தேடியவன் தமிழன்; முதலில் கடலைக் கடந்த தமிழன், தன்னால் கடக்கப் பட்டமையால் அன்றோ அதற்குக் கடல் என்று பெயர் அமைத்தான்; அதன் ஆழங்கண்டமையால் அன்றோ ஆழி என்று பெயரிட்டான். இன்று, அக் கடல், ஆங்கிலேயரின் ஏகபோக உரிமையாக இருக்கின்றதே! என்ன அநீதி! தமிழகத்திலிருந்து சிங்களம் செல்லவும், அவர்களின் விடையை அன்றோ எதிர்பார்க்க வேண்டி இருக்கின்றது." என்று எண்ணிய சிதம்பரனார், தாம் கப்பல் ஓட்டுவதற்குக் கங்கணம் பூண்டார்.

எண்ணியதை எண்ணியவாறு முடிக்கும் திண்ணிய உள்ளம் படைத்த சிதம்பரனார், "சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" என்ற ஒரு கப்பல் கம்பெனியை ஆரம்பித்தார்; 'லாவோ', 'காலியா' என்ற இரண்டு கப்பல்களை விலைக்கு வாங்கினார். தூத்துக்குடிக்கும் சிங்களத்திற்கும் சிதம்பரனாரின் கப்பல்கள் சென்று வந்தன. ஆங்கிலக் கப்பல் கம்பெனியார், சிதம்பரனாரின் முயற்சி வெற்றி பெற்றதைக் கண்டு திடுக்கிட்டார்கள்; தங்கள் கம்பெனிக்கு அழிவு நேருமோ என்று அஞ்சினார்கள்; ஆதலின், சிதம்பரனாரின் கப்பல் கம்பெனியை அழிப்பதற்கான

திட்ட மிட்டார்கள். ஆங்கில அரசாங்கம் அவர்களுக்குத் துணை நின்றது. ஆங்கில ஆலை முதலாளிகள், அவர்களுக்கு உதவ முன்வந்தனர். ஆதலின், போட்டி வளர்ந்தது. சிதம்பரனார் தன்னந் தனியாக நின்று, ஆங்கிலக் கப்பல் கம்பெனியாரையும், ஆலை முதலாளிகளையும், ஏகாதிபத்தியங்களுள் இமயம்போல் ஓங்கி நின்ற ஆங்கில அரசாங்கத்தையும் ஒருநிலையாக எதிர்த்து நின்றார் என்றால், அவரன்றோ வீரர்! மேலும் தமிழகம், ஒருமுகமாகச் சிதம்பரனாருக்கு ஆதரவு அளித்தது. அது கண்ட அரசாங்கம் அஞ்சியது.

சிதம்பரனாரை வெளியே விட்டுவைத்தால், ஆட்சிக்கு ஆபத்து விளைதல் கூடும் என்று கண்ட அரசாங்கம், அவரை 1908-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ஆம் நாள் கைது செய்தது. விசாரணை நடத்திய நீதிபதி பின்ஹேறு, சிதம்பரனாரின் தேசபக்தியை வாயாரப் பாராட்டினார். "சிதம்பரனாரின் பேச்சைக் கேட்டால் பிணமும் உயிர் பெற்றெழும்; அடிமை நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை அடையும். தேச பக்தி சிதம்பரனாரின் எலும்பைப் பற்றி விட்டது" என்பது நீதிபதி பின்ஹேறயின் வாக்கு. விசாரணை முடிவில், சிதம்பரனாருக்கு நாற்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிதம்பரனார் சிறையில் பட்ட அல்லலுக்கு அளவில்லை.

அவர் சிறையில் செக்கிழுப்பதையும் கல்லுடைப்பதையும் அறிந்து, மக்கள் கொதித் தெழுந்தார்கள். அருட்கவிஞர் பாரதியார் ஆறாகக் கண்ணீர் வடித்தார். அவர் மனத்துயரம் கவிதைகளாக வெளிவந்தது.

"தண்ணீர்விட் டோவளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்;
கருகத் திருவுளமோ?
எண்ணமெலா நெய்யாக
எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ணவிளக் கிஃது
மடியத் திருவுளமோ?
ஓரா யிரவருடம்
ஓய்ந்து கிடந்தபின்
வாராது போலவந்த
மாமணியைத் தோற்போமோ?
மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் கண்டிலையோ?"

என்பன போன்ற பல பாடல்களைப் பாரதியார் கல்லும் கரைந்துருகுமாறு பாடினர்.

சிதம்பரனாரின் சிறைத் தண்டனை, அப்பீல் மூலம் குறைவு செய்யப்பட்டது. ஆதலின், அவர், 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளிவந்தார். அவர், சிறையில் இருந்த காலத்தில், தமிழ்ப்பணி புரிந்தார். பிற நாட்டு நல்லறிஞர் நூற்களைத் தமிழில் பெயர்த்தெழுத வேண்டும் என்பது அவரது அவா. ஆதலின், ஆங்கில நூற்கள் சிலவற்றை அவர் தமிழில் மொழிபெயர்த்தார்; திருக்குறள், தொல்காப்பியம் முதலிய நூற்களுக்குப் புத்துரை எழுதினர்; பலருக்குத் தமிழ் நூற்களைப் பாடஞ் சொன்னர்; துன்பம் நிறைந்த சிறை

வாழ்க்கையையும், தமிழ்ப்பணி புரிவதன் மூலம் இன்ப வாழ்க்கையாக நடத்தினர்.

சிதம்பரனர், தம் வாழ்நாள் முழுதும், தாய்நாட்டிற்காகவும், தாய்மொழிக்காகவும் உழைத்தார்; 1936-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் நாள், 'நாடு விடுதலை பெறவில்லையே' என்ற ஏக்கத்துடன் காலமானர். அவர் எதிர்பார்த்த விடுதலை 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் கிடைத்தது. அவர் ஆத்மா கண்டு களித்திருக்கும்.

சிதம்பரனரின் ஊனுடல் மறைந்தபோதிலும், அவரது புகழுடல் மறையவில்லை. 'வி. ஓ. சிதம்பரம்' என்ற கப்பலில் அவர் புகழுடல் காட்சி தருகின்றது. வ. உ. சி. கல்லூரியில் அவர் புகழ் உடல் பொருந்தியிருக்கின்றது. தமிழ் மக்கள் உள்ளங்களில் எல்லாம் அவர், 'கப்பலோட்டிய தமிழ'ஞக வீற்றிருக்கிருர்.

அரும்பொருள் :-சீமை - தேசம். பேறு - வாய்ப்பு. அலுவல் - வேலை. வழக்கறிஞர் - வக்கீல். திரவியம் - செல்வம். வண்ணம் - அழகு.

வினக்கள்

1. திருநெல்வேலிச் சீமையின் பெருமையை எழுதுக.
2. சிறந்த வீரன் யார்?
3. திலகர் யார்? அவர் கொள்கை என்ன?
4. சிதம்பரனரின் தமிழ் உள்ளம், எவ்வாறு சிந்தித்திருக்க வேண்டும்?

5 நீதிபதி பின்ஹே சிதம்பரனாரைக் குறித்துக் கூறியது என்ன?

6. சிதம்பரனார் சிறையில் பட்ட துன்பத்தைக் கண்டு பாரதியார் பாடிய கவிதைகளைக் கூறுக.

7. சிதம்பரனார் சிறையில் செய்த தமிழ்த் தொண்டைக் கூறுக.

8. சிதம்பரனாரின் புகழுடல் எவ்வாறு காட்சி தருகிறது?

இலக்கணம்

1. பின்வரும் நேர்கூற்றுக்களை அயற்கூற்றுக்களாக மாற்றுக:

'நான் சொன்னபடி செய்' என்றான் முருகன்.
'என்னிடம் கொடு' என்றார் என் தந்தை.

2. கலவை வாக்கியமாக மாற்றுக:
கண்ணன் நன்றாகப் படித்தான். பரீட்சையில் தேறினான்.

3. செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக:

கம்பர் இராமாயணம் பாடினார்.
இராமன் இராவணனை வென்றான்.
என் நண்பன் புத்தகங்களை வாங்கினான்.

கட்டுரை

சிதம்பரனாரின் நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவற்றை விளக்கி ஒரு கட்டுரை எழுதுக.

10. நாகனாரும் வளவனும்

[ஈ. பண்டார நம்பியார்]

சோழ வள நாட்டில் வெள்ளைக்குடி என்னும் ஊர் ஒன்றுளது. அவ்வூர் வேளாண் குடியினர்க்கு நிலைக்களமாக விளங்கிற்று. அங்கு, உழவர் குலம் உய்யத் தோன்றினார், நாகனார் என்னும் நல்லிசைப் புலவர். அவர், இளமையிலேயே இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார்; சிறந்த கவிதைகள் புனைந்து வந்தார். அவர் கவிதைகளுக்கு நாடெங்கும் நல்ல வரவேற் பிருந்தது. என்றாலும், நாகனார், பரிசில் வாழ்க்கையை மேற்கொள்ளாது, தம் குலத்திற் குரிய உழவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார். அவரால் வெள்ளைக்குடி என்னும் ஊர் விளக்கம் பெற்றமையால், எல்லோரும் அவரை ஊர்ப் பெயரோடு சேர்த்து, "வெள்ளைக்குடி நாகனார்" என்று அழைத்து வந்தனர்.

நாகனார் காலத்தில், சோழ நாட்டை ஆண்டுவந்த அரசன், கிள்ளிவளவன் என்னும் பெயரினன். அவன், குளமுற்றம் என்னும் இடத்தில் இறந்ததுபற்றி, 'குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்' என்று வழங்கப்பட்டான். அவன் செந்தமிழ்ப் புலவனாகவும் விளங்கினான். கோவூர் கிழார் போன்ற பெரும் புலவர்கள், அவன் அவைக்களத்தில் அமர்ந்திருந்தனர். அரசன், அவர்களோடு அளவளாவி, புலமை யின்பத்தில் பொழுதைப் போக்கி வந்தான். ஆதலின், நாட்டின் உயிர்நாடியான உழவுத் தொழில் தன்னாட்டில் உயர்வடைவதற்கான எவ்வித முயற்சியும் செய்

தானில்லை. நாளடைவில் உழவுத் தொழில் குன்றியது. வானம் பொய்த்தமையால் நாட்டில் வளங் குறைந்தது. வளவன் நாட்டிலும் வறுமை எட்டிப் பார்த்தது. உழவர்குலம் பட்ட அல்லலுக்கு அளவில்லை. மக்கள் பசிப்பிணியால் துன்புற்றார்கள்; மன்னனைக் கண்டு மனக் குறையை எடுத்துரைக்கும் வகை அறியாது வருந்தினார்கள். அரசனைக் காண்பது, அத்துணை அருமையாயிற்று.

இந் நிலையில், உயிருக்கு இறுதி பயப்பினும் உண்மையை எடுத்துரைத்து, மன்னனை நல்வழிப் படுத்த உறுதிகொண்டார் நாகனார் என்னும் நல்லிசைப் புலவர். அவர் அரசனை நேரில் பார்ப்பதற்குரிய வழியை ஆராய்ந்தார்; வரி கொடாமையே அதற்குரிய வழியாகும் என்ற முடிவிற்கு வந்தார்; தமது நிலங்களுக்கு வரி கொடுப்பதை நிறுத்தினார். தண்டல்காரர்கள், அவரை அழைத்துச் சென்று, வளவன் முன் நிறுத்தினார்கள். தம் எண்ணம் நிறைவேறியது கண்டு மகிழ்ந்தார் புலவர்.

அரசன் புலவரை நோக்கி, "நீர் வரிப்பணம் செலுத்தாமையின் காரணம் என்ன?" என்று வினவினான். அப்பொழுது நாகனார், அரசனை நோக்கி, "மூவேந்தர்களுள்ளும் முதன்மை பெற்று விளங்கும் வளவர் பெருமானே! காவிரியாறு பாய்தலால் வேலி ஆயிரம் விளையும் விளையுளை யுடையது உனது சோழ நாடு. பொருந்திய செல்வம் மிக்க இந் நாட்டின் பீடுகெழு வேந்தே! நான் கூறுவன சில வுள. அவற்றைக் கேட்பாயாக. அரசே! எளிய குடி

யானவர்கள், தங்கள் குறைகளைக் கூறுதற்கு இடங் கொடுத்து, அவர்கள் குறைகளை நீக்கி ஆளுவ தன்றோ காவலனான உனது கடமை? அத்தகைய அரசன் ஆளும் நாட்டில்தான், காலந் தவறாது மழை வளம் சுரக்கும் என்பதை நீ அறிந்துகொள்ளுதல் வேண்டும். அரசன் ஒருவன் செங்கோல் தாங்கி அரியாசனத்தில் அமர்ந்திருப்பது, தன் புகழைப் பரப்புவதற்காகவா? குடிகளைக் காப்பதற்காக வன்றோ? வெண் கொற்றக் குடை நிழற்றுவது வெயிலை மறைப்பதற்காகவா? குடிகளின் துன்பத் தைத் துடைப்பதற்காக வன்றோ? வளவ! நீ பகை வரை வெல்வது எதனால் என்று எண்ணுகின்றாய்? படை வலிமையினாலா? இல்லை; இல்லை. உழுகின்ற கலப்பை ஊன்று சாலிடத்து விளைவிக்கும் நெல் லின் வலிமையினால் என்பதை நீ அறிந்துகொள்வா யாக. நாட்டில் எவ்விதமான கேடு நேர்ந்தாலும், உலகம் மன்னனையே பழித்துரைக்கும். இதனை நீ நன்கு உணர்ந்தனையாயின், உழவர்குலம் உயர வழி வகுத்து, அதனால் பிற குடிகளையும் பாதுகாப்பாய். அப்பொழுது நின் அரசும் சிறக்கும்; நாடு நலம் பெறும்; பகைவரும் நின்னடி வணங்கி வாழ்த்துவர்" என்று மன்னன் மனங்கொள எடுத்துரைத்தனர்.

புலவர் மொழிகளை அமைதியாகக் கேட்ட அரசன், அறிவு விளக்கம் பெற்றான்; உழவர்க்கு நேர்ந்த குறையை உடனே நீக்கினான்; நாட்டிற் குழைத்த நாகனாரின் நல்லியல்பைப் பாராட்டி, அறம் உணர்த்திய அறிவுரைக்காக அவருக்கு நன்றி கூறி அனுப்பினான்.

அன்று முதல், சோழ வளநாடு வளம் சிறந்தது. மக்கள் பசியும் பிணியு மின்றி வாழ்ந்தனர். அரசனும் வளவன் என்னும் தன் பெயர் விளங்க வாழ்ந்தான்.

அரும்பொருள் :- உய்ய - ஈடேற. துஞ்சிய - இறந்த. அவை - சபை. வளவன் - வளமுடைய நாட்டை ஆண்ட சோழன். வேலி - ஒருவகை நிலத்தளவை. பீடு - பெருமை. காவலன் - அரசன். அரியாசனம் - சிங்காசனம். துடைப்பதற்கு - நீக்குவதற்கு. பிணி - நோய். சால் - உழவுசால்.

வினாக்கள்

1. நாகனாருக்கு, வெள்ளைக்குடி நாகனார் என்று பெயர் வழங்கக் காரணம் என்ன ?

2. நாகனார் காலத்தில் சோழ நாட்டை ஆண்ட மன்னன் யாவன் ?

3. வளவன் உழவுத்தொழிலைக் கவனியாது வாழக் காரணம் என்ன ?

4. நாகனார் அரசனை நேரில் பார்ப்பதற்குச் செய்த சூழ்ச்சி யாது ?

5. புலவர் அரசனுக்குக் கூறிய அறிவுரையை உன் சொந்த நடையில் எழுதுக.

பயிற்சி

ஒரே வாக்கியமாக எழுதுக :

1. அரசன் அறிவு விளக்கம் பெற்றான்.
2. அவன் உழவர் குறையை நீக்கினான்.
3. அவன் நாகனாரைப் பாராட்டினான்.
4. அவன் நாகனாருக்கு நன்றி கூறி அனுப்பினான்.

இலக்கணம்

'செய்தான்' என்பது தானே செய்யும் வினை. இதனால் இதற்குத் தன்வினை என்று பெயர். இதனைப் பிறன் செய்யும் வினையாகக் கூறவேண்டுமாயின், 'செய்வித்தான்' என்று கூற வேண்டும். இது பிறவினை.

'செய்' என்னும் பகுதியுடன் 'வி' என்ற எழுத்தைச் சேர்த்தால், அது பிற வினையாக மாறும். இம் மாதிரி தன் வினையைப் பிற வினையாக்கும் விகுதிகள் இன்னும் சில உண்டு.

தன்வினை		பிறவினை		விகுதி
வா	—	வருவி	—	வி
கல்	—	கற்பி	—	பி
போ	—	போக்கு	—	கு
பாய்	—	பாய்ச்சு	—	சு
உருள்	—	உருட்டு	—	டு
நட	—	நடத்து	—	து
எழு	—	எழுப்பு	—	பு
துயில்	—	துயிற்று	—	று

வாழ்ந்தான், தேய்த்தான், மருண்டான், சென்றான், ஆழ்த்தினான், விடுவித்தான் — தன்வினைகளைப் பிறவினைகளாகவும், பிறவினைகளைத் தன்வினைகளாகவும் மாற்றுக.

கட்டுரை

உழவின் சிறப்பை யாவது, மன்னனின் கடமையை யாவது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

11. வானவூர்தி

[எஸ். குமாரவேல் M. A., L. T.]

பண்டைக் காலத்தில் நமது முன்னோர்கள் ஆகாய வழியேயும் பயணம் செய்துகொண் டிருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. வாயு மைந்தனாகிய அநுமன், வானத்தை ஆறாகக் கொண்டு, ஆரியர்க்காக இலங்கை சென்றான். சீவகன் தாய், மயிற்பொறியின் மீது ஏறி ஆகாய வழியாகச் சென்று ஓர் இடத்தில் இறங்கினாள். இராமபிரான், இராவணனை வென்ற பின்பு, தேவியாரோடும் இலக்குவனோடும் அயோத்திக்கு விமானத்தில் பறந்து சென்றான். இவை போன்ற நிகழ்ச்சிகள் பல நமது இலக்கியங்களில் காணப்படினும், நம் மக்கள், 'இவை கவிஞர் கற்பனை' எனக்கொண்டு, இவற்றைமெய்ப்பிக்கும் முயற்சியில் தலைப்படாது காலத்தை வீணாக்கினர்.

மேனாட்டு மக்கள், பறவைகளோடு போட்டியிட்டு, 'ஆகாயத்தில் பறக்க வேண்டும்' என்ற ஆசையால், அத் துறையில் இடைவிடாது முயன்று வந்தனர். இத்தாலிய நாட்டில் லியோநார்டோ டி வின்சி என்பவர் ஆகாயத்தில் பறப்பதற் குரிய வழிகளை ஆராய்ந்து கொண்டிருந்தார். பிரான்சு தேசத்தைச் சார்ந்த மான்ட் கோல்வியர் என்பவருடைய பிள்ளைகள் புகைக்கூண்டு ஒன்று செய்து, அதில் ஆடு, கோழி முதலியவைகளை வைத்துக் கட்டிப் பறக்கவிட்டனர்.



புகைக் கூண்டு

எம். ரோஸியர் என்பவரும், மேஜர் ஆர். லாண்டி என்பவரும் புகைக் கூண்டில் 3000 அடி வரை உயரத்தில் பறந்தனர். 1783-ஆம் ஆண்டில் சார்லஸ் என்பவர், புகைக் கூண்டில் பறந்து சென்றார். இவ்வாறு பலரும் வானத்தில் பறப்பதற்கு முயன்றுவந்தபோதிலும், முழுவெற்றி ரைட் சகோதரர்களுக்கே கிடைத்தது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் டெயிடன் (Dayton) என்னும் நகரில் ஓர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற



ரைட் சகோதரர்கள் செய்த விமானம்

இரு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் விண்ணில் பறப்பதற் குரிய வழிகளைப் பொறுமையாக ஆராய்ந்துவந்தார்கள்; மூன்று ஆண்டுகள் இடைவிடாது உழைத்தார்கள். அவ் வுழைப்பின் பயனாக, அவர்கள் 1903-ஆம் ஆண்டு வானவூர்தி ஒன்றுசெய்து முடித்தார்கள். அது மணிக்கு முப்பது மைல் பறக்கக் கூடியதாக இருந்தது. ரைட் சகோதரர்களில் ஒருவர், முதன் முதலாகப் பறந்து காட்டினார். அவர்களது முயற்சியின் வெற்றிதான், இன்றையப் புதுமுறை வானவூர்திகளின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று. ரைட் சகோதரர்களும் புகழுடம்பு பெற்று விளங்குகிறார்கள். நம் முன்னோர்கள் கண்ட கனவை நனவாக்கும் பெருமை, மேனாட்டினருக்கு உரிய தாயிற்று.

அறிஞர்கள் பலரின் ஆராய்ச்சியின் பயனய் வெளிவந்த வானவூர்தி, வானத்தில் பறந்து செல்லும் பறவைகளின் வடிவம் போன்றே அமைக்கப்பட்டிருக்கின்றது. வானத்தில் பறந்து செல்லும் வானவூர்தி யொன்றை, அதைப் பற்றி நன்குணராத இளைஞர்கள் பறவை ஒன்று பறப்பதாகவே கொள்வார்க



ஆகாய விமானம்

ளாயின், குறை கூறுவதற்கில்லை. பறவைக் கிருப்பது போன்று, அதற்கும் இரண்டு புறங்களிலும் இரண்டு இறக்கைகள் அமைந்துள்ளன. இறக்கைகளின் நடுவில், உடல் போன்று அமைக்கப்பட்டிருக்கும் உறுப்பில் பயணம் செய்வோர் இருப்பதற்கு இடம் அமைக்கப்பட் டிருக்கின்றது. பறவையின் அலகு போன்று முன்புறம் அமைக்கப்பட்டிருக்கும் விசிறி, வானவூர்தி பறக்கும் வேளையில், கறங்குபோன்று சுற்றிக் கொண்டே இருக்கின்றது. பின்பக்கம், பறவையின் வால்போன்று நீண்டிருக்கின்றது. கீழே

அமைக்கப்பட்டிருக்கும் சக்கரங்கள், பறவைகளின் கால்கள் போன்று, வானவூர்தி கீழே இறங்கும் பொழுதும், உயரக் கிளம்பும் பொழுதும், அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் தண்டவாளங்களின் வழிச் சிறிது தூரம் செல்வதற்கு உதவுகின்றன.

ஒரு நாட்டை ஆக்குவதற்கும், அழிப்பதற்கு முள்ள ஆற்றல், வானவூர்தியிடம் அமைந்திருக் கின்றது. ஒரு நாட்டின் படை வலிமையை நிச்சயிக் கின்றவற்றுள் முக்கியப் பங்கு இவ் வானவூர்திக்கு முண்டு. இரண்டாவது உலக யுத்தத்தில், வான வூர்தியின் வலிமை நன்கறியப்பட்டது. செலுத்து வோரின்றிச் சென்று, பகைவர் நாட்டைத் தாக்கின வானவூர்திகள். சமாதான காலத்தில் அதன் பொறுப்பு மகத்தானது. குறைந்த நேரத்திற்குள் நீண்ட தூரம் செல்வதற்குரிய சாதனம் அதைத் தவிர வேறில்லை. காலை உணவு கழிந்து திருவனந்த புரத்திலிருந்து புறப்படும் ஒருவன், ஐந்நூறு மைல் களுக்கு அப்பாலுள்ள சென்னை வரையில் சென்று விட்டு, மத்தியான உணவிற்கே தன் வீடு வரமுடி கின்றது என்றால், அதன் சிறப்பு உங்களுக்கு அதிசயத்தைக் கொடுக்க வில்லையா?

அரும்பொருள் :- மயிற்பொறி - மயில் போல் செய்யப் பட்ட ஊர்தி. கற்பனை - புனைந்துரை, பொய். ஊர்தி - வாகனம், விமானம். ஆற்றல் - வன்மை. புகழுடம்பு பெறுதல் - இறத்தல். சாதனம் - கருவி.

வினாக்கள்

1. மேனாட்டில் வானத்தில் பறக்கும் முயற்சியில் உழைத்தவர்கள் யாவர்?

2. அம் முயற்சியில் வெற்றி பெற்றவர் யாவர்?
3. வான வூர்தியின் அமைப்பை விளக்குக.
. அதன் உபயோகங்களை எழுதுக.

பயிற்சி

எதிர் மொழி தருக:

கனவு, வட்டம், இறங்கு, செல்வதற்கு, ஆக்குதல், மேனாடு.

இலக்கணம்

'அறம் வாழ்க' அறம் என்ற சொல்லை வாழ்க என்ற சொல் தொடர்ந்து நிற்கின்றது. இதில் முதலில் நிற்கும் சொல்லுக்கு நிலை மொழி என்றும், பின்னால் வரும் சொல்லுக்கு வருமொழி என்றும் பெயர்.

நிலை மொழியின் இறுதியும் வருமொழியின் முதலும் இயல்பாகவோ, அன்றி விகாரமாகவோ சேர்வது புணர்ச்சி எனப்படும்.

மரம் + வளர்ந்தது — மரம் வளர்ந்தது — இயல்பு.
மண் + குடம்— மட்குடம்—விகாரம்.

இவ் விகாரம் தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும். வாழை + பழம் - வாழைப்பழம் - தோன்றல். உள் + பட்டு-உட்பட்டு - திரிதல். மரம் + வேர் - மரவேர் - கெடுதல்.

அறநெறி, வாச்சொல், மட்குடம், மனநிலை—இவற்றில் வந்துள்ள விகாரங்கள் யாவை?

கட்டுரை

வான வூர்தியின் அமைப்பும், உதவியும் விளங்கும்படி ஒரு கட்டுரை எழுதுக.

12. குதிரைகள் புலம்பல்

[கவிமணி, சி. தேசிகவிநாயகம் பிள்ளை]

கற்றுத் தெளிந்தநல் மானிடரே !—எம்மைக்
காக்கப் பிறந்த பெரியாரே !
சற்றும் அறிவிலா எம்மொழிக்குச்—செவி
சாய்க்கத் திருவுளம் கொள்வீரே. 1

வளர்ந்து வரும்வாலை வெட்டி வெட்டித்—தேய்ந்த
மாறுபோ லாக்கிக் குறைத்திடும் நீர்
தளர்ந்த பொழுதெங்கள் ஈப்பகை—ஓட்டிடத்
தக்க உதவிகள் செய்வதுண்டோ ? 2

இரும்புக் கடிவாளம் மாட்டுவதேன் ?—வாயும்
ஈசன் படைத்த திதற்காமோ ?
பெரும்புவி மீதினில் உங்களுக்கும்—இந்தப்
பேதைகள் செய்த பிழைகளுண்டோ ? 3

வம்புகள் பேசிடும் வாயையன்றோ—பூட்டி
வைப்பது நீதி முறையாகும் ?
நம்பி இருப்போர்க்குத் துன்பம்—இழைப்பது
நல்லோர் பெரியோர் செயலாமோ ? 4

வெள்ளிப்பூண் கட்டிய சேணமிட்டால்—நெஞ்சு
வேதனை யில்லா திருந்திடுமோ ?
அள்ளி யிடும்பிடிப் புல்லுக்காக—எங்கள்
ஆவியைக் கொள்வ தழகாமோ ? 5

பக்கம் திரும்பியே பார்த்திடாமல்—எங்கள்
பார்வையைக் கட்டி மறைப்பதுமேன் ?
திக்கெலாம் தந்த பிரமனிலும்—நீவிர்
தீவிர புத்தி உடையவரோ ? 6

திண்ணிய லாடமும் கட்டுவதேன் ?—அதில்
தீயெழ எம்மையும் ஓட்டுவதேன் ?
புண்ணியம் நீர்செய்ய வேண்டாமையா—எம்மைப்
போக்கிலே விட்டிடில் போதுமையா. 7

எண்ணிக்கை யற்றதோல் பட்டைகளைக்—கட்டி
எம்மீ திறுக்கி முறுக்கி வைப்பீர் ;
கண்ணுக் கழகவை ஆயிடினும்—எங்கள்
கண்டம் நெரிவ தறியீரோ ? 8

பற்றி முதுகினில் ஏறிக்கொள்வீர் ;—எம்மைப்
பட்சிகள் போலப் பறக்கச் செய்வீர் ;
சற்றும் இரக்கம் இல்லாதவரே—நீங்கள்
சாத்திரம் கற்ற பயன் இதுவோ ? 9

சித்தம் இரங்கிட வேண்டுகின்றோம் ;—எம்மைச்
சேமமாய்க் காத்திடக் கெஞ்சுகின்றோம் ;
புத்த முனியருள் போதனையை—என்றும்
போற்றுதல் உங்கள் கடனுமே. 10

அரும்பொருள் :—மாறு - துடைப்பம். புவி - பூமி. ஈசன் - கடவுள். வம்பு - வீண். சேணம் - மெத்தை. ஆவி - உயிர். திக்கு - திசை. சித்தம் - மனம். போதனை - உபதேசம். போற்றுதல் - பின்பற்றி நடத்தல்.

பயிற்சி

குதிரைகள் புலம்பலை உன் சொந்த நடையில் எழுதுக.

இலக்கணம்

'சொல்வாய்' இவ் வினைச்சொல் கட்டளைப் பொருளில் வருகிறதல்லவா? இதற்கு ஏவல் வினை என்று பெயர். இது முன்னிலையில் மட்டும் வரும்; இது ஏவல் ஒருமை.

'சொல்வீர்' என்பது ஏவற் பன்மை. ஏவல் ஒருமைக்கு 'ஐ', 'ஆய்', 'இ' என்பன விகுதிகளாக வரும். பன்மைக்கு 'ஈர்', 'உம்', 'மின்' என்பன விகுதிகளாம். வருவை, வாராய், வருதி - ஏவலொருமை. வாரீர், வாரும், வம்மின் - ஏவற் பன்மை. ஏவல் வினைகள் முன்னிலையில் மட்டும் வரும்; கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்; ஒருமைக்கும் பன்மைக்கும் வேறு வேறு விகுதிகளைப் பெற்று வரும்.

இன்னும் ஒருவகை ஏவல் உண்டு. அது வாழ்த்துதல், வேண்டுகோள், வசை முதலிய பொருள்களை உணர்த்துவதாய் மூவிடங்களுக்கும் பொதுவாய், ஒருமைக்கும் பன்மைக்கும் ஒரே விகுதியை உடையதாய் வரும். அதற்கு வியங்கோள் வினை என்று பெயர்.

உதாரணம்: வாழ்க, வருக, தருக.

கட்டுரை

ஈனமாடு தன்குறைகளைக் கூறுவதுபோல ஒரு கட்டுரை எழுதுக.

13. எனது கடற்பிரயாணம்

சென்னை,
10—10—51

அன்புள்ள நண்ப! வணக்கம்

எனது அயல்நாட்டுப் பிரயாணத்தை முடித்து இன்றுதான் நான் ஊர் வந்து சேர்ந்தேன். இப்பிரயாணத்தால் நான் அடைந்த நன்மைகள் பல. நீயும் உலகத்தை ஒரு முறையாவது சுற்றிப் பார்க்க வேண்டுமென்பது எனது ஆசை. எனது பிரயாண அனுபவங்களை உனக்கு அறிவிப்பதின் மூலம், அந்த ஆசையை நான் நிறைவேற்றலாம் என்று நம்புகிறேன். "உலகை ஒரு முறையாவது சுற்றிப் பாராதவன் கிணற்றுத் தவளைக்குச் சமம்" என்று நம் முன்னோர்கள் கூறுவது முற்றிலும் உண்மை.

நான் சென்னைத் துறைமுகத்திலிருந்து ஒரு கப்பலில் புறப்பட்டு, நேர் கிழக்காகக் கடலில் பிரயாணம் செய்து, சில நாட்களில் பர்மா தேசத்தின் தலைநகரான இரங்கூனை அடைந்தேன். நமக்கு அரிசி, தேக்கு, வைரம், மண்ணெண்ணெய் முதலியவற்றை அளித்து வருகின்ற நாடு பர்மா அல்லவா? அந்த நாட்டில் ஓடுகின்ற ஐராவதி நதியை நான் பார்த்தேன். அந் நதியின் கிளைகளுள் ஒன்றன் கரையில்தான், நான் சென்று சேர்ந்த இரங்கூன் நகர் அமைந்துள்ளது. பர்மாவில் பேர்போன மண்ணெண்ணெய்க் கிணறுகள் பார்க்கத் தக்கன. அவற்றில் ஆயிரக் கணக்கான மக்கள் வேலை செய்கின்றனர். பர்மியர் மிகவும் நற்குண முடையவர்களாகக் காணப்படுகின்

றனர். பல சாதிப் பிரிவுகள் அவர்களிடம் இல்லை. ஒரு தாய் வயிற்று மக்களைப் போல் அவர்கள் பழகுகின்றனர். அவர்களுக்கு விளையாட்டில் விருப்பம் அதிகம். பர்மியர் பல வர்ணமுள்ள பட்டாடைகளை அணிந்து கொண்டு, பலவித வர்ணக் குடைகளுடன் உல்லாசமாகக் காலங் கழிக்கின்றனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேற்றுமை காண்பது அரிதாயிருக்கின்றது. அவர்கள் புத்தமதத்தைப் பின்பற்றுபவர். அவர்களுடைய பகோடா என்ற புத்த ஆலயத்தை நான் தரிசித்தேன்.

பிறகு நான் இரங்கூனிலிருந்து தெற்குநோக்கிச் சென்று, பினங்கை அடைந்தேன். இது ஒரு தீவில் இயற்கையாய் அமைந்த அழகிய துறைமுகப் பட்டினம். இங்கிருந்து தென்கிழக்காகச் சென்று நான் சிங்கப்பூரைச் சேர்ந்தேன். அங்குள்ள துறைமுகம் இயற்கையாகவே பல வசதிகள் வாய்ந்தது. பல பெரிய கப்பல்கள் அங்குத் தங்கி இருக்கின்றன. சிங்கப்பூரைச் சுற்றிப் பல தீவுகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை சுமத்ரா, ஜாவா, போர்னியோ, செலிபிஸ் என்பன. இவற்றிற்குப் பொதுவாகக் கிழக்கிந்தியத் தீவுகள் என்று பெயர். இத் தீவுகளில் காடுகள் அதிகம். அதனால் மழையும் அதிகம். பூமி சதுப்பு நிலமாக இருப்பதால், அங்குள்ள மக்கள், மூங்கில்களை நட்டு அவற்றின் மீது வீடுகட்டி வாழ்கின்றனர். சிங்கப்பூர், தென்கிழக்கு ஆசியாவுக்கே மிக முக்கியமான துறைமுகம்.

சிங்கப்பூரிலிருந்து வடகிழக்காகப் பிரயாணம் செய்து, நான் ஹாங்ஹாங் என்னும் துறைமுகத்தை

அடைந்தேன். இதுவே சீனாவின் தெற்கு வாயிலாகக் கருதப்படுவது. சீனா, புராதன நாகரிக முள்ள நாடு. அதைப் பற்றி நீ தனியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். சீனர்களின் பழக்க வழக்கங்களும் விசித்திரமா யிருக்கின்றன. பொதுவாகச் சீனர்கள், அன்னியர்களை மரியாதையாக வரவேற்று உபசரிக்கின்றார்கள்.

சீனாவின் வடகிழக்கில் பிரயாணம் தொடங்கி, நான் ஒரு தீவுக் கூட்டத்தை அடைந்தேன். இத் தீவுக் கூட்டமே ஜப்பான் நாடு. ஜப்பான் என்பதற்குச் 'சூரியோதய பூமி' என்று பெயர். ஜப்பானியர்களும், பல அம்சங்களில், சீனர்களைப்போன்றே இருக்கின்றனர். இவர்கள் தங்கள் அரசரைத் தெய்வமெனக் கொண்டாடுகின்றார்கள். இவர்களும், அதிதிகளை உபசரிப்பதில் பெயர் பெற்றவர்கள்.

இந் நாட்டில், எரிமலைகள் அதிகம். அடிக்கடி நிலநடுக்கங்கள் நிகழும். இக் காரணத்தினால் இம் மக்கள் பெரும்பாலும் தங்கள் வீடுகளைக் காகிதம், அட்டை, மூங்கில் முதலியவற்றால் அமைத்துக்கொள்கின்றனர்; ஜப்பானியருடைய வீடுகள், பெரும்பாலும் ஒரு பெரிய அறையைக் கொண்டவையா யிருக்கும், இரவு நேரங்களில் தட்டிகளைக்கொண்டு அவர்கள் சிறு அறைகளாகத் தடுத்துக்கொள்வார்கள்; வீடுகளில், தரைகளின்மேல், பாய்களை விரித்து உட்காருவார்கள். இவர்களுக்குச் சித்திரங்களில் பிரியம் அதிகம். பாய்களிலும், திரைச் சீலைகளிலும், உணவுக் கலன்களிலும் சித்திர வேலைப்பாடுகள் காணப்படும். இவர்கள் நாகரிகமாக உடை யுடுத்துகின்றனர். இந்

நாட்டில் கைத்தொழில்களும் அதிகம். எங்கும் பற்பல கைத்தொழிற்சாலைகள் காணப்படும்.

நான் ஜப்பானிலிருந்து தென் கிழக்காகப் பிரயாணம் செய்து தென் அமெரிக்காவை அடைந்தேன். இதன் வடபாகத்தில், அமேஸான் என்ற ஒரு

அமேஸான் காடு

பெரிய நதி ஓடுகிறது. இந் நதியின் இரு கரைகளிலும், அடர்ந்த காடுகள் இருக்கின்றன. இவற்றில் பல கொடிய பிராணிகள் வசிக்கின்றன. இங்கு சுமார் ஒரு அடி நீளமுள்ள ஒருவகை எறும்புகளும், ஈக்கள், குரங்குகள், பலவிதப் பாம்புகள், பல வர்ணங்

கள் உள்ள பறவை வகைகளும் வசிக்கின்றன. இந் நாட்டின் தென் பாகத்தில், ஏராளமான புல்வெளி கள் காணப்படுகின்றன. இவற்றில் ஆடு மாடுகளும் குதிரைகளும் இலட்சக் கணக்கில் மேய்கின்றன. இங்குள்ள பிச்சைக்காரர்கள்கூடக் குதிரைகளின் மீது ஏறிச் சென்று பிச்சை எடுக்கின்றனர்.

பின், நான், தென்னமெரிக்காவிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்று, ஆப்பிரிக்காக் கண்டத்தை அடைந் தேன். இதன் வடபாகத்தில், சஹாரா என்ற ஓர் பெரிய பாலைவனம் இருக்கிறது. அதன் கிழக்குப் பாகத்தில் எகிப்து என்ற வளமுள்ள நாடு உள்ளது. இங்குப் பாயும் நைல் நதியின் வண்டல் மண்ணே இதைச் செழிப்பாகச் செய்துள்ளது. இங்கேதான், உலகப் புகழ் வாய்ந்த பிரமிட் என்னும் கற்கோபுரங் கள் இருக்கின்றன. அவை பெரும்பாலும் இறந்த அரசர்களின் சமாதிகளாகக் கட்டப்பட்டவைகளாம். அவற்றில் சில கோபுரங்களை நான் பார்த்தேன். அவற்றிற்குள்ளே போய்ப் பார்க்கவேண்டும் என்பது என் ஆசை. ஆனால், அதற்கு நேரமில்லை. வெளியி லிருந்தபடியே, நான் அவற்றின் அமைப்பைப் பார்த்து வியந்தேன். 'ஒவ்வொன்றும் எவ்வளவு பெரிய கற்களால் ஆனது! அவை கட்டிமுடிக்க எவ் வளவு காலம் ஆயிருக்கும்?' என்பவற்றை நினைக்கும் போது, அந்நாட்டு மக்களின் மனவுறுதியும், உழைப் பும் விளங்குகின்றன. ஆப்பிரிக்காவின் மத்தியி லுள்ள அடர்ந்த காடுகளில், பிக்மிகள் என்ற நாகரிக மற்ற முரட்டுக் கறுப்புக் குள்ளர்கள் வசிக்கின்றனர். இவர்கள் பார்ப்பதற்கே பயங்கரமாயிருக்கின்றனர்.

ஆப்பிரிக்காவிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்று, நான் ஆஸ்திரேலியாவை அடைந்தேன். இங்குள்ள பறவைகள், விலங்குகள், மரங்கள் முதலியன எல்லாம் விநோதமாகக் காணப்படுகின்றன. இதன் பழங் குடிகள் நாகரிகமற்றவர்கள். இப்பொழுது இங்கு ஆங்கிலேயர் அதிகமாகக் குடியேறியிருக்கின்றனர். ஆஸ்திரேலியாவிலிருந்து வடமேற்காகப் பிரயாணம் செய்து, மீண்டும் நான் சென்னையை வந்தடைந்தேன்,

நண்பனே! இக் கடற்பிரயாணத்தில், நான் எத்தனையோ விதமான மக்களைச் சந்தித்தேன்; அவர்களுடைய பேச்சுத் தெரியாமல் விழித்தேன்; ஆனால், ஆங்கிலத்தின் துணைகொண்டு ஒருவாறு சமாளித்தேன். நாடுகள், இயற்கை யமைப்பிலும், தட்ப வெப்ப நிலைகளிலும் ஒன்றுக்கொன்று எவ்வளவோ மாறுபட்டுக் காணப்படுகின்றன. ஆங்காங்குள்ள பிராணிகள், மரங்கள் முதலியவற்றின் தோற்றங்கள் மிகவும் அதிசயமானவை. இவற்றையெல்லாம் நேரிற் காணாத ஒருவனுடைய அறிவு, மிகவும் அற்பமானதே. இத்தகைய உலகைப் படைத்த இறைவன் பெருமை அளவிடற்கரியது என்று கூறி இக் கடிதத்தை நான் முடிக்கின்றேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள நண்பன்,
உலகநாதன்.

அரும்பொருள் :— தரிசித்தேன் - பார்த்தேன். வாயில் - வழி, வாசல். புராதன - பழைய. அதிதிகள் - விருந்தினர். கலன் - பாத்திரம். சமாதி - பிணம் புதைக்குமிடம், இடுகாடு. குள்ளர் - குறுகிய உருவத்தினர். படைத்த - உண்டாக்கிய.

வினாக்கள்

1. பர்மியர், ஜப்பானியர் இவர்களைப் பற்றி உலக நாதன் கூறுவன யாவை?

2. தென்னமெரிக்காவைப் பற்றி நீ இக் கடிதத்தால் அறிந்துகொண்டன யாவை?

3. இக் கடிதத்தால் நீ பெற்ற நன்மைகள் யாவை?

பயிற்சி

தக்க சொற்கள் சேர்த்து முடிக்க :

ஜப்பானியருடைய வீடுகள், பெரும்பாலும், ————.

பல ஜாதிப் பிரிவுகள் அவர்களிடம் ————.

ஆங்காங் குள்ள பிராணிகள் மரங்கள் முதலியவற்றின் ————.

இலக்கணம்

இனிய சொல், இன்சொல் - இவ் விரு தொடர்களில் இன்சொல் என்பது இனிமையாகிய சொல் என்றும்: 'ஆகிய' இடையில் தொக்கது. இவ்வாறு இடையில் உருபு தொகவரும் தொடர்கள் தொகை எனப்படும்.

தொகை	தொடர்
பாய் மா	—பாய்ந்த மா (வினைத்தொகை)
செந்தாமரை	—செம்மையாகிய தாமரை (பண்புத் தொகை)
பனை மரம்	—பனையாகிய மரம் (இரு பெய ரொட்டுப் பண்புத் தொகை)
மலர்ப் பாதம்	—மலர்போன்ற பாதம் (உவமைத் தொகை)
நன்மை தீமைகள்	—நன்மையும் தீமையும் (உம்மைத்தொகை)
என் மாடு	—என்னுடைய மாடு (வேற்றுமைத் தொகை)

கட்டுரை

பல நாடுகளைக் கண்டு மீள்வதால் உண்டாகும் நன்மையைப் பற்றி உன் தோழனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

14. பயிற்சி (மௌனமாய் வாசி)

திருவிழாக் கூட்டத்தில் ஒரு திருடன் ஒருவருடைய பணப்பையைக் களவு செய்கிறான். பணப்பைக் குரியவர், சமயத்தில் பார்த்துவிடுகிறார். உடனே பெருங் கூச்சல் போடவே, திருடன் பையுடன் ஓடிப்போக முயல்கிறான். பக்கத்தி லிருந்தவர்கள் அவனைப் பிடித்து அடிக்கத் தொடங்குகிறார்கள். இச் சமயம் ஒரு போலீஸ்காரன் 'அதென்ன கூச்சல்' என்று கேட்டுக்கொண்டே வருகிறான். பணப்பைக் குரியவர் அவனைப் பார்த்து, "ஐயா, நான் திருவிழாக் காட்சியில் கவனமாயிருக்கும் பொழுது, இவன் என் பையில் கையைவிட்டு என் பணப்பையைத் திருடிவிட்டான். நல்ல சமயத்தில் பார்த்துவிட்டேன். இவன் ஓட யத்தனித்தான். உடனே பக்கத்திலிருந்த என் நண்பர் இவனைப் பிடித்துவிட்டார். இதோ இவன் கையிலிருப்பது என் பணப்பைதான்" என்கிறார். போலீஸ்காரன் திருடனைப் பார்த்து 'ஏய் திருடினாயா?' என்று கேட்கிறான்.

இக் கேள்விக்குத் திருடன் என்ன பதில் சொல்வான்? போலீஸ்காரன் தன் மேலதிகாரியிடம் இவ் விஷயத்தைத் தெரியப்படுத்தும் முறையில் எழுதுக.

இது பத்திரிகைகளில் எவ்வாறு வெளிவரும்?

இக் கதையைச் சம்பாஷணை வடிவமாக எழுதுக.

பணப்பையைப் பறிகொடுத்தவர் தம் நண்பன் ஒருவனுக்கு இதுபற்றிக் கடிதம் எழுதுவதுபோல் எழுதுக.

இந் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண் டிருந்த வேறொருவன் கூறுவதுபோல் எழுதுக.

15. அகராதி தந்த அறிஞர்

[வித்துவான், ஆ. பிறைசூடும்பெருமாள் பிள்ளை]

அருஞ் சொற்களுக்கு பொருள் அறிய வேண்டு மானால், அகராதியைத் திருப்புகின்றோம். அகராதி யில் சொற்கள் அகர வரிசைப்படி முறையாக அமைக் கப்பட்டிருப்பதால், எளிதில் பொருள் அறிய முடி கிறது. இந்த அகராதி முறை, தமிழில் அண்மையில் ஏற்பட்டதாகும். இதற்கு முன்பெல்லாம், நம் முன் னோர்கள், நிகண்டைக் கொண்டு பொருள் அறிந்து வந்தனர். நிகண்டில் அகராதி வரிசைப்படி சொற் களை அமைப்பதில்லை. தாமரை என்ற சொல்லை எடுத்துக் கொண்டால், தாமரையைக் குறிக்கின்ற சொற்கள் அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி, ஒரு செய்யுளாகப் பாடிவைத்திருப்பார்கள். இம் முறை யில் எல்லாச் சொற்களும் அமைந்திருக்கும். மனவலி படைத்த நமது முன்னோர்கள், நிகண்டுகளை மனப் பாடம் பண்ணி, அவர்களே அகராதிகளாக விளங் கினர். இக் காலத்தில், நிகண்டைக் கற்றுப் பொருள் அறிகிற முறை மறைந்தது. நமது குறையை அகராதி தோன்றி அகற்றியது. இந்த அகராதியைத் தமிழில் முதலாவது ஆக்கித்தந்த அறிஞரைப் பற்றி, நீங்கள் அறியவேண்டுவது அவசிய மல்லவா?

நமது தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தாய் நாட்டவர்களே யன்றிச் சேய் நாட்டவர்களான பெரி யார்கள் பலரும், அரும் பாடுபட்டு உழைத்திருக்கின் றார்கள். அருளானந்தர் என்ற தத்துவ போதக சுவாமி யார், டாக்டர் ஜி. யு. போப்பையர் முதலிய அறிஞர்கள்

பலரும் தமிழ்த் தாய்க்குப் புதிய அணிகள் செய்து அணிந்தவர்களாவார்கள். அவர்களுள் வீரமா முனிவர் என்பவர் தமிழ்ப் புலமையில் தலை சிறந்து விளங்கியவர்; அரிய நூல்கள் பல இயற்றிப் புகழ் பெற்றவர். அவரே தமிழ் மொழிக்கு அகராதி தந்த அறிஞராவார்.

வீரமாமுனிவர், இத்தாலிய நாட்டில் காஸ்திகிலீயோனே என்னும் ஊரில் 1680-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் 8-ஆம் நாளில் பிறந்தார். இவரது பிள்ளைப் பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி (Constantine Joseph Beschi) என்பதாகும். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப, இவர் பிற்காலத்தில் 'சான்றோராய் விளங்குவார்' என்பதற்குரிய அறிகுறிகள், இவரிடம் இளமையிலேயே காணப்பட்டன.

வீரமாமுனிவர், உரிய பருவத்தில் கல்வி கற்கலானார்; இளமையிலேயே கிறிஸ்து பெருமான் மீது பெரும் பற்றுக் கொண்டு ஒழுகினார்; மதச்சபையில் அடியாராகச் சேர்ந்து, மத நூல்களை மறவாமல் கற்று மாண்புற்றார். இவரது நுண்ணறிவைக் கண்ட கல்லூரித் தலைவர், இவரைக் 'கலைக்கடல்' என்று

போற்றினு ரென்றால், இவர் பெருமைக்கு வேறு சான்று வேண்டுமோ?

வீரமாமுனிவரின் கல்வி யாற்றலைக் கண்ட சேசு சபைத் தலைவர், முனிவரை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார். அவர் ஆணையைப் பெற்ற வீர மாமுனிவர், கடல் கடந்து போர்த்துக்கீசியருக்குத் தலைநகராய் விளங்கிய கோவா நகர் வந்து சேர்ந்தார்; தமக்குமுன்பு இருந்த குருக்களின் வழிநின்று கிறிஸ்து பெருமானின் போதனைகளைப் பரப்புவதற்கு முயன்றார். அப்பொழுது, நாட்டுமொழி அறிவு அவசிய மென்பதை உணர்ந்த அடிகள், செந்தமிழ் மொழி யைக்கற்றுத் தேர்ந்து சிறந்த புலவராய் விளங்கினர்.

அவர், நமது நாட்டு மத நூல்கள் பல வற்றையும் கற்றுத் தேர்ந்தார்; நமது நாட்டுத் துறவிகளைப் போல் உருக் கொண்டார்; அப்பொழுது தான், வீர மாமுனிவர் என்று தம் பெயரையும் மாற்றி யமைத் துக் கொண்டார். புலித்தோலில் அமர்வதும், சிவிகை ஏறி வெளிச் செல்வதும் அவர் வழக்கமாக இருந்தன. சுருங்கக் கூறினல், அவர் ஒரு தமிழ்த் துறவியாகவே விளங்கினர். அவரது அறிவுரையால் பலர் கிறிஸ் துவ மதத்தில் சேர்ந்தனர்.

அக் காலத்தில், திருச்சிராப் பள்ளியைச் சந்தா சாகிபு என்னும் மகமதிய மன்னன் ஆண்டு வந்தான். அவன் இவருடைய நுண்மதியைக் கண்டு வியந்து இவரைத் தனது திவானுக அமர்த்தினன்; இவருக்கு இஸ்மாத்தி சந்நியாசி என்ற சிறப்புப் பெயரைக் கொடுத் தான்; இன்னும் பூக்குளம், மால்வை, அரசூர், நல்லூர் ஆகிய ஊர்களையும் உவந்தளித்தான்.

கி. பி. 1740-ஆம் ஆண்டு நாதர் சிங்கு என்பான் திருச்சிராப்பள்ளியின் மீது படை யெடுத்து, சந்தா சாகிப்பைக் கைதியாகப் பிடித்துச் சென்றான். அக் காலத்தில் நம் முனிவர், மணப்பாறை என்னும் இடத்தை அடைந்து, மதத் திருத்தொண்டில் ஈடு பட்டுக் காலங் கழித்தார். இவர் 1742-ஆம் ஆண்டு, மணப்பாறையை அடுத்த ஆவூரில் வைத்து இறைவன் திருவடி யடைந்தார்.

நம் முனிவர் பன்மொழிப் புலவராய் விளங்கினார். இவர், தம் தாய்மொழியாகிய இலத்தீனைத் தவிர, எபிரேயம், கிரேக்கம், போர்த்துக்கீசியம், ஸ்பானியம், பிரெஞ்சு முதலிய மேல் நாட்டு மொழிகளிலும், சமஸ் கிருதம், தமிழ், தெலுங்கு, இந்துஸ்தானி, பெர்ஷியம் முதலிய இந்திய மொழிகளிலும் பெரும் புலவராய் விளங்கினார்.

என்றாலும், நம் முனிவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு என்றும் மறக்க முடியாததாகும். இவர் ஆக்கித் தந்த சதுரகராதியே, தமிழில் ஏற்பட்ட முதல் அகராதியாகும். இன்னும் இவர் தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், திருக்காவலூர்க் கலம்பகம், வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், அடைக்கல மாலை முதலிய பல நூல்களை இயற்றித் தமிழ்ப்பணி புரிந்திருக்கின்றார்.

இத்தகைய தமிழ்ப்பணி புரிந்த வீரமாமுனி வரைத் தமிழகம் என்றும் மறவாமல் போற்றும். இவர் புகழ் என்றும் நின்று நிலவும்.

அரும்பொருள்:— அண்மை - சமீபம். சேய் - தூரம். ஆணை - கட்டளை.

வினாக்கள்

1. நம் முன்னோர்கள் சொற்களுக்கு எவ்வாறு பொருள் அறிந்து வந்தார்கள் ?
2. தமிழ்ப்பணி புரிந்த வெளிநாட்டவர்கள் யாவர் ?
3. வீரமாமுனிவர் பிறப்பிடம் எது ?
4. அவருக்குச் சந்தாசாகிபு செய்த சிறப்புக்கள் யாவை ?
5. அவர் கற்ற மொழிகள் யாவை ?
6. அவர் தமிழ் மொழியில் ஆக்கிய நூல்கள் யாவை?

பயிற்சி

நுண்மதியை, ஆக்கித்தந்த, வரிசைப்படி, அரிய, அறிய-இவற்றை வாக்கியங்களில் வழங்கிக் காட்டுக.

இலக்கணம்

நாட்டை ஆண்டான் என்பதை நாடாண்டான் என்றும் சொல்லலாம். முன்னதில் உருபு வெளிப்பட்டிருக்கின்றது. பின்னதில் உருபு மறைந்திருக்கிறது. உருபு வெளிப்பட்டிருப்பதற்கு வேற்றுமை விரி என்றும், உருபு மறைந்திருப்பதற்கு வேற்றுமைத் தொகை என்றும் பெயர்.

விரி		தொகை
நாட்டை ஆண்டான்	—	நாடாண்டான்
கல்லால் எறிந்தான்	—	கல்லெறிந்தான்
கூலிக்கு வேலை	—	கூலிவேலை
மலையின்வீழருவி	—	மலைவீழருவி
எனது புத்தகம்	—	என்புத்தகம்
வீட்டில் புக்கான்	—	வீடுபுக்கான்

கட்டுரை

வீரமாமுனிவர் அல்லது அவர்போல் ஒரு புலவர் வரலாற்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

16. குடிசைத் தொழில்

மேல் நாடுகளான இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய தேசங்களில், நகரங்கள் மிகுந்து காணப் படுகின்றன. ஆனால், நமது இந்திய நாட்டில், கிராமங்களே அதிகமாக இருக்கின்றன. சுமார், ஏழு லட்சம் கிராமங்கள் இங்கு இருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கின்றன. இந்திய மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர், கிராமங்களில் வசிக்கின்றார்கள். உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர், இந்திய நாட்டிலுள்ள கிராமங்களில் வசிக்கின்றார்க ளென்றால், அது வியப்பேயல்லவா ?

ஒரு காலத்தில், கிராம மக்கள் தொழில் திறமை யுடையவர்களாகப் பலவிதக் கைத்தொழில்களைச் செய்து, எவ்விதக் குறைவுமின்றி, மன அமைதியுடன் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அன்று, கிராமங்களி லுள்ள ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு தொழிற்சாலை யாக விளங்கிற்று. கிராம மக்கள் நூல் நூற்றல், கம்பளி, துப்பட்டி நெய்தல், விவசாயக் கருவிகள் செய்தல், சட்டி, பானை வனைதல், எண்ணெய் ஆட்டு தல், நெற் குற்றுதல், கயிறு முறுக்குதல் முதலிய பல தொழில்களைச் செய்து வந்தனர். சுமார் நூற்றைம் பது ஆண்டுகளுக்கு முன்பு கூட, ஒவ்வொரு வீட்டி லும் பெண்கள், ஆண்கள், குழந்தைகள் எல்லோ ரும் நூல் நூற்று வந்தனர். இன்று அவைகளெல் லாம் பழங்கதைகளாகிவிட்டன. அன்னிய ஆட்சியா லும், இயந்திரங்களின் போட்டியாலும் அத் தொழில் கள் அழிவுற்றன. அதனால்தான் கொடிய வறுமையும்,

கடன் சுமையும் நாளுக்கு நாள் மிகுந்து, கிராம மக்களை வாட்டி வதைக்கின்றன.

நமது நாட்டுக் கிராமங்களில் பெரும்பாலோர், விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்டு உழைக்கின்றார்கள். விவசாயம் ஆண்டு முழுவதிலும் நடை பெறுவதில்லை. மற்றக் காலங்களில் அவர்கள், எத் தொழிலும் செய்யாது, சோம்பேறிகளாகக் காலம் கழிக்கின்றனர். அக் காலங்களில், அவர்கள் வேலை செய்து பொருள் ஈட்டக்கூடிய குடிசைத் தொழில்களையும், சிறு தொழில்களையும் ஏற்படுத்தி, அவர்கள் பொருளாதாரக் குறைவை நீக்குதல் அவசியமாகும். உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருள் களைக் கொண்டு, அவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவு, உடை, விவசாயக் கருவிகள் முதலிய வற்றைத் தாங்களே தயாரித்துக் கொள்ள வசதி அளித்தல் வேண்டும்.

மறைந்துபோன குடிசைத் தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலமாகவே, இந்தியக் கிராமங் களின் பொருளாதார நிலையைச் சீர்திருத்தி அமைக்க முடியும். அன்னிய ஆட்சியில் இத் தொழில்கள் அழி வுற்றன. சுதந்திர அரசாங்கம், இதனை நன்குணர்ந்து, இத் தொழில்களுக்கு உயிர் அளிக்க முன்வந்துள் ளது. குடிசைத் தொழில்களில் உற்பத்தி செய்யப் படும் பொருள்களுக்கு விற்பனை வசதி செய்து, பெரிய தொழில்களின் போட்டியினின்றும் பாதுகாத்து, அத் தொழில்களை வளர்ப்பதற்கான திட்டங்களை மத்திய அரசாங்கம் வகுத்துள்ளது. இதற்கென ராஜ்ய சர்க்

கார்களின் பிரதிநிதிகளும், குடிசைத் தொழில்களின் பிரதிநிதிகளும் அடங்கிய 'குடிசைத் தொழிற் குழு' ஒன்றை மத்திய சர்க்கார் ஏற்படுத்தி இருக்கின்றனர். இக் குழுவினர், குடிசைத் தொழில்களை ஏற்படுத்துவது, அவற்றை வளர்ப்பது போன்ற காரியங்களையும், இத் தொழில்களைப் பெரிய தொழில்களுடன் இணைத்து நடத்தும் முறையையும் பற்றி அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க வேண்டும்; மேலும், குடிசைத் தொழில்களின்மூலம் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதற்குரிய வழிகளையும், அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டும். இந்தக் குழுவின் ஆலோசனைகளை அமுலுக்குக் கொண்டு வருவது அரசாங்கத்தின் கடமை யாகும்.

குடிசைத் தொழிற் பொருள்களை விற்பனை செய்வதற்கு 'மத்தியக் குடிசைத் தொழில் விற்பனை நிலையம்' ஒன்று அமைக்கப்பட் டிருக்கிறது. புது டில்லியிலுள்ள வெளிநாட்டுக் காரியாலயங்களைச் சேர்ந்தவர்கள் பலரும், அங்கு வந்து பலவகைப் பொருள்களைப் பார்வையிடுகின்றனர். பின்னும், வெளிநாட்டினர் பலரும் அங்கு அழைக்கப்படுகின்றனர். ஆதலால், குடிசைத் தொழிற் பொருள்கள் வெளிநாடுகளில் விளம்பரம் செய்யப்படுகின்றன. மேலும், குடிசைத் தொழிற் பொருள்களை, சில விமான நிலையங்களிலும், 'க்வீன் மேரி' கப்பலிலும் வெளிநாட்டு ஸ்தானிகர் காரியாலயங்களிலும் காட்சிக்கு வைத்து விளம்பரம் செய்கின்றனர். இப்பொழுது, ஒரு லட்ச ரூபாய் நிதியுடன் அமைக்கப்பட்ட குழு ஒன்று, இந்தியக் குடிசைத் தொழிலால்

செய்யப்படும் பொருள்களைக் கொள்முதல் செய்து, அமெரிக்காவில் விற்பனை செய்து வருகின்றது.

அரசாங்கம், குடிசைத் தொழில் வளர்ச்சிக்காக அரிய செயல்கள் பல செய்து வருகின்றது; தொழில் நுட்பத் தலைவர்கள் பலரை ஏற்படுத்தி யுள்ளது; ஜப்பானியக் குடிசைத் தொழில் முறைகளை நேரில் அறிந்து வருவதற்கும், சிறு இயந்திரங்கள் வாங்கு வதற்குமாகத் தூதுக் குழு ஒன்றை ஜப்பானுக்கு அனுப்பி யுள்ளது; இன்னும், குடிசைத் தொழில் வளர்ச்சியைக் கருதி, அலிகாருக்கு அருகில் 'ஹார் துவாகஞ்ச்' என்ற இடத்தில் 'மத்தியப் பயிற்சி ஆராய்ச்சிக் கழகம்' ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்துவருகின்றது.

அரசாங்கம், இம்முறையில் குடிசைத் தொழி லுக்குப் புத்துயிர் அளிப்பதோடு, நிதி யுதவவும் முன்வந்துள்ளது. கைத்தறித் தொழிலுக்கு மட்டும் ஒரு கோடி ரூபாய் நிதி ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டம் உருவாகி இருக்கிறது. சென்ற வருடம் பத்து லட்சம் ரூபாயில் கைத்தறித் தொழில் வளர்ச்சி நிதி யொன்று ஏற்படுத்தப்பட்டது. இதைத் தவிர, மற்றைக் குடிசைத் தொழில்களுக்காக மத்திய சர்க்கார் பதினாறு லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கின் றார்கள். இன்னும் குடிசைத் தொழில்களுக்கு வேண் டிய மூலப்பொருள்களை விவசாய இலாகா உதவி வரு கின்றது. போபால், குடகு, மத்தியப் பிரதேசம், கட்ச், மணிபுரி, திரிபுரா, பிலாஸ்பூர், அஜ்மீர், டில்லி முதலிய இடங்களில் தொழில் ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவின் சிபாரிசு

களின் பேரில், அரசாங்கம், தொழில் வளர்ச்சி கருதி, அவற்றிற்குக் கடனும் அளிக்க முன்வந்துள்ளது.

சுதந்திர இந்திய அரசாங்கம் குடிசைத் தொழில்களுக்குப் புத்துயிரளிக்கத் திட்டம் வகுத்து முயன்று வருவது பாராட்டத் தக்கதாகும். அரசாங்கத்தின் இம் முயற்சியால், நாட்டில் தொழில்வளம் பெருகிச் செல்வ நிலை உயர்வதோடு, சுதந்திர இந்தியா செழித்துத் தழைத்து வளரும் என்பதும் உறுதி.

அரும்பொருள் :— ஈட்டக்கூடிய - தேடக்கூடிய. உற்பத்தி - விளைவு. போட்டி - எதிர்ப்பு. திட்டம் - அமைப்பு.

வினாக்கள்

1. முன்னாளில் கிராம மக்கள் அமைதியாக வாழ்க் காரணம் என்னி?

2. கிராம மக்களுக்குக் குடிசைத் தொழில் அவசியம். ஏன்?

3. குடிசைத் தொழிற் பொருள்கள் எவ்வாறு விளம்பரம் செய்யப்படுகின்றன?

பயிற்சி

குடிசைத் தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் செய்துள்ள உதவிகளைத் தொகுத்து எழுதுக.

இலக்கணம்

1. நட, வா, உண் - இவ் வினைப் பகுதிகளில் முக்கால இடை நிலைகளையும் சேர்த்து எழுதுக.

2. உடன்பாடு எதிர்மறைகளுக்கு உதாரணம் தருக.

கட்டுரை

குடிசைத் தொழிலின் இன்றியமையாமையை விளக்கி உன் தோழனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

17. நமது சுதந்திரக் கொடி

[மு. சங்கரலிங்கம்]

ஒரு நாட்டின் கொடி, அந் நாட்டு ஆட்சியின் குறிக்கோள்களையும், அந் நாட்டு மக்களின் பண்பாட்டையும் எடுத்துரைக்கும் அறிகுறி யாகும். நம் பண்டைத் தமிழ் நாட்டில், ஆட்சிச் சின்னங்களாகிய கொடி, முடி, கோல் ஆகிய மூன்றிலும் கொடியே முதன்மை பெற்று விளங்கியது. நாட்டில் அமைதி நிலவிய காலத்திலும், போர் நடந்த காலத்திலும் மக்கள், அந் நாட்டுக் கொடியைப் போற்றிப் பணிந்து வந்தார்கள். நாட்டுக் கொடி தங்கு தடையின்றிப் பறந்து நிற்பதுதான், அந் நாட்டின் சுதந்திரத் தன்மையை உணர்த்திவந்தது.

வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள், அன்று ஆண்டுவந்த மன்னர்களின் ஒற்றுமை யின்மை, பொறாமை முதலியவைகளைப் பயன்படுத்தி, இந் நாட்டையே தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டார்கள். விக்டோரியா மகாராணியாரின் பிரகடனத்தோடு, இங்கிலாந்தின் கொடியாகிய 'யூனியன் ஜாக் கொடி' நம் நாட்டுக் கொடியாகத் திணிக்கப்பட்டது; வெள்ளைய ராட்சியை வெளியேற்றி, நம் நாட்டைச் சுதந்திர நாடாக்க வேண்டும் என்ற எண்ணம் நம்மவரிடையே எழுந்ததன் காரணமாக, காங்கிரசு மகா சபை தோன்றியது. காந்தியடிகள், அச் சபைக்குத் தலைமை தாங்கியபொழுது ஆரஞ்சு, வெள்ளை, பச்சை நிறங்க ளடங்கிய மூந்நிறக் கொடியைக் காங்கிரஸ் இயக்கத்தின் கொடியாக மாற்றினர். வெள்ளை

நிறத்தில் ராட்டின உருவம் பொறிக்கப்பட்டது. 'வெள்ளைய ராட்சி வெளியேற வேண்டும்; ஆடிப் பறக்கும் யூனியன் ஜாக் கொடி இறக்கப்பட்டு, அங்கெல்லாம் மூவர்ணக்கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும்' என்பது காங்கிரசின் முக்கியக் கொள்கையாக இருந்தது. இக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் பல போராட்டங்கள் நடைபெற்றன.

நாகபுரியில் நடந்த கொடிப் போராட்டம் குறிப்பிடத் தகுந்தது. நமது தாய்நாட்டுக் கொடிக்கு ஏற்பட்ட தடையை நீக்குவதற்காக, அந்தப் போராட்டம் நடைபெற்றது. பல தொண்டர்கள் தமது இன்னுயிரை ஈந்து நமது கொடியின் புகழைக் காத்தனர். "கையிலிருக்கும் மூந்நிறக் கொடியைத் தந்துவிடு; இல்லையேல் உன் உயிர் குண்டாந்தடிக்கு இரையாக்கப் படும்" என்று கூறியவிடத்து, தன் இன்னுயிரை ஈந்து கரத்திலேந்திய கொடியின் மானத்தைக் காத்தான் திருப்பூர்க் குமரன் என்னும் வீர வாலிபன். இவனைப் போன்ற எண்ணிறந்த வாலிபர்களது பணியாலும், தாய்மார்களின் தீர மிக்க செயல்களாலும், அண்ணல் காந்தியடிகளின் அரும் பெரும் உழைப்பாலும் நமது கொடி வானுற ஓங்கிப் பட்டொளி வீசிப் பறக்கின்றது. தடையிட்ட வைசிராயே நமது கொடிக்குத் தலைவணங்கிச் சென்ற காட்சி, நமது வெற்றியின் பெருமையைப் பாரறியச் செய்தது.

நமது கொடியி லமைந்துள்ள ஆரஞ்சு, வெள்ளை, பச்சை என்னும் மூன்று நிறங்களும் உயர்ந்த உண்மைகளை வலியுறுத்துகின்றன. ஆரஞ்சு நிறம், நமக்குள்ள

பலத்தையும், நாம் செய்த உயிர்த் தொண்டையும் குறிக்கின்றது. வெள்ளை நிறம், நாம் கடைப்பிடிக்க வேண்டிய சத்தியத்தையும், நாம் கைக்கொள்ள வேண்டிய அமைதியையும் குறிக்கின்றது. பச்சை நிறம் நம்பிக்கைக்கும், ஆற்றலுக்கும் அடையாளம்.

நாடு சுதந்திரம் அடைந்ததும், மூவர்ணக் கொடியில் முன்பு பொறிக்கப்பட்டிருந்த ராட்டைச் சின்னத்தை மாற்றி, அந்த இடத்தில் அசோக சக்கரத்தைப் பொறித்திருக்கிறார்கள். இதன் காரணத்தை அறிய நீங்கள் அவாவுறலாம். சாதாரணமாக, கொடியின் ஒரு புறத்தைப் போலவே மறுபுறமும் அமைய வேண்டும். ஆனால், ராட்டைச் சின்னத்தில் ஒரு புறம் சக்கரமும், மறுபுறம் கதிரும் இருந்தன. ஆகவே அதை மாற்றி இருபுறமும் அசோக சக்கரத்தைப் பொறிப்பதெனை முடிவு செய்யப்பட்டது. ஒரு நாட்டுக் கொடியில் பொறிக்கப்பட் டிருக்கும் சின்னத்தைப் பற்றி எவ்விதக் கருத்து வேற்றுமையும் இருக்கக் கூடாது. ராட்டையைப் பொறுத்த வரையில், கருத்து வேற்றுமை இருந்தது. ஆனால், அசோக சக்கரத்தைப் பொறுத்த வரையில், எவருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது. மேலும், அசோக சக்கரம், இந்தியாவின் பழம் பெருமையை எடுத்துக் காட்டுவதோடு, அமைதியின் சின்னமாகவும் விளங்குகிறது. அன்றியும், அது தருமச் சக்கரமு மாகும். ராட்டையிலுள்ள சக்கரத்தைவிடத் தருமச் சக்கரமே சாலவும் சிறந்தது என்று கருதி அது மாற்றப் பட்டது.

பிற நாட்டுக் கொடிகளை விட, நமது தேசியக் கொடிக்குச் சமாதானச் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நமது கொடியைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு, நம் ஒவ்வொருவரையும் சாரும். 'எங்கள் தாய்த் திருநாட்டின் தவமணிக் கொடிக்கு இன்னல் செய்ய எவர் நினைத்தாலும், இன்னுயிர் ஈந்தும் இடர்களைவோம்' என்று நாம் ஒவ்வொருவரும் சபதம் செய்துகொள்வோம்.

அரும்பொருள்:— பண்பாடு - நாகரிகம். சின்னம் - அறிகுறி. அண்ணல் - பெரியார். வைசிராய் - பிரதிநிதி. வலியுறுத்துகின்றன - உறுதிப்படுத்துகின்றன. பொறிக்க - வரைய, எழுத. அசோக சக்கரம் - அசோக மன்னன் ஏற்படுத்திய சக்கரம். சபதம் - உறுதி, சூளுறவு.

வினாக்கள்

1. முந்நிறங்களின் கருத்தை விளக்குக.
2. முன்பு பொறிக்கப்பட்டிருந்த கைராட்டையை நீக்கி, அசோக சக்கரத்தைப் பொறிக்கக் காரணம் என்ன?
3. நமது கொடியின் தனிச்சிறப்பு யாது?

பயிற்சி

தகுந்த சொற்களைச் சேர்த்து முடிக்க:

ஒரு நாட்டுக் கொடியில் ——— இருக்கும் ——— பற்றி எவ்விதக் கருத்து ——— ——— கூடாது.

அசோக சக்கரம், ——— பழம் பெருமையை எடுத்துக் காட்டுவதோடு, ——— ——— ———.

இலக்கணம்

தன்வினை தருக:

இறக்கினான், ஏட்டிய, பறப்பித்தனர், அமைத்து.

கட்டுரை

நமது சுதந்திரக் கொடியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

18. பயிற்சி (மௌன வாசிப்பு)

1. குணங்களை அறிந்து கூறுக:-கன்னன் தன்னிடம் வந்து யார் எதைக் கேட்டாலும் தடையின்றிக் கொடுத்துவிடுவான்; தன் உயிரைக் காக்கக்கூடிய கவசங்களையும் குண்டலங்களையும் இந்திரனுக்குக் கொடுத்தான்; தன் தாய் வந்து வேண்டியும், 'என்னைக் காப்பாற்றிய துரியோதனனை விட்டு வரமுடியாது' என்று சொல்லி அவன் பொருட்டு உயிர் விட்டான்.

ஈகை, செய்ந்நன்றியறிவு, தியாகம்,
நட்பு, அன்பு, இரக்கம்.

2. பின்வரும் வாக்கியங்களை முறைப்படுத்திக் கதையைச் சொல்க:

பொறாமையால் கரிகாற்சோழனின் தாயத்தார் அவனைச் சிறைப்படுத்தித் தீயும் வைத்தனர். பிறகு அரசுரிமையைக் கைக்கொண்டனன். இளஞ்சிங்கமாகிய கரிகாலன் சிறையினின்றும் தப்பிச் சென்றான்; நடுநிலை தவறாது நீதி செலுத்திப் பல நன்மைகளைச் செய்தான்; கால்கரிந்து போனமையால் கரிகாலன் என்று பெயர் பெற்றான். இரும்பிடர்த் தலையார் அவன் வெளிவருவதற்குத் துணைசெய்தார். அவன் பகைவரைப் போரில் வென்றான். சிறையிலிருந்து தப்பிய பொழுது கால் கரிந்து போயிற்று. சந்தேகம் கொண்ட இரண்டு கிழவர்களுடைய வழக்கை விசாரித்து நீதி வழங்கினான். அவன் நீதி வழங்குவதில் நிகரற்றவன்.

இக் கதைக்குப் பொருத்தமான பெயர் இடுக.

கரிகாலன் தான்பட்ட துன்பத்தைத் தானே சொல்வது போல் எழுதுக.

19. கூட்டுறவுச் சங்கம்

ஒரு நாட்டின் முன்னேற்றம், அந் நாட்டின் பொருளாதார நிலையைப் பொறுத்து அமைகிறது. நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நல்ல முறையில் உண்டு, உடுத்து, மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்பதே ஒரு நாட்டின் இலட்சியமாகும். அதற்கு ஒவ்வொருவருக்கும் போதுமான வருவாய் இருத்தல் வேண்டும். எல்லோரும் அத்தகைய வருவாய் உடைய வர்களாய் இருப்பதில்லை. சிலர், வருவாயிலும் செலவு அதிக முடையவர்களாய்க் காணப்படுகின்றார்கள். அவர்கள் கடன் தொல்லையால் அல்லற் படுவார்கள். கடன்பட்டார் கொள்ளும் கலக்கம் கடலினும் பெரிதன்றோ! அவர்கள் மானமழிந்து, மதி கெட்டுக் கதி கலங்குவார்கள். அவர்களுக்கு வாழ்க்கைச் செல விற்கும், தொழில்களைத் திறம்பட நடத்துவதற்கும் மேலும் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந் நிலையில் கடன் கொடுப்பவர்களோ, உதவி புரியும் எண்ணம் சிறிதும் இல்லாதவர்களாய், வட்டி வாங்கும் பேராசையால், அளவுக் கதிகமான வட்டி விதித்துக் கடன் கொடுத்து, அவர்களை ஓட்டாண்டிக ளாக்கி விடுகின்றார்கள். இவ்வாறு கடன்பட்டுத் தம் விளை நிலங்களையும் விற்றுக் கொடுத்துக் கெட்ட வர்கள் எண்ணிலடங்கார். பொதுவாக இந்திய நாடு விவசாய நாடு. ஆதலால், விவசாயிகளிற் பெரும் பாலோர் கடன் பளுவைத் தாங்க முடியாது அல்லலுறுவதை இன்றுங் காண்கின்றோம். இந்த ஏழை விவசாயிகளுக்கு உதவி, அவர்களைக் கைதூக்கி விடுவ தற்குப் பெருந்துணையாவது, கூட்டுறவுச் சங்கமாகும்.

கூட்டுறவுச் சங்கம் என்பது நல்லெண்ணமும் ஒற்றுமையும், ஒழுங்கும் உடையவர்கள் தாங்களாகவே விரும்பிப் பொருளாதார முறையில், ஒன்றுகூடி உறவுகொண்டு, காரியங்களை நடத்துவதற்கு ஏற்பட்டதாகும். இதில் சேர்கின்றவர்கள், தங்களிடமுள்ள சிறுதொகையை ஒரு நிதியாகச் சேர்த்துக் குறைந்த வட்டிக்குக் கொடுக்கல் வாங்கல் செய்து, பெருஞ் செல்வர்களைப்போன்ற செல்வாக்குடன் லாபத்தையும் சௌகரியத்தையும் அடையலாம். இதில் உறுப்பினர்களாகின்றவர்களுக்கிடையில் ஒற்றுமை யுணர்ச்சி நிலவும்; எவ்வித வேற்றுமை உணர்ச்சியும் இராது.

இச் சங்கம் முதலில் ஜெர்மனி நாட்டில் தோன்றியது. அக் காலத்தில் ஜெர்மனி நமது இந்திய நாட்டைப்போல் விவசாய நாடாக இருந்தது. அங்கு உழவர்கள் போதிய வருவாய் இன்றி வருந்தினார்கள்; தொழிலை நம்பிக் கடன்பட்டார்கள்; அறுவடைக் காலங்களில் விளைந்த தானியங்களை வட்டிக்காகக் கொடுத்துவிட்டு, அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழி இன்றி வாடினார்கள். அவர்களின் நிலைக்கு இரங்கினார், அந் நாட்டுப் பெருஞ் செல்வரான **ரெய்பீசன்** என்பார். ஏழை மக்கள் கடன்பட்டுக் கலங்குவதைக் கண்டு அவர்கள் கவலையை நீக்குவதற்கு வழிகாண முயன்றார் அவர். அம் முயற்சியின் பலனாகத் தமது கிராமத்தில், குடியானவர்களை எல்லாம் ஒன்றுசேர்த்து, 1848-ஆம் ஆண்டு, ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தினார். அச் சங்கத்திற்குக் குறைந்த வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்குவதற்

கான சில ஏற்பாடுகளையும் அவர் செய்து உதவினார். அதனால் குடியானவர்களின் கடன்சுமை குறைந்தது. அவர்கள் செல்வ நிலை உயர்ந்தது. அவர்களிடம் சிக்கனமும், உழைப்பும் மிகுந்தன. இச் சங்கம் கொடுக்கல் வாங்கலோடு மட்டும் நிற்கவில்லை. அதனைச் சார்ந்து கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவுக் கைத்தொழிற்சாலை, கூட்டுறவுக் கல்விச்சாலை முதலியவைகளும் தோன்றின. அவை வாழ்க்கையில் பல துறைகளிலும் மக்கள் நன்மை அடைய உதவின. இதனால், அந் நாடு ஒற்றுமை, ஒருமை, பொருளாதாரம், கைத்தொழில், கல்வி முதலியவற்றில் சிறந்து விளங்கிற்று.

கூட்டுறவுச் சங்கத்தால் ஜெர்மனி அடைந்த நன்மைகளைக் கண்ட பிற நாட்டினர் தங்கள் நாடுகளிலும் இச் சங்கத்தை ஏற்படுத்த முன்வந்தனர். ஐரோப்பாவில் டென்மார்க் என்னும் ஒரு சிறிய நாடு உண்டு. அது வறுமை மிக்க நாடாக இருந்தது. அந் நாட்டினர் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் கூட்டுறவு முறையில் பயிர்த் தொழில் செய்தல், ஆடு, மாடு, கோழி முதலியவைகளை வளர்த்தல், அவற்றின் பால், இறைச்சி, முட்டை முதலியவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புதல் முதலிய பல முறைகளை மேற்கொண்டு உழைத்தனர். அதனால், நாட்டின் செல்வ நிலை உயர்ந்தது. ஒரு காலத்தில் மிகவும் எளிய நிலையில் இருந்த அந் நாட்டினர், இன்று தங்கட்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கூட்டுறவு முறையில் பெற்றுப் பெரும் லாப மடைந்துவருகின்றனர். அந் நாட்டு

மாணவர்கட்கும் கூட்டுறவுச் சங்கத்தை நடத்துவதற்குரிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. கூட்டுறவுச் சங்கத்தால் ஒரு நாடு உயர்நிலை அடையும் என்ற உண்மையை, டென்மார்க் தேசம் உலகிற்கு விளக்கிக் காட்டியுள்ளது.

இச் சங்கத்தால் விளையும் நன்மைகளைக் கண்ட நமது அரசியலார், 1904-ஆம் ஆண்டில் இச் சங்கங்களை நிறுவுவதற்கு ஒரு சட்டத்தை ஏற்படுத்தினர்கள்; சங்க முறைகளை மக்களுக்குத் தெரிவிப்பதற்குப் பல அதிகாரிகளை நியமித்தார்கள். இதனல், நமது நாட்டிலுள்ள கிராமங்களிலும் நகரங்களிலுமாக ஆயிரக் கணக்கான சங்கங்கள் தோன்றின. நமது நாட்டைப் பொறுத்த வரையில், விவசாயிகளின் கடன்பளுவைக் குறைப்பதற்கென்று, இச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆகையாற்றான், நம் தேசத்தில் இச் சங்கங்கள், கடன் கொடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நடைபெறுகின்றன. இச் சங்கத்தில், தங்கள் கூட்டுறவு மூலம் பெருந்தொகை கடன் வாங்கவும், அதனல் தங்கள் கடனைத் தீர்த்து விவசாயத்தைப் பெருக்கவும் வழி ஏற்பட்டது. இச் சங்கத்தை ஐக்கிய நாணயச் சங்கம் என்றும் கூறுவதுண்டு.

இச் சங்கத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. அவை ஒவ்வொரு தேசத்தில், ஒவ்வொரு முறையில் தொண்டாற்றுகின்றன. இங்கிலாந்தில் இச் சங்கம் சாமான்களை மொத்தமாக வாங்கி உறுப்பினர்களுக்கு விற்று வருகிறது; இதனைக் கூட்டுறவு வாணிபச் சங்கம் என்று கூறலாம். இம் மாதிரியான

சங்கங்கள், நமது நாட்டிலும் பல இடங்களில் ஏற்பட்டுள்ளன. இத்தாலி தேசத்தில் தொழிலாளிகள், கூட்டுறவு முறையில் ஒன்றுகூடிப் பெரிய வேலைகளைக் 'கண்டிராக்டு' எடுத்து முடித்து, லாபத்தைப் பங்கிட்டுக்கொள்கிறார்கள்.

இச் சங்கத்தை நமது ஊரில் ஏற்படுத்தவேண்டுமானால், நமது எண்ணத்தைக் கூட்டுறவுச் சங்க அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். அதன்பின், தலைவர் ஒருவர் வந்து, அச் சங்கத்தால் ஏற்படும் நன்மைகளையும், அமைக்கவேண்டிய முறையையும் விளக்கிக் கூறுவார். பின் அதில் சேர விரும்புகின்றவர்கள் கையெழுத்திட்டுத் தலைவருக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். குறைந்தது பத்து உறுப்பினர்களாவது சேரவேண்டும். பின்னர், சங்கம் ஏற்படுத்தப்படும். இச் சங்கத்தில் உறுப்பினராவதற்கு ஒழுக்கமும், வாக்குறுதியும் வேண்டும். பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரும் இதன் உறுப்பின ராகலாம்.

நாட்டிற்குப் பலவகையிலும் நன்மை செய்யும் இச் சங்கங்கள் இன்னும் பலவாகப் பெருகுதல் வேண்டும். உழவர்களுக்கு வேண்டிய விதை, எரு, உழுதொழிற் கருவிகள் முதலியவற்றை மலிவான விலைக்கு வாங்கி, குறைந்த இலாபத்தில் கொடுத்து உதவும் சங்கங்கள், கிராமங்கள்தோறும் தோன்றுதல் வேண்டும். கூட்டுறவு முறையில் பாற் பண்ணை முதலியனவும் தோன்றுதல் வேண்டும். இன்னும், நகரங்களி லுள்ள தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் உதவுகின்ற முறையிலும் கூட்டுறவுச்

சங்கங்கள் தோன்றுதல் வேண்டும். அப்பொழுது தான், இந்திய நாடு இணையற்ற நாடாக விளங்கும்.

அரும்பொருள் :— வருவாய் - வருமானம். பளு - சுமை. நிறுவுதல் - ஏற்படுத்தல்.

வினாக்கள்

1. ஒரு நாட்டின் இலட்சியம் யாது?
2. கடன் படுவதனால் வரும் தீமைகள் யாவை?
3. கூட்டுறவுச் சங்கம் முதன் முதல் யாரால், எங்கு, எதற்காக ஏற்படுத்தப்பட்டது?
4. இச் சங்கத்தால் டென்மார்க் நாட்டினர் எவ்வாறு பயனடைந்தனர்?
5. இச் சங்கம் நமது நாட்டில் எப்பொழுது ஏற்படுத் தப் பட்டது? இதனால் நம் நாடடைந்த நன்மைகள் யாவை?

பயிற்சி

வாக்கியங்களில் அமைத் தெழுதுக :-

வருவாய், இலட்சியம், கொடுக்கல் வாங்கல், நிறுவினர்.

இலக்கணம்

நிலைமொழியின் இறுதியில் நிற்கும் குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால், அக் குற்றியலுகரம் கெடும். சில முற்றியலுகரங்களும் அவ்வாறே உயிர் வரின் கெடும்.

கொள்வது + இல்லை = கொள்வதில்லை

அளவு + இட்டு = அளவிட்டு

நிலைமொழியின் இறுதியில் நிற்கும் மெய்யின் முன், வருமொழி முதலில் உயிர் வருமாயின், வந்தவுயிர் நின்ற மெய்யின் மேல் ஏறி, உயிர் மெய்யாகும்.

உடல் + அழகு = உடலழகு

கட்டுரை

கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி ஒருகட்டுரை வரைக.

20. குரு குதிரைமேலிருந்து விழுந்தது

[வீரமாமுனிவர்]

(இக் கதையை மௌனமாக வாசிக்கவும்)

எச்சரிக்கையோடு பலவூர்களுக்குப் போய்வந்தால் கையிற் பணம் கிடைக்குமே யொழிய, மடத்திலிருந்தால் அது கிடையாதென்று கருதி ஊரூராய்ச் சுற்றி வரக் குருவும் சீடர்களும் புறப்பட்டார்கள்.

எங்கும் போய்ச் சுற்றிக்கொண்டு ஒரு நாள் அவர்கள் மடத்துக்குத் திரும்பி வருகையில், குரு அசைந்தசைந்து குதிரைமேல் ஊசலாடிக்கொண்டு வரும்பொழுது, கீழே தொங்கின ஒரு மரக்கொம்பு பட, அவர் தலைப்பாகை பின்பக்கத்தில் விழுந்தது. அதைச் சீடர்கள் எடுத்தார்களென் றெண்ணிக் கொண்டு, ஒன்றும் பேசாமல் சும்மா வெகுதூரம்

சென்ற பின்பு அவர் "தலைப்பாகை எங்கே? தாருங்கள்" என்று கேட்டார். "அஃது அங்கே விழுந்த விடத்திலே கிடக்கும்" என்று அவர்கள் சொல்ல, அவர் கோபித்துக் கொண்டு, "விழுந்த வெல்லாம் எடுக்கத் தேவை யில்லையோ? நான் சொல்ல வேண்டுமோ?" என்றார். அந்த மட்டில் மடையன், அப்படியே அங்கே ஓடிப்போய் விழுந்த பாகையை எடுத்துக்கொண்டு வருகையில், அதற்குமுன் பெய்த மழையில் செழிப்பாய் வளர்ந்திருந்த புல்லை மேய்ந்து அன்றிராத்திரி குதிரை கழித்த இளகலாகிய லத்தியை அந்தத் தலைப்பாகையில் ஏந்திக்கொண்டு வந்து, பக்தியுடனே குருவின் கையில் ஒப்புவித்தான்.

அப்போது அவர், "சீ சீ" என்று வெகுவாய்க் கோபித்தார். அதற்கு எல்லாருங் கூடி, "இஃதேதையா! விழுகிறவை எல்லாவற்றையும் எடுக்கச் சொல்லி முன் கற்பித்தீ ரல்லவா? குருவார்த்தை கடக்கலாகாதென்று கற்பித்தபடி செய்தால், இப்பொழுது நீர் வருத்தப்படுவா னேன்?" என்றார்கள். குருவோ "அப்படியன்றே, எடுக்கத் தகுவதும், எடுக்கத் தகாதது முண்டு; எதையும் பகுத்தறிந்து செய்ய வேண்டும்" என்றார். "நாங்கள் அம்மாத்திரத்திற்குத் தக்க மனுஷரல்லேம்; எடுக்க வேண்டியதை மாத்திரம் இன்ன தென்பதாக வேறே எழுதித் தரவேண்டும்" என்று அவர்கள் கேட்டார்கள். அவரும் எழுதிக் கொடுத்தார்.

அப்புறம் போகையில், ஈரமாயிருந்த வழுக்கு நிலத்தில், தளர்ந்த நடையாய்ப் போகிற நொண்டிக் காற் குதிரை சறுக்கி விழுந்தது. அத் தருணத்தில்

அதன்மேலிருந்த குருவும், தவறி, அருகே யிருந்த குழியில் தலை கீழும், கால் மேலுமாக விழுந்து, ஒரு கால் அங்க படியில் மாட்டிக் கொண்டு எழுந்திருக்கக் கூடாமல் கோவென் றலறி, "அன்பான சீடர்களே! என்னை எடுக்க வாருங்கள்" என்று கூப்பிட்டார். சீடரும், சரேலென்று ஓடிவந்து, குரு முன்னே எழு தித் தந்த ஜாபிதாவை யெடுத்து, ஒருவனை வாசிக்கச் சொன்னார்கள். அதிலே "விழுந்த தலைப்பாகை எடுக்கவும், விழுந்த வேஷ்டி உத்திரிய மெடுக்கவும், விழுந்த சட்டை, குட்டை, உள்ளாடைகளை எடுக்கவும் வேண்டும்" என்று அவன் வாசித்தபடியே ஒவ் வொன்றாய் எல்லாவற்றையும் குருவிடத்தி லிருந்து கழற்றி எடுத்து அப்புறம் வைக்க, குருமாத்திரம் நிரு வாணமாய் அங்கே கிடந்தார்.

அவரிப்படிக் குழியிற் கிடந்து தம்மையும் எடுக்கச் சொல்லி எவ்வளவு கெஞ்சினாலும், எவ்வளவு சலித்துக் கொண்டாலும், எவ்வளவு கடுஞ்சொற் சொன்னாலும் சீடர்கள் "இதுவும் முன்னமேதானே ஜாபிதாவில் எழுதாததனாலே நாங்கள் எடுக்க மாட் டோம்" என்று ஒரே பிடிவாதமாக நின்றார்கள். மேலும் அவர்கள், "ஐயா, குரு சிகாமணியே! எடுக்கவில்லை என்று வீணாய் எங்கள்மேல் கோபிக் கிறீரே; நல்லது, உம்மையும் எடுக்கும்படி எழுதின தெங்கே? காட்டும் பார்ப்போம். எழுதினபடி செய் வோமே ஒழிய, எழுதாததை, அப்படித் 'தடிக்கு மிஞ்சின மிடா' வைப்போல வரம்பு கடந்து ஒரு போதும் செய்ய உடன்பட மாட்டோம்" என்றார்கள். அவரும் இவர்கள் சாதனையைக் கண்டு தப்பும் வழி

வேறொன்றும் காணுமையால், ஓலையும் எழுத்தாணி யும் வாங்கிக் கிடந்த விடத்திலேதானே "நான் விழுந் தாலும் எடுக்கக் கடவீர்கள்" என்று கைகால் நடுங்கிக் கொண்டே எழுதிக் கொடுத்தார்.

எழுதியதைக் கண்டு எல்லாரும் ஒருமிக்கப் போய் அவரை எடுத்தார்கள்; அவர் விழுந்த குழியிற் சேறிருந்த படியால், குரு வுடம்பெல்லாஞ் சேறுபட்டு அழுக்கான தென்று சமீபத்திலிருந்த தண்ணீரிலே குளிப்பாட்டினார்கள்; பின்பு பழையபடியே உடுப் பெல்லா முடுத்திக் குதிரைமே லேற்றி மடத்துக்குக் கொண்டுபோய் விட்டார்கள்.

அரும்பொருள் :— அங்கபடி - குதிரை யங்கவடி. உத் தரியம் - மேலாடை. சலித்து - இளைத்தோய்ந்து. சேறு - தொளி.

வினாக்கள்

1. குருவும் சீடரும் பிரயாணம் செய்யக் காரணம் என்ன?

2. 'விழுந்த வெல்லாம் எடுக்க வேண்டும்' என்ற குருவின் கட்டளையை மடையன் எவ்வாறு நிறை வேற்றினான்?

3. சீடர்கள் குருவை நிருவாண மாக்கியது ஏன்?

4. சீடர்கள் குழியில் விழுந்த குருவை எடுப்பதற்கு மறுத்தது ஏன்?

5. பின் அவர்கள் குருவை எடுக்கக் காரணம் என்ன?

பயிற்சி

வாக்கியத்தில் உபயோகித்துக் காட்டுக:

பகுத்தறிந்து, சலித்து, சாதனை, சறுக்கி.

21. பத்திரிகைச் செய்தி

நோயற்ற வாழ்வு

[டாக்டர், எஸ். காந்திமதிநாத பிள்ளை அவர்கள்]

நம் மக்கள் நம் நாட்டில் நெடுங்காலமாகக் கையாண்டுவந்த வெந்நீர்ப் பழையதையும், நீர் ஆகாரத்தையும் நாம் காலை உண்டியாக வைத்துக் கொள்வது மிகவும் நல்லது. இந்த உணவில் பி. வைட்டமின் சத்து நிறைந்திருக்கிறது. நம் குழந்தைகளும், இளைஞர்களும் இவ்வுணவை உண்டு, உடல் வளர்ச்சி பெற்று மேம்படும்படி செய்ய வேண்டியது நமது இன்றியமையாத கடமையாகும். வயலில் வேலை செய்யும் பாட்டாளியும், மில்களில் வேலை செய்யும் உழைப்பாளியும் இந்த உணவை உண்டால், உழைப்பினால் ஏற்படும் களைப்பு நீங்கப்பெற்று, அதிக நேரம் வேலை செய்யும் திடமும், நல்ல ஆரோக்கியமும் அடைவார்கள்.

இதை விட்டுவிட்டுப் பலர் காப்பி, தேயிலை மயக்கத்தில் மூழ்கி, எலும்புருக்கி, சோகை முதலிய நோய்களுக்கு உள்ளாகிறார்கள். காப்பியும், தேயிலையும் உண்ட சிறிது நேரத்திற்கு ஒரு புதிய உணர்ச்சியையும், உற்சாகத்தையும் உண்டுபண்ணுகின்றன. ஆனால் அதற்குத் தக்கபடி நரம்புத் தளர்ச்சி பின்னால் ஏற்படுகிறது. காலையில் காப்பிக்குப் பதிலாகப் பால், மோர், அரிசிக் கஞ்சி, பாசிப் பயற்றுக் கஞ்சி இவற்றை இட்டிலி, தோசையுடன் உட்கொள்ளலாம். மாலையில் ஆரஞ்சு, தக்காளி, எலுமிச்சம் பழச் சாறு, நீர்மோர், முதலியவற்றை உட்கொள்வது நல்லது.

22. அசோகன் அமைதி

[தே. ப. பெருமாள்]

இடம் : போர்க்களம். பொழுது : பிற்பகல்.

உறுப்பினர் : அசோகன், படைத்தலைவன் வீரசேனன்.

அசோகன் : வீரசேனா! இது என்ன? எங்குப் பார்த்தாலும் இரத்தக் களமாக வன்றோ தோன்றுகிறது! பிணங்கள் மலை மாதிரி குவிந்து கிடக்கின்றனவே! ஆ! என்ன கொடூரக் காட்சி!

வீரசேனன் : ஆம் மன்னவ! நமது படைக் குரிய அரிய ஆற்றலின் விளக்கம் இது. அவர்கள் காட்டிய வீரம், அவர்களது உள்ள உணர்ச்சியின் வெற்றிக் குறி இது.

அசோ : இது என்ன வெற்றி? இதனால் நமக்கு மகிழ்ச்சியா?

வீர : ஏன் இல்லை, அரசே! இதற்குமுன் தமது படைகள் எத்தனையோ இடங்களில் போராடி இருக்கின்றன. ஆனால் இவ்வளவு பெரிய எதிர்ப்பை எங்கும் அவை கண்டதில்லை. இத்தகைய துன்பத்தை அவை எவ்விடத்திலும் எய்தியதில்லை. இந்தப் போரில் மலையோடு மலை முட்டியது. கடலோடு கடல் எதிர்த்தது. கலிங்கர்கள் மகா வீரர்கள்; உறுதி குலையாத உள்ளம் படைத்த தீரர்கள்; தங்கள் உயிரையும் பொருட் படுத்தாமல் போர் செய்தார்கள்.

அசோ; இதிலென்ன வியப்பிருக்கிறது? இது இயல்புதானே?

வீர: இயல்பா? வீரமும், போர்த்திறனும் கலிங்கருக்கு மட்டும்தான் சொந்தமா? தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே!

அசோ: வீரசேனு! நான் சொல்வதைக் கூர்ந்து கேள்.

வீர: என்ன?

அசோ: கலிங்கம் கலிங்கரின் தாய்நாடல்லவா? அது அவர்களின் போக பூமியல்லவா?

வீர: ஆம்.

அசோ: அவர்கள் தங்கள் தாய்நாட்டை எப்படி இழப்பார்கள்? செழிப்பு மிகுந்து, செல்வம் கொழிக்கும் தங்கள் தாய்நாட்டை எவ்விதம் துறப்பார்கள்? அது பகைவர் கையில் பாழாகப் பார்த்து நிற்பார்களா? மாட்டார்கள். தங்கள் முன்னேயோரின் உழைப்பாலும், சிந்தனையாலும் தழைத்து எழில் பெற்றதல்லவா அது? அதை அவர்கள் தங்கள் உயிரைவிட மேலாகக் கருதுவது இயற்கைதானே! ஆனால், உங்களுக்கு இவ் வுணர்ச்சி இருக்கவே இருக்காது. நீங்கள் அவர்களைவிட இதில் மிகவும் வேறுபட்டவர்கள்,

வீர: எங்களுக்கு உணர்ச்சியும், ஊக்கமும் இல்லாமலா இவ்வளவு வெற்றி கிடைத்தது?

அசோ: இதை வெற்றி என்று எண்ணுகிருய்? உண்மையில் இது நமக்கு வெற்றியில்லை. வெற்றி என்று தப்பாக எண்ணுகிருய். இந்தப் போரில் வெற்றிமாலை சூடியவர் கலிங்கரே.

வீர: அரசே! தாங்கள் பேசுவது வேடிக்கை யாக இருக்கிறதே!

அசோ: அமைதி கொள், வீரசேன! உனது ஆணவ வெறியை விட்டு, உனது பேராசையை நீக்கி, நீ இதை எண்ணிப்பார். அப்போதுதான் இதன் உண்மை உனக்கு விளங்கும்.

வீர: தாங்கள் சொல்வது எனக்குப் புரிய வில்லையே!

அசோ: நாம் நாட்டாசையால் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தோம். ஆனல், கலிங்கர்கள் தங்கள் நாட்டை இழக்கக் கூடாது என்று உறுதி கொண்டிருந்தார்கள்; இதனல், நேர்மையுடன் தங்கள் உயிர் போகும் வரை எதிர்த்தார்கள். நமது பெரும் படையை வெற்றி கொள்ள இயலாமல், போர் செய்து மடிந்தார்கள்; தங்கள் கடமையை நிறை வேற்றினார்கள். இதில் அவர்கள் வெற்றியிலும் மேலான ஒரு சிறப்பை எய்திவிட்டார்கள்.

வீர: அரசே! அப்படியானல் நமது செயல் தவறு என்றா சொல்கிறீர்கள்?

அசோ: இதி லென்ன ஐய முளது? நமது செய்கை தவறேதான். நாம் நம்மை எதிர்த்தவர் களையா எதிர்த்தோம்? இல்லையே? நாம், பேராசை என்னும் மாயவலையில் சிக்கி, அறிவிழந்து விலங்காகி விட்டோம். நேர்மை ஒழுங்கை நிலை குலையச் செய்தோம். அழகு நிரம்பிய, அரும்பயன் மிக்க, அமைதி கொண்ட, ஒரு நாட்டை அலைத் தழித்தோம்; அதைச் சுடுகா டாக்கினேம்; மக்கள் அனைவரையும் கொன்று குவித்தோம்.

வீர: பெருந்தகையே! தாங்கள் இன்று பேசுவன வெல்லாம் புதுமையாகவே தோன்றுகின்றன.

அசோ: ஆம், புதுமையாகவேதான் தோன்றும். இன்று புதுமையில் தான் அசோகன் நிற்கின்றான்.

வீர: மன்னவ! தங்கள் ஆணைப்படிதானே நாங்கள் நடந்தோம்?

அசோ: உண்மைதான்; இதில் குற்றம் புரிந்தவர்கள் நீங்கள் அல்லீர். குற்றவாளி அசோகனே; இப்போது அந்த அசோகன் இல்லவே இல்லை. இப்போதுள்ள அசோகன் வேறு. இவனது உள்ள வானம் இருண்டிருக்க வில்லை. இவனது மனக் கடலில் கொந்தளிப்பு இல்லை. இவனது அறிவை மறைத்திருந்த திரை விலகி விட்டது. இவனைத் தெளிவும் அமைதியும் அணைந்துள்ளன. இவன், ஒரு பேரொளியைக் கண்டு, அதன் வழியே செல்கின்றான். வா, போகலாம்.

(இருவரும் செல்கின்றார்கள்)

இரண்டாம் காட்சி

இடம் - அரச அவை. பொழுது: முற்பகல்.

உறுப்பினர்: அசோகன், சேனாதிபதி வீரசேனன், அமைச்சன் நிர்மலன், ஏனைய முக்கியஸ்தர்கள்.

அசோ: அமைச்சரே! கலிங்கப் போரில் மொத்தம் இறந்தோர் எத்தனை பேர்?

நிர்மலன்: அரசே! ஒரு இலட்சம் பேர்.

அசோ: இன்னும் ... ...

வீர: இதைப் பற்றி இன்னும் தெளிவான கணக்கு எடுத்து முடியவில்லை. ஆனால், நமது படையி லுள்ளவர்கள் பகைவரில் ஒரு இலட்சம் பேரைக் கொன்றிருக்கிறார்கள். இன்னும் இதைப் போல் பல மடங்கு, இந்தப் போரில் இறந்திருக்க வேண்டும்.

அசோ: அது எந்த முறையில்?

வீர: நமது படைவீரர்கள் வரும் வழியில் பலரைத் தாக்கிக் கொன்றதுண்டு.

அசோ: ஐயோ! மிகவும் கொடுமை. குற்ற மற்ற வர்களில் எத்தனை பேர் இறந்தார்களோ? கற்புடைய பெண்களும், பச்சைக் குழந்தைகளும் அநீதியாகக் கொல்லப்பட் டிருப்பார்கள். ஏன், அமைச்சரே! இந்தப் படைவீரர்களுக்கு உள்ளம் என்பதே கிடையாதா?

வீர: ஏன் கிடையாது? உள்ளம் உண்டு; உள்ளத்திலே தளராத ஊக்கமும் உறுதியும் உண்டு. ஓங்கி நிலைக்கும் உயரிய வீரம் உண்டு. இந்த உள்ளம் இல்லாவிட்டால், இத்தனை பேர்களையும் இவர்கள் எளிதில் கொன்று குவிக்க முடியுமா? உலகமே பாராட்டும் இந்த உயர்ந்த வெற்றியைத் தான் பெற்றிருக்க முடியுமா?

அசோ: இந்த வெற்றியை நீருமா புகழ்ந்து பாராட்டுகிறீர்? நல்லது, நாட்டைக் காக்கும் காவல னுக்கு நல்லறிவையும், உயர் வழியையும் காட்டவேண் டிய பொறுப்பு அமைச்சரைச் சார்ந்த தல்லவா?

வீர: ஆம், அரசே! அதற்கென்ன சந்தேகம்?

அசோ: அப்படியாகில், நீர் உமது கடமையில் தவறிவிட்டீரா?

நீர்: இல்லை, இல்லை. ஒருக்காலும் இல்லை. நிர்மலன் தனது கடமையிலிருந்து என்றும் தவறுவோன் அல்லன். அவன் தனது பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றி யுள்ளான். அதை எண்ணி அவன் உள்ளம், களிக்கடலில் துள்ளிக் குதிக்கிறது; மட்டற்ற மகிழ்ச்சியால் பெருமை எய்துகிறது.

அசோ: அப்படியானல், நிர்மலரின் அறிவு விளக்கு அணைந்திருக்க வேண்டும். நேர்மை யற்ற எண்ணப்புயல் இந்த அழிவைக் கொண்டுவந் திருக்க வேண்டும். அவரது விழிகள் ஒளியை இழந்ததால், அவர் குருட்டுப் பாதையைக் குற்றமில்லாத பாதையாய்க் கொண்டிருக்கவேண்டும்.

நீர்: இல்லவே இல்லை. நிர்மலனின் அறிவு விளக்கு அணையவில்லை. ஆனல், அது ஆக்கவழியைத் தாவிச்சென்றது. நிர்மலனது விழிகள் கண்ட ஒளி மயமான நெடுவழியிலேயே அவன் சென்றிருக்கிறான்.

அசோ: அப்படியானல் அவர் உள்ளம் இரும்பாகிவிட்டதா?

நீர்: அவன் உள்ளம் இரும்பாகவில்லை. அது உணர்ச்சி, ஊக்கம், ஆற்றல் ஆகியவற்றால் புடம் வைக்கப்பட்டுப் பொன்னாகிவிட்டது. அந்தப் பொன்னின் ஜோதி வீசிய வீச்சே, இந்த வெற்றியின் விளக்கம். விரும்பியது விரைவில் வந்திடக் காரணம்.

அசோ: நெருப்பைக் கக்கும் எரிமலை தனது செயலை எண்ணிச் சிந்தை மகிழ்வதுபோ லிருக்கிறது

உமது எண்ணம். அமைச்சரே! இனி நான் உம்மிடம் விளங்கச் சொல்லுகிறேன். நீர் என்னை ஆழம் காண முடியாத இருள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கில் கொண்டு தள்ளிவிட்டீர்.

நீர்: இல்லை, அரசே! அதில் நான் மாறுபட்ட கருத்துடையவன். சரித்திர ஏட்டில் அறிவு மிக்க அமைச்சர்கள் செய்துள்ள அரும்பணியையே நானும் செய்துள்ளேன்.

அசோ: இல்லை, இல்லவே இல்லை.

நீர்: மத்திய ஆசியாவையும், வட இந்தியாவையும் தன்னகத்தில் கொண்டிருக்கும் நமது சாம்ராஜ்யத்தை இன்னும் விரிவுடைய தாக்கத் தாங்கள் எண்ணினீர்கள். தெற்கிலும், தென் கிழக்கிலும் உள்ள நாடுகளையும் இந்தச் சாம்ராஜ்யத்தோடு சேர்க்கத் தாங்கள் திட்டமிட்டிருந்தீர்கள். அதற்காக முதலில் கலிங்கப் போரை ஆரம்பிக்க ஆணையிட்டீர்கள். இதில் நான் செய்யவேண்டியது என்ன?

அசோ: நீர்தான் சொல்லுமே.

நீர்: தங்களுக்குத் தோல்வி வராமல் வெற்றி கிடைக்க வேண்டிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதைத்தான் நான் செய்தேன்.

அசோ: நீர் செய்தது தவறு. நன்மை என்று எண்ணித் தீங்கைச் செய்தீர். அரசன் தவறான பாதையில் சென்றால், அவனைத் திருத்தும் பொறுப்பு அமைச்சரைச் சார்ந்ததல்லவா? நான் நல்லதை மறந்து நாட்டாசை கொண்டேன். அழிவுச் சமாதியில் அழகைக் காண முயன்றேன். கொலைக் காண்டத்தில் கொடியை உயர்த்த எண்ணினேன். நீர்

எனது எண்ணம் என்னும் நெருப்பிற்கு, உமது உடன்பாடு என்னும் நெய்யைச் சொரிந்தீர். எனது தீய கொள்கைக்கு உமது அறிவால் ஆக்கம் கொடுத்தீர்.

நிர் : இதை ஒப்புக் கொள்கிறேன். வேறு நான் என்ன செய்திருக்க வேண்டும் ?

அசோ : நீர் எனது நாட்டாசையை மாற்றி இருக்கவேண்டும். எனது அறிவை விளக்கப்படுத்தி இருக்கவேண்டும். உலகத்தில் சாந்தியும், சமாதான மும் நிலவ, நிர்மலரே! நீர் எனக்கு வழிகாட்டி இருக்க வேண்டாமா ?

நிர் : தங்கள் கருத்து இதுவாகில், இதில் நான் தவறியவனே.

அசோ : பாரும், அமைச்சரே! மக்களின் வாழ்வுக் காலம் மிகவும் குறுகியது. இந்தச் சிறுகாலம் முழு தும் அவர்கள் இன்பமாகவும், அமைதியாகவும் வாழ வேண்டாமா ? தமது நாட்களை அமைதியாகக் கழித்துவந்தவர்களை வீணுகப் போரில் மாட்டிவிட் டோமே! கலிங்கப் போர்க் களத்தைப் பார்த்ததும், எனது நெஞ்சம் உருகி விட்டது. விழிகள் நீரைச் சிந்தின. எனது மடமை, எனது கண் முன்னே தோன்றி, உருக்கொண்டு கூத்தாடி என்னைப் பய முறுத்தியது; பரிகசித்தது. இந்தப் போரில் இறந்த வர்களின் சந்ததிகள், எனது இந்த வெறியாட்டத் தைச் சபித்துக் கொண்டுதானே இருப்பார்கள் ? அவர்கள் தம் நெஞ்சு தகர்ந்து புலம்பித் தவித்துக் கொண்டுதானே இருப்பார்கள் ?

நிர் : ஆம், இது உண்மைதான்.

அசோ : அசோகனின் இன்றைய புதிய அரசியற் கொள்கை என்னவென்று உமக்குத் தெரியுமா ?

நிர் : தெரியாது அரசே! அது என்ன ?

அசோ : அசோகன் இனித் தனது வாழ்நாட்களில் போர் செய்வதே இல்லை. அவனைக் கண்டு இனி எந்தச் சிற்றரசரும், பேரரசரும் அஞ்ச வேண்டுவதில்லை. அவரெல்லாம் தங்கள் தங்கள் நாட்டிலுள்ள குடிமக்களுக்கு வேண்டிய நன்மைகளைச்செய்து ஆட்சி புரியலாம். எங்கும் அமைதியும் இன்பமும் நிலவ வேண்டும். இதுதான் அசோகனின் இன்றைய அரசியற் கொள்கை.

நிர் : அரசே! தங்கள் குறிக்கோள் சிறந்தது; மிகப் புனிதம் வாய்ந்தது; நிலையாத உலகில் நிலைத்த இன்பம் பெருக்குவது.

அசோ : அமைச்சரே! இதை உலகம் எங்கும் பறை சாற்றும். ஒவ்வொரு மன்னரும் இதை அறிய வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்.

நிர் : ஆகட்டும் அரசே! இதோ போய், வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன்.

(நிர்மலன் போகின்றான்)

அரும்பொருள் :— ஆற்றல் - வலிமை. உறுதி - மனத்திட்பம். புரிய - விளங்க. பெருந்தகை - உயர்ந்த குணங்களை உடையவன். மடமை - அறியாமை. பரிகசித்தது - கேலிசெய்தது.

குறிப்புரை

I. வாழ்த்து

1. கடவுள்

கதிரவன் - சூரியன். புட்கள் - பறவைகள். தரு - மரம். பொதிஅலர் - தொகுதியாகிய மலர். ஏத்தும் - துதிக்கும். அகமே - மனமே.

2. கலைமகள்

ஆய - பொருந்திய. ஏய - தகுதியான. தூய - பரிசுத்தமான. உரு - திருமேனி. பளிங்கு - படிகம். இடர் - துன்பம்.

3. குடியரசு

ஆதிபகவன் - முதற்கடவுள். அறவாழி - தருமச் சக்கரம். அந்தணன் - அழகிய அருளை உடையவன். சந்ததம் - எப்பொழுதும்.

II. நீதி

1. திருக்குறள்

1. நிலத் தியல்பால் - தான் சேர்ந்த நிலத்தின் தன்மைப் படி. அற்றாகும் - அந் நிலத்தின் தன்மைத் தாகும்.

2. கருமம் - காரியம். எண்ணி - ஆலோசித்து. துணிக - தொடங்குக. இழுக்கு - குற்றம்.

3. கட்டளைக்கல் - உரைகல். தத்தம் கருமமே - தாம் தாம் செய்யும் காரியமே.

4. நாண் - பழி பாவங்களுக்கு அஞ்சுதல். ஒப்புரவு - உதவி செய்தல். கண்ணோட்டம் - அருள்.

5. சுழன்றும் - பல தொழில்களைச் செய்து திரிந்தும். உழந்தும் - வருந்தியும்.

2. இனியவை நாற்பது

1. பிச்சைபுக்கு - பிச்சை எடுத்து. கை கொடுத்தல் - உதவுதல். சாலவும் - மிகவும். முன்னினிது - மிகவும் இனிது. ஏர் - அழகு. முறுவல் - பல். தெற்றவும் - தெளிவாக. மேலாயார்ச் சேர்வு - பெரியோருடன் சேர்க்கை.

2. வருவாய் - பொருள் வரவு வழங்கல் - கொடுத்தல். பங்கு - பக்கம். ஆகாத - சாராத. பெருவகைத்து - பெரும் பயனை உடையது. பெட்டவை - விரும்பியவை. திரிபு இன்றி - இயல்பில் வேறுபடாமல்.

3. கையிகந்து - நீக்கி. உயர்வு உள்ளி - மேன்மேலும் உயர் தலை எண்ணி. ஒளிபட - புகழுண்டாகும்படி.

4. வெளவான் - அபகரியாமல். அல்லவை - தீயவை. மாணா - மாட்சிமை யற்ற. மயரிகள் - அறிவில்லாதவர்கள். சேராத்திறம் - சேராத வழிகளை. தெரிந்து - ஆராய்ந்து.

5. தானம் - இருப்பிடம். ஊனம் - குற்றம்.

3. அறநெறிச் சாரம்

1. ஈதல் - கொடுத்தல். களைகட்டு - களைபிடுங்கி. அட்டி - இட்டு. பைங்கூழ் - பசிய பயிர். சிறுகாலை - இளமையில்.

2. வைகலும் - தினந்தோறும். சால - மிகவும். கீழ்கட்கு - கீழோருக்கு.

3. கரி - சாட்சி. குற்றேவல் - சிறு வேலை. பிடி - பெண் யானை. களிறு - ஆண் யானை.

4. இம்மை - இப் பிறப்பு. உம்மை - மறு பிறப்பு. பட்டாங்கு - உண்மை நூல். நட்டார் - சினேகிதர்.

5. தேம்படு - இனிமை பொருந்திய. ஓம்பல் - பாதுகாத்தல். களியாம் - மயக்கமாம். கடையாயார் - கீழ்ப்பட்டவர்.

4. திரிகடுகம்

1. கணக்காயர் - ஆசிரியர். பிணக்கு-வழக்கு. அவை - சபை. பாத்து - பகுத்து.

2 செரு - போர். நாடா - ஆராயாத. கோள் - கொள்கை. மாட்சி - பெருமை.

3 வியந்து - புகழ்ந்து. தருக்கல் - கர்வம் கோடல். கொன்னே - வீணாக முன்னிய - நினைத்த. வெஃகும் - விரும்பும். படை - கருவி.

4. கட்டி - வெல்லம். கைப்பு - கசப்பு.

5. பால் பற்றி - ஒருசார்பாக. தூஉயம் - தூய்மை உடையோம்.

5. ஆசாரக்கோவை

1. இன்னா - துன்பமானவைகளை. ஒப்புரவு - உதவி. நட்டல் - சிநேகித்தல்.

2. முந்தையோர் - முன்னோர்.

3. குறளை - புறங்கூறல். வெளவல் - களவு செய்தல். அழுக்காறு - பொறாமை. ஐயம் - சந்தேகம். நிரயம் - நரகம். செற்று - கோவித்து.

4. கிழக்குக்கண் - கிழக்குமுகமாக. துளங்காமை - அசையாமல். இரீஇ - இருந்து. உகாமை - சிந்தாமல்

5. கேள்வியவர் - நூற்கேள்வி உடையவர். இழியார் - இகழ்ந்து பேசார். நேர்ந்து - உடன்பட்டு. காவார் - ஒளியார். எள்ளி - ஏளனம் பண்ணி.

6. திருவேங்கட சதகம்

ஈயென - கொடு என்று சொல்ல. தந்து மகிழும் தமையன் - இராமன். தபசு புரியும் தம்பி - பரதன். மதனி - இங்குச் சீதை. வனச மலர் - தாமரைப் பூ. வாவி - குளம்.

III. கதை

யானையை வென்ற முயல்

1. துன்னரும் - நெருங்குவதற்கரிய. அடவி - காடு. தும்பி - யானை. பன்னரும் - சொல்வதற்கரிய. இறை - அரச யானை. ஒற்றர் - வேவு பார்ப்பவர்.

2. சந்திர சரசு - சுனையின் பெயர். சிலீமுகன் - முயல் அரசின் பெயர். மந்திர - சூழ்ச்சியில் வல்ல.

3. புக்கால் - புகுந்தால். இவண் - இங்கு. உபாயம் - யோசனை.

4. ஞானம் - அறிவு. நனி - மிகவும்.

5. வீறு - உணர்ச்சி.

6. குவடு - உச்சி. களிறு - ஆண்யானை.

7. திங்கள் - சந்திரன். விளம்பு - சொல்வாய்.

8. சசி - சந்திரன். சலக்கிரீடை - நீர் விளையாட்டு. முயங்கி - செய்து.

9. தண்ணுறு - குளிர்ச்சி பொருந்திய. அண்ணலார் - பெருமை பொருந்தியவர். தடுத்தி - தடுப்பாய்.

10. துங்க - பரிசுத்தமான. கோதமாய் - மனவேறு பாட்டுடன். இகலினர் - பகைத்தவர். மூதறிவு - முதிர்ந்த அறிவு. முனியார் - கோபியார்.

11. ஆவிமுடிவுறார் - இறவார்.

12. மூவர்-அயன், அரி, அரன் என்போர். முதல்வன் - முதன்மையானவன். முனைவனார் - சிவனார். தேவன் - சந்திரன்.

13. திங்களம்பகவன் - சந்திரன்; வெங்களிறு-கொடிய யானை. மீள்க - திரும்புக.

14. தந்தி - யானை. தேவு - கடவுள். குடைவது-நீராடுவது. போற்றி - பணிந்து. உய்ந்து - பிழைத்து.

15. புனல் - நீர். தடம் - இடம். புனல் தடம் - நீர் நிலை. ஒன்றிய - பொருந்திய. உடுக்கள் - நட்சத்திரங்கள். மாதர் - மனைவிமார்.

16. மதி - சந்திரன். கான் - காடு.

யானையையும், சந்திரனையும் குறிக்க வந்துள்ள சொற்களை எடுத்தெழுதுக.

IV. பல்சுவை

1. தலைக்கடை - வாயிற்புறம். கோதை - மாலை.

2 மேதினி - பூமி எண்ணார் - மதிக்கமாட்டார். நுவல் - சொல்லப்படுகிற. மால் - திருமால். மகள் - இலக்குமி. ஆலாலம் - விடம். அரன் - சிவன்.

3. வண்டமிழ் - செழுந்தமிழ். வழுதி - பாண்டியன்.

4. இரந்துண்ணி - பிச்சை எடுத்து உண்பவன். மலைநீலி - மலையில் வாழும் குறத்தி.

5. வெள்ளைக் கவி - வெளிப்படையான பொருள் உள்ள கவி, பயனற்ற கவி. காளமேகம் - இருண்ட மேகம்.

6. செஞ்சுடரோன் மைந்தன் - சூரியன் மகனாகிய சுக்கிரீவன். தென்னிலங்கை வேந்தன் - வீடணன். பஞ்சவர் - பாண்டவர். பார்த்தன் - அர்ச்சுனன்.

7. செல் - மேகம். (போவாய்). நாமம் - பெயர். அல் - இருள். விண் - ஆகாயம்.

8. பரம்பொருள் - மேலான பொருள். பண் - இசை.

9. முகில் - மேகம்.